
# புதுமைப்பித்தன்

வல்லிக்கண்ணன்



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

புதுமைப்பித்தன்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில், பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனனுக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச் சிற்பம்-கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
பட உதவி: நேஷனல் மியூஸியம், புது தில்லி.)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# புதுமைப்பித்தன்

ஆசிரியர்:

வல்லிக்கண்ணன்

சாகித்திய அக்காதெமி

Puthumaippithan-Monograph in Tamil by Vallikannan. Sahitya Akademi, New Delhi (Reprint) 1995. Rs. 15.

©சாகித்திய அக்காதெமி
முதல் பதிப்பு: 1987
இரண்டாம் பதிப்பு: 1995.
ISBN 81-7201-744-8

சாகித்திய அக்காதெமி

தலைமை அலுவலகம்
ரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை, புது தில்லி 110 001.

விற்பனை
'ஸ்வாதி மந்திர் சாலை, புது தில்லி 110 001.

'குணா பில்டிங்' 304-305, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை 600 018.

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட் ஹார்பர் சாலை, கல்கத்தா 700 053.

172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், பம்பாய் 400 014.

109, ஜே.ஸி. சாலை, பெங்களூர் 560 002.

விலை ரூ. 15

அச்சிட்டோர்: M/s உதயம் ஆப்செட்ஸ்,
சென்னை - 2

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 1. முன்னுரை | .. 7 |
| 2. வாழ்க்கை | .. 10 |
| 3. சிறுகதைகள் | .. 26 |
| 4. கட்டுரைகள் | .. 66 |
| 5. கவிதைகள் | .. 70 |
| 6. சில விவரங்கள் | - 77 |
| 7. புதுமைப்பித்தனின் செல்வாக்கு | - 82 |
| 8. புதுமைப்பித்தன் படைப்புக்கள் | - 84 |

# 1. முன்னுரை

தமிழ்ச் சிறுகதை உலகில் தனிச் சிறப்புடன் உயர்ந்து நிற்பவர் புதுமைப்பித்தன்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தற்காலத் தமிழின் மறுமலர்ச்சிக்குக் கவிதைகள் மூலம் வளம் சேர்த்தார். அவருக்குப் பின்னர் உரைநடை வாயிலாக, முக்கியமாகச் சிறுகதைகள் மூலம், தமிழ் மொழிக்கு வளமும் வனப்பும் பெருமையும் சேர்த்தவர் புதுமைப்பித்தன் ஆவார்.

புதுமைப் பித்தன் சிறுகதை எழுதத் தொடங்கிய காலம், தமிழில் தற்காலப் பாங்கான சிறுகதை தலைதூக்கி வளர ஆரம்பித்திருந்த காலம் ஆகும். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபதுகளில் தான் தமிழ்ச் சிறுகதை தற்காலப் பாங்கையும் இலக்கியத் தன்மையையும் அடையக்கூடிய பாதையில் அடி எடுத்து வைத்தது என்று சொல்ல வேண்டும்.

தீவிர தேசபக்தரும், சிறந்த இலக்கிய ரசிகரும், தமிழில் ரசனாபூர்வமான இலக்கிய விமர்சனங்கள் எழுதியவரும், படைப்பாளியுமான, வ.வே.சு. ஐயர் தான் தமிழ்ச் சிறுகதைக்கு தற்காலத் தன்மையும் இலக்கிய வடிவமும் தந்த முதல்வர் என்று கருதப்படுகிறது. அவர் எழுதிய 'மங்கையர்க்கரசியின் காதல்', 'குளத்தங்கரை அரசமரம்' போன்ற இலக்கியத்தரமான கதைகள் குறிப்பிடத் தகுந்த முன் உதாரணங்களாக விளங்கின.

அதே காலகட்டத்தில், தமிழின் முதல் மூன்று நாவலாசிரியர்களுள் ஒருவரான அ. மாதவய்யாவும் சமுதாயப் பார்வையும் சீர்திருத்தக் கருத்தும் கொண்ட சிறுகதைகள் எழுதினார்.

அவர்களுக்குப் பிறகு, 1930களில் தமிழ்ச் சிறுகதை வேகமும் வனப்பும் பெற்று வளரலாயிற்று. புதிய புதிய பத்திரிகைகள் அரசியல் பணி, சமூக சேவை, மொழிவளர்ச்சிக்கான தொண்டுகள் புரியும் நோக்கத்துடன் தோன்றிச் செயல்பட்டன.

வரலாற்று ரீதியில் அது ஒரு முக்கியமான காலகட்டம் ஆகும். நாட்டில் ஆட்சி புரிந்துவந்த அந்நியரிடமிருந்து விடுதலை பெறுவதற்காகப் போராடிய தேசீய இயக்கம், மகாத்மா காந்தியின் தலைமையில் செயல்புரியத் தொடங்கி மிகுந்த ஊக்கமும் உற்சாகமும்

காட்டியது. அரசியல் விழிப்புடன், சமூக சீர்திருத்தவேகமும், மொழி மறுமலர்ச்சி உணர்வும் இந்தியா நெடுகிலும் ஏற்பட்டிருந்தன. இந்திய மொழிகள் அனைத்திலும் அந்தத் தாக்கம் நன்கு பிரதிபலித்தது. தமிழ் மொழியிலும் அதன் வேகம் புதுமலர்ச்சிக்கு வகை செய்தது. பத்திரிகைகள் இவ்வகையில் ஊக்கமாகப் பணிபுரிந்தன.

இக்காலப் பகுதியில் பத்திரிகைகள் சிறுகதைகளை அதிகமாக வெளியிடுவதில் ஆர்வம் காட்டின. கதை எழுதுகிறவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கலாயிற்று. வாசகர்களின் தொகையும் பெருகத் தொடங்கியது.

வாசகர்களுக்கு இன்பம் அளிக்கும் விதத்தில், பொழுது போக்கிற்கு ஏற்ற, வாழ்க்கையின் ஆழமான பிரச்சினைகளைத் தொடாத மேலோட்டமான கதைகளை எழுதும் முயற்சியில் 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டிருந்தார். அப்படி எழுதுகிறவர்களை 'ஆனந்த விகடன்' என்ற நகைச்சுவைப் பத்திரிகை மூலம் அவர் ஊக்குவித்து வந்தார்.

அந்த நோக்கிற்கும் போக்கிற்கும் மாறுபட்ட கருத்து கொண்ட எழுத்தாளர்கள் 'சுதந்திரச் சங்கு' 'காந்தி' போன்ற அரசியல்-சமூக நோக்குப் பத்திரிகைகளில் எழுதினார்கள்; பின்னர் 'மணிக்கொடி' என்ற பத்திரிகையின் வாயிலாகத் தங்கள் படைப்பாற்றலை வெளிப் படுத்தினார்கள். ஒன்றரை வருட காலம் அரசியல், சமூகம், இலக்கியம் முதலிய துறைகளில் கவனம் செலுத்தி வந்த 'மணிக்கொடி' தனிச் சிறுகதைப் பத்திரிகையாக மறுமலர்ச்சி பெற்றது. உலக இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடும் தேர்ச்சியும் பெற்றிருந்த திறமைசாலிகளான சில எழுத்தாளர்கள் தமிழ்ச் சிறுகதையிலும் சோதனைகளும் சாதனைகளும் செய்வதில் ஆர்வம் உடையவர்களாக இருந்தார்கள். உற்சாகமாகச் சிறுகதைகள் எழுதுவதில் ஈடுபட்டார்கள். நல்ல வெற்றியும் பெற்றார்கள். இக்குழுவில் முதன்மையானவர் புதுமைப்பித்தன்.

கதைக்கு எடுத்துக் கொண்ட விஷயங்களிலும், அவற்றை கதைகளாக எழுதும் வடிவத்திலும், சொல்லிச் செல்கிற எழுத்து நடையிலும் ,தனித் தன்மையான வேகத்தையும் ஒரு துணிச்சலையும் புதுமைப்பித்தன் காட்டினார். உலக இலக்கியத்தில் அவருக்கு இருந்த தேர்ச்சியைப் போலவே, பழந் தமிழ் இலக்கியத்திலும் அவருக்கு நல்ல பயிற்சி இருந்தது. இவ் அடிப்படையில் தமிழில் ஆழமும் கனமும் அழகும் கொண்ட புதிய படைப்புக்களை அவர் உருவாக்கினார்.

புதுமைப்பித்தன் சிறுகதை, குறுநாவல், இலக்கியக் கட்டுரைகள், விமர்சனம், ஓரங்க நாடகம், கவிதை என்று பல இலக்கிய

வடிவங்களிலும் படைப்புக்களை ஆக்கியுள்ளார். உலகத்துச் சிறு கதைகள் பலவற்றைத் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார். என்றாலும், சிறுகதையில் தான் அவர் ஆர்வம், அக்கறை, படைப்பு உற்சாகம், சோதனை வேகம் முதலியவற்றை மிகுதியாக ஈடுபடுத்தினார்.

புதுமைப்பித்தன் என்று சொன்னாலே சிறுகதைதான் ரசிகர்களின் நினைவில் எழும். அந்த அளவுக்கு தனித்தன்மை வாய்ந்த, சிறப்பு மிகுந்த கதைகளைப் படைத்துள்ள இலக்கியச் சிற்பி புதுமைப் பித்தன் ஆவார்.

## 2. வாழ்க்கை

சொ. விருத்தாசலம் என்பது புதுமைப்பித்தனின் இயற்பெயர் ஆகும்.

அவருடைய தந்தை சொக்கலிங்கம் பிள்ளை திருநெல்வேலியைச் சேர்ந்தவர். அவர் அந்நிய ஆட்சியில் தென் ஆற்காடு ஜில்லாவில் தாசில்தாராக உத்தியோகம் பார்த்தார். வேலையின் நிமித்தம் அவர்தம் மனைவி பர்வதத்தம்மாளுடன் ஊர் ஊராக மாறுதல் பெற்று வந்தார். அப்படி அவர் கடலூரை அடுத்த திருப்பாதிரிப்புலியூரில் வசித்தபோதுதான் விருத்தாசலம் பிறந்தார்.

1906-ம் வருடம் ஏப்ரல் மாதம் 25-ம் தேதி அவர் பிறந்த நாள் ஆகும்.

விருத்தாசலம் என்பது சொக்கலிங்கம் பிள்ளையின் தந்தை பெயர். அதாவது, புதுமைப்பித்தனின் தாத்தா பெயர் ஆகும். தாத்தா பெயரைப் பேரனுக்கு இடவேண்டும் எனும் தமிழ்நாட்டு மரபின்படி அவருக்கு இந்தப் பெயர் வந்து சேர்ந்தது.

புதுமைப்பித்தனுக்கு எட்டு வயது ஆகும்போது அவருடைய தாய் பர்வதத்தம்மாள் இறந்துபோனாள். தாயன்பைச் சின்னஞ்சிறு வயதிலேயே இழக்க வேண்டிய துர்பாக்கியம் அவருக்கு ஏற்பட்டது. இது ஒரு ஏக்கமாக அவர் மனசை உறுத்திக் கொண்டேயிருந்தது.

அவருடைய தந்தை சொக்கலிங்கம் பிள்ளை விரைவிலேயே மறுமணம் செய்து கொண்டார். மாற்றாந்தாயின் அன்பு வறுமையையும் கொடுமைகளையும் புதுமைப்பித்தன் அவருடைய வாழ்க்கையில் அனுபவிக்க நேர்ந்தது.

புதுமைப்பித்தனின் பள்ளிப் படிப்பு அவர் தந்தை வேலை பார்த்து வந்த தென்ஆற்காடு ஜில்லாவில்தான் ஆரம்பமாயிற்று. அவர் தந்தை உத்தியோக ரீதியில் மாற்றங்கள் பெற்று ஊர் ஊராகச் சென்று வசித்த காரணத்தினால், மகனின் படிப்பும் ஒரே ஊரில் சீராக வளர இயலாமல் இருந்தது. மேலும், அவர் செல்லப்பிள்ளையாக வளர்ந்ததால் படிப்பில் அவருக்கு உரிய நாட்டம் இல்லை. பள்ளிக்கூடம் செல்வதில் காட்டிய ஆர்வத்தை விட ஊர் சுற்றுவதில்தான் அவர் அதிகமான உற்சாகம் கொண்டிருந்தார்.

சொக்கலிங்கம் பிள்ளை உத்தியோகத்திலிருந்து ஓய்வுபெற்று 1918-ம் வருடம், தமது பூர்வீக ஊரான திருநெல்வேலிக்குக் குடியேறினார். தாமிரவர்ணி ஆற்றின் கரைமீதுள்ள வண்ணார் பேட்டை என்ற இடத்தில் வசிக்கலானார். அப்போது புதுமைப் பித்தனுக்குப் பன்னிரெண்டு வயது ஆகியிருந்தது.

அதற்குமேல் அவருடைய பள்ளிப் படிப்பும் ஒரு ஒழுங்கான போக்கிற்கு உள்ளாயிற்று. திருநெல்வேலி கிறிஸ்தவ திருச்சபையைச் சேர்ந்த பள்ளிக்கூடம் ஒன்றில் அவர் கல்வி கற்கலானார். ஆயினும் அவர் படிப்பில் அதிக அக்கறை காட்டவில்லை. பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெறுவதற்கு அவருக்கு அதிக வருடங்கள் தேவைப்பட்டன.

பின்னர் அவர் திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் தனது மேல் படிப்பைத் துவங்கினார். அப்போதே அவர் இளமைப் பிராயத்தை எட்டியிருந்தார். கல்லூரிப் படிப்பில் அவர் காட்டிய ஆர்வத்தை விட, அக்காலத்தில் பிரசித்தி பெற்றிருந்த ஆங்கில நாவல்கள் படிப்பதில் அவர் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். ஒவ்வொரு நாளும் புதிது புதிதான துப்பறியும் நாவல்களை அவர் விரும்பிப் படித்தார். இரவில் வெகுநேரம்வரை கண்விழித்து, எடுத்த புத்தகத்தைப் படித்து முடித்துவிட்டுத் தான் அவர் தூங்குவார்.

இந்த இயல்பினால் கல்லூரிப் படிப்பையும் அவர் சீக்கிரம் முடிக்க இயலாது போயிற்று. நாவல்கள் படிப்பதிலும் இதர இலக்கியங்கள் படிப்பதிலும் அதிக ஆர்வம் கொண்டிருந்த புதுமைப்பித்தனுக்கு, நாமும் இதைப் போல் எல்லாம் எழுத வேண்டும் என்ற ஆசை இயல்பாகவே எழுந்தது. அவரோடு வந்து சேர்ந்த இலக்கிய நண்பர்களும் அவருக்கு உற்சாகம் அளித்து வந்தார்கள்.

புதுமைப்பித்தன் நிதான்மாகவே கல்லூரிப் படிப்பை முடித்து பி.ஏ. பட்டம் பெற்றார், 1931-ம் வருடத்தில். அதற்குள் அவருக்கு இருபத்தைந்து வயதுக்குமேல் ஆகிவிட்டது.

அந்தக் காலத்தில், மத்தியதர வர்க்கக் குடும்பத் தலைவர்களின் லட்சியம் தங்கள் பையன்கள் படித்து பாஸ் பண்ணி அரசாங்க உத்தியோகம் பார்க்க வேண்டும் என்பதாகத்தான் இருந்தது. அதிலும், தாசில்தார் வேலை தான் பெரும்பாலோரின் லட்சியமாகத் திகழ்ந்தது.

புதுமைப்பித்தனின் தந்தை சொக்கலிங்கம் பிள்ளையும் அவ்வாறே கருதியிருந்தார். ஆனால் மகன் கல்லூரிப் படிப்பை இருபத்தைந்து வயதுக்குள் பூர்த்தி செய்யாது போனதால், அரசாங்க உத்தியோகம் கிடைக்க வழி இல்லாது போய்விட்டது.

அப்படியே அரசு உத்தியோகம் கிடைக்கும் வாய்ப்பு இருந்திருந்தாலும், புதுமைப்பித்தன் அவ்வேலையை ஏற்றுப் பணி புரிந்திருக்க மாட்டார். அவர் மனம் அடிமை உத்தியோகத்தை வெறுத்தது.

மகன் தாசில்தார் ஆகாவிட்டாலும், ஒரு வக்கீல் ஆகவாவது வர வேண்டும் என்று தந்தை ஆசைப்பட்டார். புதுமைப்பித்தனை சட்டப் படிப்பு படிக்கும்படி தூண்டினார். அதற்கு உதவக்கூடிய வகையில், திருவனந்தபுரத்தில் வசித்த சுப்பிரமணிய பிள்ளை என்பவரின் மகளைப் பெண் பார்த்துப் பேசி முடித்துத் திருமண ஏற்பாடுகளைச் செய்தார்.

1931-ம் வருடம் ஜூலை மாதம் புதுமைப்பித்தன் கமலாம்பாளை திருமணம் செய்து கொண்டார்.

கல்லூரிப் படிப்பையே வெறுத்த புதுமைப்பித்தன் கல்யாணத்துக்குப் பிறகு மீண்டும் கல்லூரியில் சேர்ந்து சட்டப் படிப்பு பயில நாட்டம் கொள்வாரா என்ன! பெரியவர்களின் யோசனை களையும் ஏற்பாட்டையும் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. தன் மனம் போன போக்கில் வாழலானார். புத்தகங்களைத் தேடிப் படிப்பதும், நண்பர்களோடு இலக்கியம் பேசுவதுமே அவர் மனசுக்குப் பிடித்த விஷயங்களாக அமைந்திருந்தன.

அந்நாட்களில் திருநெல்வேலி ஜங்ஷனில் முத்தையா பிள்ளை என்றொருவர் புத்தக வியாபாரம் செய்து கொண்டிருந்தார். அவருடைய புத்தகக் கடை 'கடைச்சங்கம்' என்ற பிரசித்தி பெற்றிருந்து. காரணம், திருநெல்வேலி வட்டாரத்தில் இருந்த எழுத்தாளர்களும் இலக்கிய ரசிகர்களும் நாள்தோறும் அந்தக் கடையில் கூடிப் பேசியும் படித்தும் பொழுது போக்குவது வழக்கம். முத்தையா பிள்ளையும் நல்ல இலக்கிய ரசிகராக இருந்தார். புதுமைப்பித்தனும் இச்சங்கத்தில் கலந்து கொண்டார்.

அவருடைய போக்கு அவர் தந்தைக்குப் பிடிக்கவில்லை. அவர் குறைகூறி மகனைக் கண்டித்தார். உபதேசங்கள் புரிந்தார். சண்டை பிடிக்கவும் தொடங்கினார். அத்துடன் மாற்றாந்தாயின் கசப்பும் வெறுப்பும் புதுமைப்பித்தனுக்கும் அவருடைய மனைவிக்கும் தொல்லைகள் கொடுத்து வந்தன. ஆகவே, வீடு என்பது அமைதியற்ற இடம் ஆகி விட்டது அவருக்கு.

அவர் சுதந்திரமாக வாழ விரும்பினார். பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டு, எழுத்தாளனாக வளரவேண்டும் என்று ஆசைப்பட்டார். அதே நோக்கமாக அவர் முயற்சிகள் செய்தார். கதைகள் எழுதினார்.

எப்போதும் படிப்பதும், எழுதுவதும், நினைத்தால் ஊர் சுற்றுவதும், பலருக்கும் கடிதங்கள் எழுதவதுமாக அவர் நாட்களைக் கழித்தார்.

இப்படி 'வெட்டிப் பொழுது' போக்கிக் கொண்டிருப்பது வீட்டில் யாருக்கும் பிடிக்கவில்லை. நிலைமை முற்றி, சண்டை வளர்ந்து, அவர் வீட்டை விட்டு வெளியேற வேண்டிய அவசியம் உண்டாயிற்று. உறவினர் வீடுகளை நாடிப்போக வேண்டிய தேவையும் ஏற்பட்டது. இவ்வாறு எத்தனை நாட்களை ஓட்ட முடியும்? முடிவில், அவர் மனைவியை திருவனந்தபுரத்துக்கு அவளது பெற்றோர் வீட்டுக்கு அனுப்பி வைத்தார். வேலை கிடைத்தவுடன் அழைத்துக் கொள்வதாகக் கூறிவிட்டு புதுமைப்பித்தன் சென்னைக்குப் போனார்.

அவருடைய தந்தை சொக்கலிங்கம் பிள்ளையும் புத்தகங்கள் எழுதியவர்தான். ஆய்வுரீதியில் 'இந்திய-ஐரோப்பிய இனங்கள்' (Indo-European Races) என்ற பெரிய புத்தகத்தை அவர் ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறார். இருப்பினும், மகனின் எழுத்து முயற்சிகளையும் எழுத்து ஆர்வத்தையும் அவர் என்றுமே ஆதரித்ததில்லை. மகன் உத்தியோகம் பார்த்துச் சம்பாதிக்காமல், கதைகள் எழுதுகிறேன் என்று வீணாகப் பொழுது போக்கிக் கொண்டிருக்கிறானே என்ற கோபம் அவருக்கு. எனவே மகனின் சிரமங்களைக் கண்டு அவர் மனம் இரங்கவில்லை.

சென்னை மாநகரம், பலவிதமான தொழில் முயற்சிகளுக்கும் முக்கிய இடமாக விளங்குவதுபோலவே பத்திரிகை மற்றும் புத்தகப் பிரசுரத் தொழிலுக்கும் கேந்திர ஸ்தானமாக இருந்து வருகிறது. வெகுகாலமாகவே. அதனால், பத்திரிகைத் துறையிலும் எழுத்து உலகத்திலும் ஈடுபட்டு வளர்ந்து முன்னேறத் துடிக்கிற எழுத்தாளர்கள், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் எங்கிருந்தபோதிலும், முடிவாக சென்னை போய் சேர வேண்டும் என்ற ஆசையை ஒரு லட்சிய தாகமாகவே கொண்டு விடுகிறார்கள், அன்றும் இன்றும்.

எனவே, புதுமைப்பித்தனும் மிகுந்த துன்பங்களை அனுபவித்த போதிலும், சென்னை சேர்ந்து என்ன செய்வது என்ற குழப்பநிலை இருந்தபோதிலும், துணிந்து தலைநகருக்கு வந்து விட்டார்.

அது நாடுநெடுகிலும் ஒரு விழிப்பும் வேகமும் பரவியிருந்த காலம். மகாத்மா காந்தியின் தலைமையில் இந்திய விடுதலைப் போராட்டம் பொதுஜன இயக்கமாகப் புத்துயிர்ப்பும் செயல் மலர்ச்சியும் பெற்றிருந்த காலம். காந்திஜீயின் லட்சியங்களையும், சுதந்திர உணர்வையும் மக்கள் மத்தியில் பரப்புவதற்காகப் பத்திரிகைகள் பணியாற்றிக் கொண்டிருந்தன. மக்களை எட்டும் வகையில் குறைந்த

விலையில், விறுவிறுப்பான முறையில், லட்சிய வேகத்தோடு செயலாற்றுவதற்காகப் புதிய பத்திரிகைகள் பல தோன்றின.

பிற்காலத்தில், 'தினமணி' நாளிதழின் ஆசிரியராகி, அதன் பின்னர் சொந்தமாக 'தினசரி' என்ற பத்திரிகை நடத்திப் புகழ் ஈட்டிய டி.எஸ். சொக்கலிங்கம், காலணா விலையில் 'காந்தி' என்ற பத்திரிகையை ஆரம்பித்திருந்தார்.

தேசபக்தரும், சிறந்த பத்திரிகையாளருமாக வளர்ந்து புகழ் பெற்ற சங்கு சுப்பிரமணியன் 'சுதந்திரச் சங்கு' என்ற வாரப் பத்திரிகையை நடத்தினார். அதன் விலையும் காலணா தான்.

கே. சீனிவாசன் 'மணிக்கொடி' என்ற பத்திரிகையைத் தொடங்கினார். பாண்டிச்சேரியில் மகாகவி சுப்பிரமணிய பாரதியுடன் சிறிது காலம் வாழ்ந்து, பாரதியின் தீவிர பக்தராக விளங்கிய, வ.ரா. என்று புகழ் பெற்றிருந்த வ. ராமஸ்வாமியும், டி.எஸ். சொக்கலிங்கமும் இம் முயற்சியில் அவருக்குத் துணை புரிந்து வந்தனர்.

இப்பத்திரிகைகளில் புதுமைப்பித்தனின் கதைகளும், கட்டுரைகளும் அவ்வப்போது பிரசுரம் பெற்றிருந்தன. அவருடைய புதிய பார்வையும், கதைகளுக்கு அவர் எடுத்துக்கொண்ட விஷயங்களின் தன்மையும், அவற்றை அவர் எழுத்தில் சித்திரித்த வேகமும், எண்ணத் துணிச்சலும், மிகுந்த வரவேற்பையும் பாராட்டுதலையும் பெற்றன. டி.எஸ். சொக்கலிங்கமும் வ.ரா.வும் அவற்றைப் பாராட்டி புதுமைப் பித்தனுக்குக் கடிதங்கள் எழுதினர். இவர்களுக்கிடையே கடிதத் தொடர்பு வளர்ந்து வந்தது.

சென்னை சேர வேண்டும் என்கிற தனது விருப்பத்தை புதுமைப்பித்தன் வ.ரா.வுக்கு எழுதினார். வரவேண்டாம் என்று தான் வ.ரா. எழுதிக் கொண்டிருந்தார். காரணம் பத்திரிகைக்கு நல்ல வரவேற்பு இருந்தது; பத்திரிகை நடத்தியவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் நிறையவே இருந்தன. என்றாலும், பொருளாதார பலம் தான் இல்லை. ஒவ்வொரு இதழையும் வெளியிடுவதற்கே அவர்கள் மிகுந்த சிரமங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இந்நிலையில் புதிதாக இன்னும் ஒருவரையும் சேர்த்துக் கொண்டு என்ன பண்ணுவது, எப்படி சமாளிப்பது என்ற யோசனைதான்.

ஆனாலும், புதுமைப்பித்தனுக்கு இருந்த உத்வேகமும், அவர் வாழ்க்கையில் குறுக்கிட்டிருந்த நெருக்கடியின் உந்துதலும் அவரை சென்னைக்கு இட்டுச் சென்றன. வ.ரா.வையும் சொக்கலிங்கத்தையும் அவர் சந்தித்தார். தங்களோடு சேர்ந்து அவரும் சிரமங்களை அனுபவிக்கட்டும் என்று அவர்களும் அவரை ஏற்றுத் தங்கள் குழுவில் சேர்த்துக் கொண்டார்கள்.

லட்சியத்துக்காக 'மணிக்கொடியில்' எழுதிக் கொண்டு, பணத்துக் காக சிரமப்பட்டு வந்த காலத்தில் புதுமைப்பித்தனுக்கு மாதம்தோறும் சம்பளம் கிடைக்ககூடிய ஒரு வேலை வாய்த்தது. 'ஊழியன்' என்ற பத்திரிகையில் உதவி ஆசிரியர் வேலை அவருக்குக் கிடைத்தது.

ராய. சொக்கலிங்கம் என்ற அறிஞர் சமூக சீர்திருத்த விஷயங்களிலும் அக்கறை கொண்டிருந்தார். பழந்தமிழ் இலக்கியத் திலும் பற்றுடையவர். அவர் 'ஊழியன்' என்ற பத்திரிகையைக் காரைக்குடியில் நடத்தி வந்தார். சமூக சீர்திருத்தம், பழந்தமிழ் இலக்கியம் முதலியவற்றில் ஆர்வம் காட்டிய 'ஊழியன்' தற்காலப் பாங்கான கதைகளையும் கட்டுரைகளையும் பிரசுரித்து வந்தது. அதன் போக்கு புதுமைப்பித்தனுக்கு ஒத்தது இல்லைதான். எனினும், ஒன்றும் இல்லாததற்கு இந்த வேலை மேல்தானே என்ற எண்ணத்துடன் அவர் அதை ஏற்றுக் கொண்டார். புதுமையான கதைகளை எழுதி வெளியிட்டார்.

ஆயினும், அவருக்கும் 'ஊழியன்' அலுவலகத்தில் பணி புரிந்து கொண்டிருந்த மற்றொரு உதவி ஆசிரியருக்கும் ஒத்துப் போகவில்லை. மேலும், அந்த அலுவலகச் சூழ்நிலை புதுமைப் பித்தனின் சுதந்திர போக்கிற்கு இடைஞ்சலாக இருந்தது. எனவே, அவர் அந்த வேலையை உதறி எறிந்துவிட்டு மறுபடியும் சென்னை வந்து சேர்ந்தார்.

'காந்தி', 'மணிக்கொடி' ஆகிய வாரப் பத்திரிகைகள் இலட்சிய வேகத்தோடு தோன்றி, சோதனைகளை மேற்கொண்டு, கஷ்ட திசையிலேயே நடந்துவந்தன. அரசியல், சமூக சீர்திருத்தம், தனிமனிதப் பண்பாட்டு உயர்வு போன்ற விஷயங்களுடன் இலக்கியத்திலும் இவை உற்சாகம் காட்டிவந்தன. 1934-ல் 'காந்தி' பத்திரிகை 'மணிக்கொடி'யுடன் இணைக்கப்பட்டது.

'மணிக்கொடி' இலக்கியத்தில் பல சோதனைகளைச் செய்தது. வ.ரா. சிந்தனைக் கட்டுரைகளுடன் 'நடைச்சித்திரம்' என்ற புதுரகமான உரைநடைப் படைப்பை எழுதி வந்தார். தமிழ்ச் சிறுகதைக்கு இலக்கிய கனமும், உலக இலக்கியரீதியான பல்வேறு தன்மைகளும் சேர்க்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் எழுத்து முயற்சியில் ஈடுபட்ட பல உற்சாகிகளின் ஒத்துழைப்பு 'மணிக்கொடி'க்குக் கிடைத்தது. புதுமைப் பித்தன் பி.எஸ். ராமையா, ந. பிச்சமூர்த்தி, கு.ப. ராஜகோபாலன், சிட்டி, சி.சு. செல்லப்பா முதலியவர்கள் அவர்கள்.

இவர்கள் அனைவரது திறமையும் உழைப்பும் 'மணிக்கொடி'க்கு ஒரு தனித் தன்மையைக் கொண்டு சேர்த்தன. ஆயினும் பத்திரிகையின் பொருளாதார நிலைமை எப்போதும் மோசமாகத்தான் இருந்தது.

எனவே, 'மணிக்கொடி'யை நிர்வகித்து நடத்திய கே. சீனிவாசன் பம்பாய் போனார். 'பாம்பே ஸ்டாண்டர்ட்' என்ற பத்திரிகைக்கு ஆசிரியரானார். டி.எஸ். சொக்கலிங்கம் சென்னையில் 'தினமணி' நாளிதழின் ஆசிரியரானார். வ.ரா. கொழும்பு சென்று 'வீரகேசரி' பத்திரிகைக்கு உதவி ஆசிரியரானார்.

வாரப் பத்திரிகையாகப் பல நோக்குகள் கொண்டு வெளி வந்த 'மணிக்கொடி', பி.எஸ். ராமையாவின் முயற்சியால் தனிக் கதைப் பத்திரிகையாக, மாதம் இருமுறை வெளிவரும் ஏடாக மாற்றப்பட்டது. ராமையா அதன் ஆசிரியரானார். அவர் திறமை மிகுந்த கதாசிரியர். நல்ல கதைகளைத் தேர்ந்து, திறமையாக 'எடிட்' செய்து பிரசுரிப்பதில் அவர் தீவிர உற்சாகம் காட்டினார். புதுமைப்பித்தனும் மற்றும் இலக்கிய உணர்வும் எழுத்தாற்றலும் கற்பனைத் திறனும் உலக இலக்கிய ஞானமும் பெற்றிருந்த படைப்பாளிகள் பலரும் (ந.பிச்சமூர்த்தி, கு.ப. ராஜகோபாலன், 'சிட்டி' பெ. கோ. சுந்தரராஜன், சி.சு. செல்லப்பா, ந. சிதம்பர சுப்பிரமணியன், கி. ரா. என்ற கி. ராமச்சந்திரன், 'மௌனி', க. நா. சுப்பிரமணியன் முதலியோர்) ஆழமும் அழகும், அழுத்தமும் கனமும் நிறைந்த கதைகள் எழுதினார்கள். இவர்கள் பிற்காலத்தில் 'மணிக்கொடி எழுத்தாளர்கள்' என்ற சிறப்புப் பெயர் பெற்றார்கள். இவர்களிடையே புதுமைப்பித்தன் தனிப் பெருமை பெற்று விளங்கினார்.

'மணிக்கொடி' இலக்கிய ரசிகர்களின் கவனிப்புக்கும் பாராட்டுதலுக்கும் உரிய பத்திரிகையாக வெளிவந்த போதிலும், அதன் பொருளாதார பலம் வலுப்பெறவில்லை. ஒவ்வொரு இதழையும் தயாரித்து வெளியிடுவதற்கு அதைச் சேர்ந்தவர்கள் மிகுந்த சிரமங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அவர்கள் அனுபவித்த கஷ்டங்களை பி.எஸ். ராமையா 'மணிக்கொடி காலம்' என்ற தனது நூலில் விரிவாக எழுதியிருக்கிறார். புதுமைப்பித்தன் அவருக்குத் துணையாக இருந்து 'மணிக்கொடி' யை வளர்ப்பதற்குத் தன்னாலான உதவிகளைச் செய்து வந்தார்.

என்றாலும், பத்திரிகையை, ஒழுங்காக, காலநியதி தவறாது பிரசுரிக்க இயலவில்லை. காலதாமதமாக வந்து, இடையிடையே சில இதழ்கள் வெளிவர முடியாமல் போய், **1936**ல் 'மணிக்கொடி' நின்று விட்டது.

புதுமைப்பித்தன் 'தினமணி' ஆசிரியர் டி.எஸ். சொக்கலிங்கத்தின் யோசனையை ஏற்று, 'தினமணி' நாளிதழின் ஆசிரியர் குழுவில் சேர்ந்தார்.

'மணிக்கொடி' நின்றுபோவதை பி.எஸ். ராமையாவும் அவர் நண்பர்களும் விரும்பவில்லை. ராமையா மிகுந்த முயற்சிகளை மேற் கொண்டு, 'நவயுகப் பிரசுராலயம்' என்ற பெயரில் ஒரு லிமிட்டெட் ஸ்தாபனத்தை உருவாக்குவதில் வெற்றிகண்டார். அதன் வெளியீடாக 'மணிக்கொடி' பத்திரிகையை பிரசுரிப்பதுடன், இலக்கியம்; அரசியல் மற்றும் மொழிபெயர்ப்பு நூல்களையும் பிரசுரிப்பது என்று ஏற்பாடாயிற்று.

'தினமணி' ஆசிரியர் டி.எஸ். சொக்கலிங்கம் லிமிட்டெட் ஸ்தாபனத்தின் டைரக்டர் ஆகவும், பி.எஸ். ராமையா பிரசுராலயத்தின் நிர்வாக ஆசிரியராகவும் பொறுப்பு வகித்தார்கள்.

'மணிக்கொடி' பத்திரிகை திரும்பவும் வெளிவந்தது. நல்ல கதைகளையும் மொழிபெயர்ப்புகளையும் பிரசுரித்தது. புதுமைப் பித்தன் 'நாசகாரக் கும்பல்' போன்ற அவருடைய அருமையான கதைகள் பலவற்றை அந்தக் காலகட்டத்தில் எழுதினார்.

'நவயுகப் பிரசுராலயம்' மலிவு விலையில் நல்ல புத்தகங்களையும் பிரசுரித்தது. அவை நன்கு விற்பனையாயின.

பத்திரிகை நடத்துவதற்கு ராமையா எப்போதும்போல் சிரமப்பட்டுக் கொண்டுதானிருந்தார். அவர் எதிர்பார்த்ததுபோல, புத்தகப் பிரசுரங்களின் விற்பனைப் பணத்திலிருந்து நிதி உதவி எதுவும் பத்திரிகைக்கு ஒதுக்கப்படவில்லை. அவர் உதவி கோரிய போது, மானேஜிங் டைரக்டர் தட்டிக் கழித்து வந்தார். ஒருநாள் திடீரென்று சொக்கலிங்கம் ப.ராமஸ்வாமி (ப.ரா) என்பவரைப் பிரசுராலயத்தில் பொறுப்பான பதவியில் நியமித்தார். அது ராமையாவுக்குப் பிடிக்க வில்லை. ப.ரா.வுக்கும் அவருக்கும் தகராறு ஏற்பட்டது. அதன் விளைவாக, மானேஜிங் டைரக்டர் என்ற முறையில் சொக்கலிங்கம் பி.எஸ். ராமையாவை ஆசிரியர் பதவியிலிருந்து நீக்குவதாக உத்தரவு பிறப்பித்தார். அதனால் கோபமும் கசப்பும் கொண்ட ராமையா 'மணிக்கொடி'யுடன் தனக்கிருந்த உறவை முறித்துக் கொண்டு வெளி யேறினார்.

அதன் பிறகும் 'மணிக்கொடி' பத்திரிகை சிறிது காலம் வெளிவந்தது. ஆயினும், 'மணிக்கொடி எழுத்தாளர்கள்' என்ற கவுரவத்தைப் பெற்றிருந்தவர்கள் அதில் எழுதவில்லை. புதுமைப் பித்தனும் எழுதவில்லை.

'மணிக்கொடிப் பத்திரிகையானது வெளிவரும் முன்பு எத்தனையோ பத்திரிகைகள் இருக்கத்தான் செய்தன. ஆனால் புதிய பரிசீலனைகளுக்கு இடங்கொடுக்கும், உற்சாகமூட்டும், வரவேற்கும்

பத்திரிகைகள் அதற்கு முன்போ பின்போ கிடையாது..... அன்று மறு மலர்ச்சி என்ற ஒரு வார்த்தை புதிய வேகமும் பொருளும் கொண்டது. அதைச் சிலர் வரவேற்றார்கள். பலர் கேலி செய்தார்கள். பெரும்பான்மையோர் அதைப்பற்றி அறியாதிருந்தார்கள். மணிக்கொடி பொருளாதார நிர்ப்பந்தம் என்ற நபரால் சிசுஹத்தி செய்யப்பட்டு அசிரத்தை என்ற முனிசிபல் குப்பைத் தொட்டியில் எறியப்பட்டது. மூச்சுப் பேச்சற்றுக் கிடந்த அந்தக் குழந்தையை எடுத்துவந்து, ஆசை என்ற ஒரே அமுதூட்டி வளர்ப்பதற்காக நானும், பி.எஸ். ராமையா என்ற நண்பரும், எங்களைப்போலவே உற்சாகத்தை மட்டும் மூல தனமாகக் கொண்ட இன்னும் சில எழுத்தாளர்களும் சேர்ந்து நடத்தி வந்தோம். அது இரண்டு மூன்று வருஷங்களில் கன்னிப் பருவம் எய்திக் கண்ணை மயக்கும் லாவண்யத்தைப் பெறும் சமயத்தில் அதைக் கைப்பிடித்து இழுத்துக்கொண்டு ஓடும் நண்பரைப் பெற்றோம். அவர் அவளை ஒருவனுக்கு விற்றார். விற்றவுடனே அவளுக்கு ஜீவன்முக்தி இந்தக் கலிகாலத்தில் கிடைத்தது. இது தான் மணிக்கொடியின் கதை. இதுதான் தமிழில் புதிய பரிசீலனை செய்ய வேண்டும் என்ற கோட்டைகட்டியவர்களின் ஆசையின் கதை.'

இவ்வாறு 'மணிக்கொடி'யின் முடிவைப்பற்றி புதுமைப் பித்தன் எழுதியிருக்கிறார்.

நவயுகப் பிரசுராலயம் தொடர்ந்து புத்தகங்கள் பிரசுரித்தது. புதுமைப்பித்தன் 'மணிக்கொடி'யில் எழுதிய கதைகளில் 29 கதைகளைத் தொகுத்து 'புதுமைப்பித்தன் கதைகள்' என்று வெளி யிட்டது. அவர் மொழிபெயர்த்திருந்த கதைகளைத் தொகுத்து 'உலகத்துச் சிறுகதைகள்' என்ற புத்தகமாய் பிரசுரித்தது. மேலும், 'ஆறுகதைகள்', 'நாசகாரக் கும்பல்', 'பக்த குசேலா' என்று சிறு சிறு வெளியீடுகளாகவும் பிரசுரம் பெற்றன. இத்தாலிய சர்வாதிகாரி பெனிட்டோ முசோலினியின் வாழ்க்கை வரலாறு 'பேஸிஸ்ட் ஜடாமுனி' என்ற பெயரில் வெளிவந்தது. இந்தப் புத்தகத்தில் ஆசிரியர் பெயர் சொ. விருத்தாசலம், பி.ஏ. என்று குறிக்கப்பட்டிருந்தது.

சொ. விருத்தாசலமும், ந. ராமரத்னமும் சேர்ந்து எழுதிய சர்வாதிகாரி ஹிட்லரின் வரலாறு, 'கப்சிப் தர்பார்' என்ற புத்தகமாக வெளிவந்தது.

புதுமைப்பித்தன் பெயர் வாசகர்களிடையே நன்கு அறிமுக மாவதற்கும், அவருடைய புகழ் வளர்வதற்கும் இப்புத்தகங்கள் பெரிதும் உதவின. இதன்மூலம் நவயுகப் பிரசுராலயம் புதுமைப்பித்தனுக்கு உதவி புரிந்ததோடு, நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் நல்ல முறையில்

பணியாற்றியது என்றே சொல்ல வேண்டும். அதன்மூலம் அந்தப் பிரசுரலாயமும் பிரசித்தி பெற்றது.

புதுமைப்பித்தனின் பெயர் பிரபலம் அடைந்துவந்த போதிலும் அவருடைய வாழ்க்கை வசதிகள் உயர்ந்துவிடவில்லை. 'தினமணி' நாளிதழில் கிடைத்துவந்த சம்பளம் அவருடைய வாழ்க்கைச் செலவுகளுக்குப் போதுமானதாக இல்லை. 'பற்றாக் குறை பட்ஜெட்'டுடன் அவர் குடும்ப வாழ்க்கை திணறிக் கொண்டிருந்தது. பத்திரிகையில் வேலையும் நிறைய இருந்தது.

ஆங்கிலத்தில் வருகிற செய்திகளைத் தமிழாக்குகிற வேலை தான். 'வானத்தை அளக்கும் கற்பனைத் திறமையும்' படைப்பாற்றலும் பெற்றிருந்த அவருக்குத் தினந்தோறும் செய்திகளை மொழி பெயர்த்துத் தள்ளுகிற வேலை உவப்பானதாக இருந்ததில்லை. ஆயினும், மாதம் தோறும் நிரந்தரமான ஒரு வருவாய் கிடைக்கிறதே என்றுதான் அவர் நாளிதழ் வேலையில் இருந்தார். உண்மையான இலக்கிய வாதியின் மனப்பண்பையும், அவன் வாழ்க்கையில் நிலை பெற்றிருக்கிற வறுமையையும் யதார்த்தமாகச் சித்தரித்து அவர் எழுதியுள்ள 'கடிதம்', 'ஒருநாள் கழிந்தது' போன்ற அருமையான கதைகள் அவருடைய வாழ்க்கையின் பிரதிபலிப்புகளே ஆகும்.

புதுமைப்பித்தனின் இலக்கிய தாகமும் படைப்புத் திறனும் ஓரளவு செயல்படுவதற்கு, 'தினமணி' வருடம்தோறும் வெளியிட்டு வந்த ஆண்டு மலர்கள் உதவின. அவற்றை உருவாக்கும் பொறுப்பு புதுமைப் பித்தனிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவரது மேற்பார்வையில் ஒவ்வொரு ஆண்டு மலரும் இணையற்ற இலக்கியத் தயாரிப்பாக வெளிவந்தது. 'மணிக்கொடி' எழுத்தாளர்களும் மற்றும் பல திறமையாளர்களும் எழுதிய கதை, கவிதை, கட்டுரைகள், ஓரங்க நாடகங்கள் முதலியன தினமணி ஆண்டு மலர்களில் இடம் பெற்றன. புதுமைப் பித்தனின் சிறந்த கதைகள் சிலவும் அம்மலர்களுக்காக எழுதப் பட்டவைதான்.

'தினமணி'யில் அவர் புத்தக மதிப்புரையும் எழுதினார். விறுவிறுப்பும் வேகமும் நிறைந்த முறையில், காரசாரமாக, மதிப்புரை எழுதித் தனது விமர்சனத் திறமையை நிரூபித்துக் கொண்டிருந்தார் அவர்.

புதுமைப்பித்தனின் 'தினமணி' உத்தியோகம் சுமார் ஏழரை வருடங்கள் நீடித்தது. 1936 நடுவிலிருந்து 1943 இறுதிவரை அவர் அந்த நிறுவனத்தில் பணியாற்றினார்.

1943ல் 'தினமணி' ஆசிரியருக்கும் அதன் நிர்வாகஸ்தர்களுக்குமிடையே ஒரு போராட்டம் எழுந்தது. அதன் காரணமாக ஆசிரியர் டி.எஸ். சொக்கலிங்கம் தன் பதவியை ராஜிநாமா செய்தார். ஆசிரியர் குழுவைச் சேர்ந்த பலரும் அவருடன் வெளியேறினர். அவர்களில் புதுமைப்பித்தனும் ஒருவர்.

டி.எஸ். சொக்கலிங்கம் 1944 ஆரம்பத்தில் 'தினசரி' என்ற பெயரில் ஒரு நாளிதழ் தொடங்கினார். உரிமைப் போராட்டத்தின் விளைவாக வேலையைவிட்டு வெளியேறிய பத்திரிகை ஆசிரியர்களின் கூட்டுறவு முயற்சிபோல் 'தினசரி' அமைந்திருந்தது. எனவே, அந்தப் பத்திரிகையில் உழைப்பவர்களுக்கு நியாயமான சம்பளம் வழங்க அது முன்வந்தது.

'தினசரி'யின் ஆசிரியர் குழுவில் இடம்பெற்ற புதுமைப்பித்தன் 'தினமணி'யில் பெற்றுக்கொண்டிருந்த சம்பளத்தைவிட அதிகப்படியான, நியாயமான சம்பளம் பெறும் வாய்ப்பைப் பெற்றார். அது அவருடைய வாழ்க்கைத் தேவைக்குப் போதுமானதாக இருந்தது.

இருப்பினும், அவருக்கு உள்ளத்தில் மகிழ்ச்சி இல்லை. தினசரி வேலை அவர் மனசுக்குப் பிடித்ததாக இருக்கவில்லை. இப்படி நாள்தோறும் உழைத்துத் தான் என்ன பிரயோசனம் என்பது போன்ற விரக்தி உணர்வு அவருள் வளரலாயிற்று. பத்திரிகைத் துறையில் பத்து வருடங்களுக்கு அதிகமாக அவர் உழைத்திருந்தார். பணம் எதுவும் மிச்சப்படவில்லை. சினிமாத்துறையில் ஈடுபட்டால் பணம் தாராளமாகக் கிடைக்க வழி ஏற்படும் என்ற எண்ணம் அவருக்கு வந்திருந்தது.

புதுமைப்பித்தனோடு எழுத்துலகில் பாடுபட்ட அவருடைய நண்பர்கள் சிலர் சினிமாத்துறையில் வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டிருந்தார்கள். 'மணிக்கொடி' ஆசிரியராக இருந்த பி.எஸ். ராமையா வசனகர்த்தாவாகத் திரை உலகில் புகுந்தவர் சினிமா டைரக்டராக வளர்ந்திருந்தார். 'மணிக்கொடி'யில் கதைகள் எழுதியவர், பிறகு 'தினமணி' ஆசிரியர் குழுவில் சேர்ந்து உழைத்தவர். 'இளங்கோவன்' என்ற புனைபெயர் கொண்ட ம.க. தணிகாசலம். அவர் சினிமா வசனகர்த்தா ஆகிப் பெரும் புகழுடன் விளங்கினார். 'மணிக்கொடி' துணை ஆசிரியராக இருந்த கி.ரா. (கி.ராமச்சந்திரன்) ஜெமினி ஸ்டூடியோவின் கதை இலாகாவில் சேர்ந்து பணிபுரிந்து கொண்டு இருந்தார்.

திறமையும் புகழும் பெற்றிருக்கும் நாமும் சினிமா உலகத்தில் ஈடுபட்டால் நன்கு பிரகாசிக்க முடியும் என்று புதுமைப்பித்தன் நினைந்திருக்கக்கூடும். அது மனித இயல்புக்கும் கால நியதிக்கும் ஏற்புடையதே ஆகும்.

அத்துடன், அலுவலக உறவுகளிலும் ஏதேனும் சில சிக்கல்கள் முளைத்திருக்கவும் கூடும். எப்படியோ, 'தினசரிப் பத்திரிகைக்காக உழைத்தது போதும் என்ற மனநிலை புதுமைப்பித்தனுக்கு ஏற்பட்டு விட்டது. அதனால் அவர் அந்த வேலையை உதறிவிட்டு, சுதந்திர எழுத்தாளராக வெளியேறினார். சிறிது காலத்துக்குப் பிறகு அவர் சினிமாத் துறையில் பிரவேசித்தார்.

1946-ல் அவருக்கு சில சினிமா வாய்ப்புகள் கிடைத்தன. அந்நாட்களில் திரைப்பட உலகில் மிகுந்த கீர்த்தியோடு விளங்கிய எஸ்.எஸ். வாசனின் ஜெமினி ஸ்டுடியோ 'அவ்வையார்' கதையைப் படமாக்க முனைந்தது. அதற்குக் கதை வசனம் எழுதுவதற்கு முதலில் புதுமைப்பித்தன் தான் அழைக்கப்பட்டார். ஜெமினி கதை இலாகாவைச் சேர்ந்த கி.ரா.வும் புதுமைப்பித்தனும் சேர்ந்து எழுதுவது என்று திட்டமிடப்பட்டது. புதுமைப்பித்தன் உற்சாகத்தோடு கதை வசனம் எழுதினார்.

ஆயினும், அவர் எழுதிக் கொடுத்தவை 'அவ்வையார்' படத்துக்காகப் பயன்படுத்தப்படவில்லை. அவருக்கு சிறிதளவு பணம் கிடைத்தது. அவ்வளவுதான். சினிமா உலகத்தில் இதெல்லாம் சகஜமே.

ஜெமினி ஸ்டுடியோவில், 'முருகதாஸா' என்று பெயர் பெற்றிருந்த ஏ. முத்துஸ்வாமி சினிமா டைரக்டராகப் பணிபுரிந்து கொண்டிருந்தார். அவரது உதவியினால், மற்றொரு படத்துக்குக் கதை வசனம் எழுதுகிற பொறுப்பு புதுமைப்பித்தனுக்குக் கிடைத்தது. 'காமவல்லி' என்பது படத்தின் பெயர். அதற்கு அவருக்கு தாராளமாகவே பணம் தரப்பட்டது. அந்தப் படம் பூர்த்தியாகி உரிய காலத்தில் திரைக்கும் வந்தது.

புதுமைப்பித்தனிடம் தாராளமாகப் பணம் புரண்டது. ஒளிமயமான எதிர்காலத்தில் அவருக்கு நம்பிக்கை உண்டாயிற்று. அவர் இஷ்டம்போல் செலவுகள் செய்து சந்தோஷமாக இருந்தார். சினிமாத்துறையின்மூலம் நிறையப் பணம் கிடைத்த பின்னர் இலக்கியப் பணியில் உற்சாகமாக ஈடுபடவேண்டும்; அதற்காக ஒரு பத்திரிகை நடத்த வேண்டும் என்றெல்லாம் அவர் கனவுகள் வளர்த்தார். அந்தப் பத்திரிகைக்கு 'சோதனை' என்று பெயர் வைக்கவேண்டும் என்றுகூட அவர் திட்டமிட்டார்.

மனிதர்கள் ஆசைப்படுவதுபோல் எல்லாம் வாழ்க்கையில் நடந்து விடுகிறதா என்ன? புதுமைப்பித்தனும் ஏமாற்றங்களையே எதிர் கொள்ள நேரிட்டது.

1946 அவருக்குச் சிறிது பிரகாசமான காலமாக இருந்தது. அடுத்த வருடம் அப்படி அமையவில்லை. ஏதோ பட சான்ஸ் கிடைத்தது. ஆனாலும் பலனில்லாத வேலை.

அவர் ஒரு படத்துக்குக் கதை வசனம் எழுதினார். ஆனால், அவருக்குப் பணம் வந்து சேரவில்லை. படத் தயாரிப்பாளரிடம் பணம் இல்லை. எனவே, படம் உருவாக வழி பிறக்கவில்லை.

1946-ல் புதுமைபித்தன் சொந்தமாகத் திரைப்படம் தயாரிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டார். போதிய பண வசதி இல்லாதிருந்தும், சினிமாத்துறை சம்பந்தப்பட்ட சிலரது மயக்கு வார்த்தைகளுக்கு ஆட்பட்டு, படத் தயாரிப்பாளராகத் துணிந்தார் அவர்.

'பர்வதகுமாரி புரொடக்ஷன்ஸ்' என்பது அவரது கம்பெனியின் பெயர். தனது தாயின் நினைவாக அவர் அந்தப் பெயரை வைத்திருக் கலாம். அவர் படம் எடுக்கத் திட்டமிட்ட 'குற்றாலக் குறவஞ்சி' கதை. படத்தின் பெயர் 'வசந்தவல்லி' என்று தீர்மானமாயிற்று. அது சம்பந்தமான விளம்பரங்கள் சில பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன. அத்துடன் சரி.

புதுமைப்பித்தனுக்கு வீண் பணச் செலவும் கடன் தொல்லையும் தான் இந்த சொந்தப்பட முயற்சியின் விளைவாக ஏற்பட்டன. மீண்டும் வறுமை நிலையும் துயரங்களும் அவர் வாழ்க் கையில் கவிந்தன.

பல மாதங்கள் அவர் மிகவும் சிரமப்பட நேர்ந்தது. அந்த நிலையிலேதான் 'பாகவதர் படத்துக்குக் கதை வசனம் எழுதும் சான்ஸ்' அவரைத் தேடி வந்தது.

அந்நாட்களில் கீர்த்தி பெற்று விளங்கிய நட்சத்திர நடிகர்களில் எம்.கே. தியாகராஜ பாகவதரும் ஒருவர். 'பாகவதர்' என்றால் அவரையே குறிக்கும் அளவுக்கு அவர் தமிழ்நாட்டில் புகழ் பெற்றிருந்தார். அவர் 'ராஜமுக்தி' என்ற சொந்தப் படம் ஒன்று தயாரித்தார். அதற்காகப் புதுமைப்பித்தன் ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

மறுபடியும் அவர் கைக்குப் பணம் வந்தது. அவர் மீண்டும் மகிழ்ச்சிப் பெருக்கோடு செயல்புரியலானார். வசதிகள் மிகுந்த பெரிய ஓட்டலில் மனைவியுடன் தங்கினார். கதை வசனம் எழுதும் வேலையை உற்சாகத்துடன் கவனித்தார்.

1947 பிற்பகுதியில் 'ராஜமுக்தி' படத் தயாரிப்புக் குழுவினரோடு புதுமைப்பித்தன் புனாவுக்குப் போனார்.

புனா நகரில், வசதிகள் இல்லாத சூழலில், அவர் மிகுந்த கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியதாயிற்று. கொடிய காச நோய் அவரைப் பற்றிக் கொண்டு, வேகமாக வளர்ந்தது.

ஆதியிலேயே அவருக்கு இருமல் அடிக்கடி தொல்லை கொடுப்பது உண்டு. ஆனால் அதைக் கொடிய காச நோய் என்று

அவரோ மற்றவர்களோ சந்தேகிக்கவில்லை. இயல்பாகவே அவருக்கு பலவீனமான உடல். வாழ்க்கையின் பிற்காலத்தில் ஏற்பட்ட சிரமங்களும், சோதனைகளும், வறுமையும் ஏமாற்றங்களும் அவருடைய உள்ளத்தையும் உடலையும் வெகுவாகப் பாதித்திருந்தன. புனா போய்ச் சேர்ந்தபோது அவரது உடல்நிலை மோசமாகி விட்டது.

புனா நகரில் அவருக்குச் சரியான உணவு கிடைக்கவில்லை; சரியான கவனிப்பும் இல்லை. அங்கே அவர் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. இதனால் எல்லாம் அவரது உடலினுள் உறைந்திருந்த கொடிய நோய் முற்றி வளர்ந்து அவரை உருக்குலைத்தது. தான் இனி அதிக நாள் வாழப்போவதில்லை என்பதை அவர் உணர முடிந்தது. எனினும், ஏற்றுக் கொண்ட வேலையை-'ராஜமுக்தி' படத்துக்கான வசனத்தை- எழுதி முடிக்க வேண்டுமே என்று உழைத்தார். அப்படி முடிப்பதற்குள் நோய் அவரைப் பூரணமாகக் கவ்விக் கொண்டது. உடல்நிலை மிக மோசமாகிப் போனதால் அவர் ஊருக்குத் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது.

1948 மே முதல் வாரம் புதுமைப்பித்தன் புனாவிலிருந்து திருவனந்தபுரம் வந்து சேர்ந்தார். அங்கேதான் அவருடைய மனைவியும், மகளும் இருந்தார்கள். மற்றும் உறவினர்களும் இருந்தனர். இலக்கியவாதிகளின் நண்பரான எஸ். சிதம்பரமும் உடன் இருந்தார்.

திருவனந்தபுரத்தில் வைர வியாபாரம் செய்து கொண்டிருந்த பெரும் செல்வர் ஒருவரின் செல்லப்பிள்ளை எஸ். சிதம்பரம். 1940-களில் அவருக்கு இலக்கியத்தின்மீது மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டது. திடீர் மோகம் என்றுதான் அதைச் சொல்ல வேண்டும். எழுத்தாளனாகப் பெயரெடுத்துப் புகழ் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசை அவருக்கு ஏற்பட்டது. அவர் கவிதைகள் எழுதினார். 'கவிக் குயில்' என்ற பெயரில் இலக்கிய மலர்கள் தயாரித்தார். அம் மலர்களில் புதுமைப்பித்தனின் கவிதைகள் பிரசுரமாகியிருந்தன. சில வருடங்களிலேயே சிதம்பரத்தின் இலக்கிய மோகம் தணிந்து ஒய்ந்துவிட்டது. அவர் புகைப்படக் கலை, சினிமாக் கலை போன்ற வேறு துறைகளில் ஆர்வம் காட்டலானார்.

மறுமலர்ச்சி இலக்கியத்தில் எஸ். சிதம்பரம் ஆர்வம்கொண்டிருந்த காலத்திலேதான் புதுமைப்பித்தன் காச நோயாளியாகத் திருவனந்தபுரம் சேர்ந்திருந்தார். புதுமைப்பித்தனிடம் பெரும் மதிப்பு கொண்டிருந்த சிதம்பரம் இறுதிக் காலத்தில் அவருடனிருந்து அவருக்கு வேண்டிய உதவிகள் செய்யும் பேறு பெற்றார்.

புதுமைப்பித்தனுக்கு பயங்கரமான பணத் தேவை. நோய்க்கு சிகிச்சை தொடர்ந்து நடைபெற்று வந்தது. அதற்கு அதிகம் பணம்

தேவைப்பட்டது. அவர் பண உதவி கோரி இலங்கை நண்பருக்கும் சென்னை நண்பர்களுக்கும் எழுதினார்.

தமிழ்நாட்டில் இலக்கியப் படைப்பில் ஈடுபடுகிற எழுத்தாளர்களின் வாழ்க்கை என்றும் வேதனைக்கும் சோதனைகளுக்கும் உரியதாகவே இருந்து வருகிறது. அவர்களுடைய குறைந்தபட்ச வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய அளவுக்குக் கூட எழுத்துமூலம் வருமானம் கிடைப்பதில்லை. பல படைப்பாளிகளின் வாழ்க்கை வரலாறு இதற்குச் சான்றாகும்.

புதுமைப்பித்தனோடு 'மணிக்கொடி'யில் படைப்பிலக்கிய முயற்சியில் ஈடுபட்டு, சிறந்த சிறுகதை எழுத்தாளர் என்ற புகழைப் பெற்றிருந்த கு.ப. ராஜகோபாலன் 1944-ல் வறுமை நிலையிலேயே இறந்துபோனார். அப்போது அவரது குடும்பத்துக்கு உதவி நிதி வசூல் செய்யப்பட்டது.

திறமைசாலிகளான எழுத்தாளர்கள் அவர்களது வாழ்நாளில் உரிய முறையில் கவனிக்கப்படாமல் விடப்பட்டு, அவர்கள் இறந்ததற்குப் பிறகு அவர்களை வியந்து பாராட்டி, விழா எடுத்து நிதி திரட்டி கவுரவிக்கிற போக்கைப் புதுமைப்பித்தன் வெறுத்தார்.

கு.ப.ரா. இறந்த பிறகு நிதி திரட்டும் முயற்சிகள் நடைபெற்ற காலத்தில், புதுமைப்பித்தன் நையாண்டியாக ஒரு கவிதை எழுதினார். 'ஓகோ உலகத்தீர்! ஓடாதீர்!' என்று. அதில் அவர் கூறினார்-

'ஐயா, நான்
செத்ததற்குப் பின்னால்
நிதிகள் திரட்டாதீர்!
நினைவை விளிம்புகட்டி
கல்லில் வடித்து
வையாதீர்!'

இப்படி 1944- ல் எழுதினார் அவர். 1948-ல் 'நான் நோயினின்று குணமடைவதற்காக யாழ்ப்பாணத்து எழுத்தாளர்களும் வாசகர்களும் எனக்குப் பண உதவி செய்ய முடியுமா?' என்றும்

'தமிழ்நாட்டுக்கு நான் செய்த சேவை தகுதியானது. மறுக்க முடியாதது. ஆனால் நான் இன்று சாகக் கிடக்கிறேன். வறுமையால் சாகக் கிடக்கிறேன். தமிழ் நாட்டாரைப் பார்த்து, நீங்கள் எனக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்க உரிமை உண்டு. என் நிலையைப்பற்றிப் பத்திரிகைகளுக்கு எழுதி உதவி தேடுங்கள்' என்றும்

நண்பர்களுக்கு எழுதவேண்டிய நிலைமைக்கு ஆளானார். இது மிகுந்த வேதனைக்கு உரிய விஷயம். வாழ்க்கையின் சோகநிலையை உணர்த்தும் உண்மை.

சாகும் நிலையில் படுக்கையில் கிடந்த புதுமைப்பித்தன் சிதம்பரத்திடம் ஒரு நாள் தெரிவித்தது இது: 'இலக்கிய ஆசை உனக்கு உண்டு. உன் முழுநேர உழைப்பையும் அதற்காகச் செலவழித்து விடாதே. இலக்கியத்தைத் தொழிலாகக் கொண்டு விடாதே. இது உன்னைக் கொன்றுவிடும். இலக்கியம் வறுமையைத் தான் கொடுக்கும்.'

நவயுகப் பிரசுராலயம் முதன் முதலாக வெளியிட்ட 'புதுமைப்பித்தன் கதைகள்' என்ற தொகுப்புக்குப் பேராசிரியர் ரா.ஸ்ரீ. தேசிகன் அருமையான முன்னுரை ஒன்று எழுதியிருந்தார். 'வாழ்க்கை முள்ளில் சிக்கி ரத்தம் சிந்தும் ஒரு சோக இதயத்தின் குரல்களை இக்கதைகளில் கேட்கிறோம்' என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

புதுமைப்பித்தனின் கதைகள் அப்படி என்றால், 'வாழ்க்கை முள்ளில் சிக்கி ரத்தம் சிந்திய சோக இதயத்தின்' அனுபவ பூர்வமான இறுதி எச்சரிக்கையாகவே கொள்ளவேண்டும், அவர் நண்பர் சிதம்பரத்துக்குச் சொன்ன அறிவுரையை.

தாராளமான நிதி உதவிகள்கூட அந்த இலக்கிய பிரம்மாவின் நிலைமையை மாற்றி அமைத்திருக்க இயலாதுதான். அவரே அதை உணர்ந்திருந்தார். சிதம்பரத்திடம் அவர் தெரிவித்தார்-

'நான் இப்போ எனக்கு வரப்போகிற மணியார்டரைத்தான் எதிர்பார்த்துக்கிட்டிருக்கேன். புரியவில்லையா? சாவைத் தானப்பா நான் மணியார்டரை எதிர்பார்ப்பதுபோல எதிர்பார்த்திருக்கேன்'.

அந்த 'மணியார்டர்' அவருக்கு வந்தது.

1948 ஜூன் 30-ஆம் நாள் இரவு புதுமைப்பித்தன் மரணம் அடைந்தார்.

# 3. சிறுகதைகள்

தமிழ்ச் சிறுகதைத் துறையில் பெரியதொரு புரட்சியை உண்டாக்கியவர் புதுமைப்பித்தன். அவருக்கு முன்பு மிக மெதுவாக வளர்ந்து வந்த தமிழ்ச் சிறுகதை சம்பிரதாய ரீதியிலேயே நடை போட்டுக் கொண்டிருந்தது.

அடுக்கடுக்கான சம்பவங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, மனிதனின் மேதையை, தெய்வீகத் துயரத்தை, வீரத்தை எல்லாம் கதைகளில் சித்திரித்துக் கொண்டிருந்தார்கள் சில எழுத்தாளர்கள். இலட்சியத்தை உருவாக்குவதும், சீர்திருத்த எண்ணங்களை வலியுறுத்து வதும் அவர்களது முக்கிய நோக்கமாக இருந்தது. வாழ்க்கையை அதன் சகல தன்மைகளிலும் இலக்கியத்தில் படம் பிடித்துக் காட்ட எழுத் தாளர்கள் முன்வரவில்லை.

1930-களில் சிறுகதை உலகில் ஒரு புதுயுகம் பிறந்தது.

அது குறித்து புதுமைப்பித்தன் இவ்வாறு விவரிக்கிறார்-

'ஒரு பேரலை எழுந்தது. அதில் தான் சிறுகதை தமிழில் பூரண வடிவம் பெற்றது. இதைச் சிறப்பாக மணிக்கொடி யுகம் என்று சொல்ல வேண்டும். இக்காலத்தில்தான் சிறுகதைக்கு இலக்கிய அந்தஸ்து ஏற்பட்டது. வாழ்வுக்குப் பொருள் கொடுப்பதுதான் கலை. சிறுகதை வாழ்வின் பல சூட்சுமங்களையும் எழுத்தில் நிர்மாணித்துக் காண்பித்தது. 'பரமசிவன் வந்து வந்து வரங்கொடுத்துப் போவான், பதிவிரதைக் கின்னல் வரும் பழையபடி தீரும்' என்றிருந்த நிலைமை மாறி, நிலாவும் காதலும் கதாநாயகனுமாக சோபித்த சிறுகதைகள் வாழ்வை, உண்மையை, நேர்நின்று நோக்க ஆரம்பித்தன'.

மனிதனின் மேன்மைகளை, உயர்ந்த பண்புகளை, இலட்சியங் களை மட்டுமல்லாது அவனது குறைபாடுகளை, குணக்கேடுகளை, சிறுமைகளை, சீரழிவுகளை, வக்கிரங்களை, மற்றும் மனித சமூகத்தின் அவலங்களை அக்கிரமப் போக்குகளை எல்லாம் கதைகளில் சித்திரித்துக் காட்ட வேண்டும் என்ற உணர்வு படைப்பாளிகளுக்கு ஏற்பட்டது. உலக இலக்கியத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்த சில எழுத்தாளர்கள், தமிழ்ச் சிறுகதையையும் உலக இலக்கியத்தின் தரத்துக்கு உயர்த்த வேண்டும் என்ற ஆசையோடு எழுதலானார்கள்.

'மனிதனின் சிறுமைகளை, தப்பிதங்களை, அதில் அவன் நாடும் வெற்றியை, இலக்கியமாக சிருஷ்டிப்பதற்கு, நல்ல கலைத்திறமையுடன் சிருஷ்டிப்பதற்கு வெகு காலம் சென்றது. வெள்ளி முளைத்தாற்போன்று சிறுகதை எழுதுகிறவர்கள் தோன்றி இருக்கிறார்கள். அவர்களுடைய எழுத்துக்கள், கற்பனைகள் எல்லாம் தமிழுக்குப் புதியவை. இந்த எழுத்தாளர்களின் கற்பனைகளில்யாவும் இடம் பெறுகின்றன' என்று புதுமைப்பித்தன் குறிப்பிட்டிருக்கிறார்.

இத்தகைய எழுத்தாளர்களின் தலைவராக விளங்கினார் புதுமைப் பித்தன். புதுமை வேகம், வாழ்க்கையைப்பற்றிய கூர்மையான பார்வை, ஒப்பற்ற சிந்தனை நுட்பம், பாத்திரப் படைப்பு, கதை மாந்தரின் மன நிலை சித்திரிப்பு, தனது எண்ணங்களை அழுத்தமாகவும் புதிய முறையில் நயமாகவும் கூறும் துணிச்சல், அபாரமான தன்னம்பிக்கை, தேர்ந்தெடுத்த கதைப் பொருள்கள், அவற்றுக்குக் கலை வடிவம் கொடுத்த நேர்த்தி, ஈடுஇணையில்லாத எழுத்தாற்றல், கையாண்ட நடை இவை காரணமாக அவரது கதைகள் தனித் தன்மையோடு விளங்கலாயின.

'என் கதைகளின் தராதரத்தைப் பற்றி 'எரிந்த கட்சி' 'எரியாத கட்சி' ஆடுகிறார்கள். அதற்குக் காரணம், பலர் இலக்கியத்தில் இன்னது தான் சொல்லவேண்டும், இன்னது சொல்லக் கூடாது என ஒரு தத்துவம் இருப்பதாகவும், அதை ஆதரித்துப் பேசுவதாகவும் மனப்பால் குடித்துக் கொண்டிருக்கலாம். உண்மை அதுவல்ல. சுமார் இருநூறு வருஷங்களாக ஒருவிதமான சீலைப்பேன் வாழ்வு நடத்திவிட்டோம். சில விஷயங்களை நேர்நோக்கிப் பார்க்கவும் கூசுகிறோம். அதனால் தான் இப்படிச் சக்கர வட்டமாகச் சுற்றி வளைத்துச் சப்பைக் கட்டு கட்டுகிறோம். குரூரமே அவதாரமான ராவணனையும், ரத்தக் களறியையும், மனக் குரூபங்களையும், விகற்பங்களையும் உண்டாக்க இடமிருக்குமேயானால், ஏழை விபசாரியின் ஜீவனோபாயத்தை வர்ணிப்பதாலா சமூகத்தின் தெம்பு இற்றுப்போகப்போகிறது? மேலும், இலக்கியம் என்பது மன அவசத்தின் எழுச்சிதானே? நாலு திசை களிலும் ஸ்டோர் குமாஸ்தா ராமன், சினிமா நடிகை சீதம்மாள், பேரம் பேசும் பிரமநாயகம்-இத்யாதி நபர்களை நாள் தவறாமல் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, இவர்களது வாழ்வுக்கு இடமளிக்காமல், காதல் கத்திரிக்காய் பண்ணிக்கொண்டிருப்பது போன்ற அனுபவத்துக்கு நேர்முரணான விவகாரம் வேறு ஒன்றும் இல்லை. நடைமுறை விவகாரங்களைப் பற்றி எழுதுவதில் கௌரவக் குறைச்சல் எதுவும் இல்லை' இப்படி புதுமைப்பித்தன் 'என் கதைகளும் நானும்' என்ற கட்டுரையில் தெளிவுபடுத்துகிறார்.

மரபுரீதியான, நிகழ்ச்சி அடுக்குகள் கொண்ட கதைகளைப் படித்துப் பழகிய வாசகர்களுக்கு புதுமைப்பித்தன் கதைகள் புரட்சி கரமாகவும் அதிர்ச்சிதரக்கூடியனவாகவும் இருந்தன. பெரும்பாலாருக்கு அவை புரியவுமில்லை. அவர் கையாண்ட நடையும் சாதாரண வாசகர் களை சிரமப்படுத்துவதாகவே அமைந்திருந்தது.

இதைப்பற்றியும் புதுமைப்பித்தன் விளக்கம் கூறியிருக்கிறார்-

'கருத்தின் வேகத்தையே பிரதானமாகக் கொண்டு வார்த்தைகளை வெறும் தொடர்பு சாதனமாக மட்டும் கொண்டு, தாவித் தாவிச் செல்லும் நடை ஒன்றை நான் அமைத்தேன். அது தமிழ்ப் பண்புக்கு முற்றிலும் புதிது. அதைக் கையாண்ட நானும் கல்வி கற்றதன் விளைவாக பாஷைக்குப் புதிது. இதனால் பலர் நான் என்ன எழுது கிறேன் என்பது பற்றிக் குழம்பினார்கள். சிலர் நீங்கள் எழுதுவது பொது ஜனங்களுக்குப் புரியாது என்று சொல்லி அனுதாபப் பட்டார்கள். அந்த முறையை நானும் சிறிது காலத்திற்குப் பிறகு கை விட்டு விட்டேன். காரணம், அது சௌகரியக் குறைவுள்ள சாதனம் என்பதற்காக அல்ல, எனக்குப் பல முறைகளில் கதைகளைப் பின்னிப் பார்க்க வேண்டும் என்ற ஆசையினால் அதைக் கைவிட்டு வேறு வழிகளைப் பின்பற்றினேன்'.

சிறுகதையில் புதுமைப்பித்தன் விதம்விதமான முறைகளில் சோதனைகளைச் செய்து வெற்றிகண்டவர். வாழ்க்கையை விசாலப் பார்வையோடு நோக்கி, பரந்த அளவில் ரகம் ரகமான பாத்திரங் களையும் கதைப் பொருள்களையும் கையாண்டு, மிக அருமையான கதைகளைப் படைத்திருப்பதில் புதுமைப்பித்தனுக்கு நிகரானவர் வேறு எவருமிலர்.

உலக இலக்கிய வளர்ச்சியைக் கூர்ந்து கவனித்து, சிறுகதை பற்றி ஆழ்ந்து சிந்தித்து, அவ்வழிகளில் தமிழ்நாட்டின் மக்கள் வாழ்க்கை, அவர்களுடைய மனநிலைகள் சம்பந்தமான புதுமைக் கதைகள் எழுதுவதில் அவர் அதிக அக்கறை கொண்டிருந்தார். அதனால், புதுமைப்பித்தன் கதைகளில் அநேகம் கதைகளே இல்லை; வெறும் 'ஸ்கெட்ச்சஸ்' (sketches)- வாழ்க்கைபற்றிய சொற்சித்திரங்கள்தான்- என்று விமர்சகர்கள் கருதுவது சகஜமாக இருக்கிறது. ஆனால், உலக இலக்கியப் போக்கின்படி அந்த விதமான எழுத்துக்களும் சிறு கதைகளே ஆகும்.

புதுமைப்பித்தன் நன்கு உணர்ந்து வேண்டுமென்றே கையாண்ட கதை உத்திகளில் இந்தப் போக்கும் அடங்கும். இதற்கு அவருடைய வார்த்தைகளே போதிய சான்று ஆகும்.

'அவற்றில் கதைக்கு உரிய கதைப் பின்னல் கிடையா. அவற்றிற்கு ஆரம்பம், முடிவு என்ற நிலைகளும் பெரும்பான்மையாகக் கிடையா. மன அவசத்தின் உருவகம் கதைகள் என்பதை ஒப்புக் கொள்வதனால் அவை கதைகள் ஆகும். இம்மாதிரியான முறையை அனுஷ்டித்து மேல் நாட்டில் கதைகள் பிரசுரமாவது சகஜம். அந்த முறையை முதல் முதலாகத் தமிழில் இறக்குமதி செய்த பொறுப்பு அல்லது பொறுப் பின்மை என்னுடையதாகும்'என்று அவர் கூறியிருக்கிறார்.

'என் கதைகளில் உள்ள கவர்ச்சிக்கு ஓரளவு காரணம் நான் புனைந்துகொண்ட புனைபெயராகும். அது அமெரிக்க விளம்பரத் தன்மை வாய்த்திருக்கிறது என்பதை இப்போது அறிகிறேன். பிறகு நான் எடுத்தாளும் விவகாரங்கள். பலர் வெறுப்பது; சிலர் விரும்புவது' என்றும்.

'பேரளவு துன்பத்தின் சாயை படியாது வெறும் உயிர்ப் பிண்டமாக வாழ்ந்த ஒரு வாலிபன், திடீர் என்று உலகத்தில் இயல்பாக இருந்துவரும் கொடுமைகளையும் அநீதிகளையும், சமூகத்தின் வக்கிர விசித்திரங்களையும் கண்டு, ஆவேசமாக, கண்டதைத் தனது மன இருட்டில் தோய்த்துச் சொல்லிய பேய்க்கனவுகளாகும்' என்றும் புதுமைப்பித்தன் தனது கதைகளைக் குறிப்பிடுகிறார்.

சமுதாயத்தின் அவலங்களை முதன் முதலாகக் கண்ட ஒரு கலை உள்ளத்தின் வேதனைகளாக அவர் கதைகள் பல அமைந்திருக்கின்றன. மனிதரின் சிறுமைகளையும், வக்கிரங்களையும், வாழ்க்கை முரண் பாடுகளையும் கண்டு பரிகசிக்கிற, கிண்டல் பண்ணுகிற, மனசின் குரல்களாக அநேக கதைகள் காணப்படுகின்றன.

'ஒரு தனிச் சம்பவம் அல்லது உணர்ச்சி அல்லது குணவிஸ்தாரம் அல்லது வர்ணனை எடுத்தாளப்படும் லிரிக் என்ற கவிதைப் பகுதி போல் சிறுகதை. சிறுகதையில் ரூபம் கதை எழுதுபவனின் மனோ தர்மத்தைப் பொறுத்தது' என்று கூறும் புதுமைப்பித்தன், தனிப்பாடல் போன்ற 'லிரிக்' ரீதியில் அநேகம் கதைகளை எழுதியுள்ளார். அவற்றுக் கெனச் சிறு சிறு வாக்கியங்களைக் கொண்ட தனி நடையையும் அவர் கையாண்டார்.

'தெரு விளக்கு' என்ற அவருடைய கதை இதற்கு நல்ல உதாரணமாக இருக்கிறது. தெரு விளக்கு ஒன்று நின்றது. அது தேவை இல்லை என்ற நிலை ஏற்பட்டது.

'இனிமேல் விளக்கு அந்தப் பக்கத்திற்கு வேண்டாமாம். இதை எடுத்துவிட வேண்டுமாம்!

அதற்கு ஒரு தோழன்-ஒரு கிழவன்.

ஒத்த வயதில்தானே நட்பு ஏற்படும்? இதில் என்ன அதிசயம்?

விளக்கிற்குக் கிழவன்.

கிழவனுக்கு விளக்கு.

விளக்கை எடுத்துவிடப் போகிறார்கள் என்று கிழவனுக்குத் தெரியாது.

அவனுக்கு எப்படித் தெரியும்?

அவன் வயிற்றுக்குப் பிச்சை எடுக்க வேண்டாமா?

வயிற்றுக்கு இல்லாமல் உயிர்வாழ முடியுமா?

தெரு விளக்கு அவன் தோழன்தான். அதன் வெளிச்சம் அவனுக்கு எவ்வளவு மன நிம்மதியை அளித்தது!

அன்று சாயங்காலம் வந்தான்.

வெறும் குழி ஒன்றுதான் இருந்தது.

இருள்! இருள்!

பற்றுக் கோலை யாரோ தட்டிப் பிடுங்கிக் கொண்ட குருடனின் நிலை!

அன்று அவனுக்கு உலகம் சூனியமாய், பாழ்வெளியாய், அர்த்த மற்றதாய் இருந்தது.

சாந்தி?

'அது எங்கிருந்துவரும்?'

இந்தவிதமாக, மிஷின் யுகம், பொன்னகரம், கவந்தனும் காமனும் போன்ற பல கதைகள் 'லிரிக்'கின் தன்மையில் அமைந்திருப்பதைக் காணலாம்.

இப்படிப்பட்ட கதைகளிலும் வாழ்க்கையின் யதார்த்தங்களை சுட்டிக்காட்டி, போகிற போக்கிலேயே தனது சிந்தனைகளையும் உரக்கச் சொல்லி, வாசகர்களையும் சிந்திக்கத் தூண்டுகிறார் புதுமை பித்தன்.

'நாகரீகத்தின் உச்சியைக் காணவேண்டுமென்றால், அந்த நகரத்தை, ஏன் எந்தப் பட்டணத்தையும், இரவில்தான் பார்க்க வேண்டும்'.

'பசி ஐயா பசி! பத்தும் பசி வந்திடப் பறந்துபோம் என்று வெகு ஒய்யாரமாக. உடம்பில் பிடிக்காமல் பாடுகிறீரே! அங்கு நீர் ஒரு நாள் இருந்தால், உமக்கு அடிவயிற்றிலிருந்து வரும் அதன் அர்த்தம்!'

இருட்டில் விபசாரம் நடப்பதை சுட்டிக்காட்டி, 'நாசூக்காகக் கண்ணை மூடவேண்டாம். நீங்கள் போட்டிருக்கிறீர்களே பாப்ளின் ஷர்ட்டு, உங்கள் ஷெல்பிரேம் கண்ணாடி, எல்லாம்அவர்கள் வயிற்றில் இருக்கவேண்டியதைத் திருடியதுதான்.'

இப்படிக் குத்தலாக உண்மைகளை அங்கங்கே சிதறிச் செல்வது அவருடைய பாணி.

'கண்கள் இருப்பது எதையும் பார்ப்பதற்குத்தான் என்ற இரும்புத் தத்துவம் பெற்றிருக்க வேண்டும்' என்று குறிப்பிடும் அவர், கண் களால் கண்டவற்றை எல்லாம் கதைகளில் எடுத்துச் சொல்ல வேண்டியதுதான் என்ற கொள்கையைக் கொண்டிருந்தார்.

அதனால்தான், நோயாலும் பசியாலும் கஷ்டப்படுகிற புருஷனுக்குப் பால்கஞ்சி வார்ப்பதற்காக இருட்டில் ஒரு சந்தில் ஒரு அந்நியனுடன் மறைந்து சோரம்போய் முக்கால் ரூபாய் சம்பாதிக்கிற மில் கூலி அம்மாளுவையும் ('பொன்னகரம்'.)

இருட்டுப் பாதையில் நின்று, வழியோடு போகிறவனை, 'என்னய்யா சும்மா போரே? வாரியா?' என்று கூப்பிடும் தெரு விபசாரியையும் ('கவந்தனும் காமனும்'), அவர் தனது கதைகளில் அறிமுகப்படுத்தினார்.

அந்தக் காலத்தில் இந்தப் போக்கு வெகு துணிச்சலானது, புரட்சி கரமானது என்பதில் சந்தேகம் இல்லை. இக்கதைகள் மிகுந்த எதிர்ப்பையும், கண்டனத்தையும், வெறுப்பையும் பெற்றன. எனவே தான், மனிதனின் சிறுமைகளையும், தப்பிதங்களையும், வக்கிர விசித்திரங்களையும் கதைகளில் சித்திரிப்பது குற்றமோ பாபமோ ஆகாது என்று புதுமைப்பித்தன் வாதாட வேண்டியதாயிற்று.

அந்நாட்களில் இதர எழுத்தாளர்கள் தொடத் தயங்கிய விஷயங்கள் பலவற்றையும் புதுமைப்பித்தன் தனது கதைகளுக்குப் பொருளாக்கி, தனது நோக்கில், அனுதாபத்தோடு அல்லது கேலியும் நையாண்டியுமாக, அல்லது நம்பிக்கை வறட்சியோடு எழுதினார்.

விதவைகளுக்கு மறுமணம், கலப்புத் திருமணம் ஆகியவை சீர்திருத்த நோக்குடன் பிரசாரம் செய்யப்பட்டு வந்த காலம் அது. அந்தச் சமயத்தில், கலப்புத் திருமணத்தைப் பரிகசிப்பதுபோல் அவர் 'கோபாலய்யங்காரின் மனைவி' என்ற கதையை எழுதினார்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் 'சந்திரிகை' என்றொரு நாவல் எழுதியிருக்கிறார். முற்றுப்பெறாத நாவல் அது. கோபாலய்யங்கார் என்ற டெப்டி கலெக்டருக்கும், வீரேசலிங்கம் பந்துலு வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த மீனாட்சி என்ற இடைக்குலப் பெண்ணுக்கும் நடந்த கலப்பு மணம்பற்றி பாரதியார் வர்ணித்திருக்கிறார்.

'கதையின் போக்கு கண்டதும் காதல் என்ற கோபாலய்யங்காரின் இலட்சியத்துடன்-ஏன், பிரமை என்றும் கூறலாம்-முடிவடைகிறது. முடிவுபெறாத இரண்டாவது பாகத்தில் வருணிப்பாரோ என்னவோ? மனிதன் 'காதல் பெண்ணின் கடைக்கண் பணியிலே' அனலை விழுங்கலாம்; புளித்த குழம்பையும், குழைந்த சோற்றையும் உண்ணச் சம்மதிப்பானோ என்னவோ? பின் கதையை என் போக்கில் எழுதுகிறேன். பாரதியின் போக்கு இப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்பதில்லை' என்ற முன்னுரையுடன் புதுமைப்பித்தன் கதையை சுவாரஸ்யமாக வளர்த்திருக்கிறார்.

கண்டதும் காதல், கலப்பு மணம் என்பதெல்லாம், கல்வித் தரமும் உணவுப் பழக்க வழக்கங்களும், வாழ்க்கைப் பண்புகளும் மிகவும் முரண்பட்டவையாக இருக்கிற ஜோடிகளிடையே எப்படிப் பொருந்தா மணமாக ஆகிப்போகிறது என்பதை அவர் கிண்டலாகச் சித்திரித்துக் காட்டுகிறார் இந்தக் கதையில்.

புதுமைப் பித்தன் கலப்புத் திருமணத்தின் எதிரி அல்ல. வாழ்க்கையில் இப்படிப்பட்ட முரண்பாடுகளும் இருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டி கேலிபண்ணுவதில் அவருக்கு விருப்பம் அதிகம் இருந்தது என்றே சொல்ல வேண்டும்.

மத மாற்றம், அதனால் பாதிக்கப்பட்ட இந்துக் குடும்பத்தின் நிலைமை. அதைச் சேர்ந்த தனிநபர்களின் போக்குகள் இவற்றை விவரிக்கும் 'புதிய கூண்டு' புதுமைப்பித்தனின் சிறந்த கதைகளில் ஒன்று. அதிலும் கலப்பு மணம் நிகழ்கிறது. அதில் வருகிற பெண் உயர்ந்தவள்; படித்தவள்; பண்பு மிக்கவள்.

'கோபாலய்யங்காரின் மனைவி' கதையில் வருகிற மீனாட்சி படிப்பும் பண்பும் பெற்றிராத பணிமகள். அவளால் மாமிசக் குழம்பும் காரவகைச் சாப்பாடும் இல்லாமல் நாள் கழிக்க முடியவில்லை. அவள் கணவனுக்கு அது ஒத்துவரவில்லை. ஆகவே அவள் திருட்டுத்தனமாகத் தனது சாப்பாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதில் ஈடுபடுகிறாள்.

ஆனால், 'புதிய கூண்டு' கதையில் வருகிற கிறிஸ்துவப் பெண் ஜயா படித்தவள், புத்திசாலி, பண்பு உடையவள், அவள், தன்னை மணப்பதற்காகக் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து தனது வீட்டுக்கே வந்து

விட்ட பிராமண இளைஞன் கிட்டுவை நிரந்தரமாகத் தன்னுடைய வனாக ஆக்கிக் கொள்ள ஆசைப்படுகிறாள். அதற்காக அவனுக்கு மாமிச உணவைப் பழக்கிவிட விரும்புகிறாள். கறிவடை தயாரித்துக் கொடுக்கிறாள்.

அதைக் கடித்து,வித்தியாசம் உணர்ந்த கிட்டு, இது என்ன என்று கேட்டான்.

'ஒரு புன்சிரிப்புடன் தன்னுடைய வாயில் ஆட்காட்டி விரலை வைத்துக் கொண்டு இரகசியமாக அவள் 'கறிவடை' என்றாள்.'

'ஜயா! உன் காதல் எனக்குப் போதாதா? நான் ரப்பரையுமா தின்னவேண்டும்?' என்று பரிதாபகரமாகச் சிரித்தான் கிட்டு.

சட்டென்று அவன் முகம் மாறியது. வடைகளை அப்படியே சிதறிவிட்டு, 'போ! போ' என்று இரைந்தான்.

ஜயாவிற்கு நெஞ்சில் வாள்கொண்டு குத்தியமாதிரி இருந்தது. அவனுடைய நிலையைக் கண்டு வெளியே சென்று விட்டாள்.

அவள் அன்று இரவு தலைவிரிகோலமாக தலைவாசல்படியில் படுத்துக்கிடந்தது அவனுக்குத் தெரியாது. வீட்டில் உள்ளவர்களுக்கும் தெரியாது. அன்றிலிருந்து அவளும் மாமிச உணவு தொடுவதில்லை.

ஆகவே, விட்டுக்கொடுக்கும் மனப்பண்பு அந்தப் பெண்ணுக்கு இருந்தது; அதனால் அவள் மணவாழ்வில் வெற்றி காண முடிந்தது என்பதை இக்கதை மறைமுகமாக அறிவிக்கிறது.

மதமாற்றம் செய்வதற்காக கிறிஸ்தவ சமயத்தினர் கையாளும் செயல்முறைகளையும், அம் மதத்தினுள்ளேயே இருக்கிற இரண்டு பிரிவுகளுக்கிடையே நிலவும் போட்டியையும், இந்து மதத்தைச் சேர்ந்த வர்களின் சுயநலமான-மனிதாபிமானம் இல்லாத-போக்கையும், அன்பு நிறைந்த அண்ணன் தம்பியர் மத உணர்வு காரணமாக வெறியர் களாய், விரோதிகளாய் மாற நேர்வதையும், 'புதிய கூண்டு' வர்ணிக் கிறது. அந்நிலையிலும் அந்தப் பெண் உயர்ந்த பண்போடு நடந்து கொள்கிறாள். இதை புதுமைப்பித்தன் அழகாக விவரிக்கிறார் கதையில்.

கிட்டு, அம்பி இருவரின் தாயான மீனாட்சி அம்மாள் மரணப் படுக்கையில் கிடக்கிறாள். கிறிஸ்தவனாகிவிட்ட கிட்டு, மனைவி ஜயாவுடன் அவளைக் காண வருகிறான். அம்பி அவனைப் பழிக் கிறான். கிட்டுவும் கோபமாகப் பேசுகிறான். அவர்கள் தர்மம் பற்றி சண்டை போட்டுக் கொண்டிருக்கையில், 'தெய்வமே, நீ இருக் கிறாயா?...இதுதான் தர்மமா?' என்று புலம்பியவாறு உயிரை விடுகிறாள் தாய்.

'போ, வெளியே!' என்றான் அம்பி.

'என் தாய்!' என்றான் கிட்டு.

அப்போது ஐயா உள்ளே தைரியமாக நுழைந்தாள். 'இந்த இடத்திலா சண்டை? நீங்கள் ஆண்பிள்ளைகளா?' என்றாள்.

ஓடிச் சென்று மீனாட்சியம்மாளை மடிமீது எடுத்துக்கிடத்திக் கொண்டு கதறினாள்.

கிட்டுவைக் கொடுத்த புனிதமான சரீரம் அல்லவா?

அம்பிக்கு என்ன? அவன் தைரியசாலி; அறிவின் தராசு.

இவள் செய்கை இருவர் மனசிலும் ஒரு சாந்தியைக் கொடுத்தது.

அவள் பெண்; உணர்ச்சிவசப்பட்டவள். மதம் அவளுக்குத் தெரியாது. அம்பிக்கு அவள் செய்கை அவன்முன் அவளைப் பெரிய புனிதவதியாக்கியது.

மெதுவாக சரீரத்தைக் கிடத்திவிட்டு, கிட்டுவின் பக்கத்தில் வந்து நின்று கொண்டு, 'போய் வருகிறோம்' என்றாள்.

'நீ ஒரு ஹிந்துப் பெண்' என்றான் அம்பி.

'நான் கிட்டுவின் மனைவி' என்றாள் ஐயா.

'கிட்டு...' என்று என்னவோ சொல்ல வாயெடுத்தான் அம்பி. அதற்குள் இருவரும் சென்று விட்டார்கள்.'

இப்படி முடித்துவிடுகிறார் கதையை. வாழ்க்கையின் விசித்திரங் களையும், மனிதரின் விந்தைப் போக்குகளையும், முரண்பாடுகளையும் கதைகளாகச் சித்திரிப்பதுதான் புதுமைப்பித்தனின் நோக்கமாக இருந்தது என்று சொல்லலாம்.

மதத்தின்,தெய்வத்தின், தத்துவங்களின் பெருமைகளைப் பேசிக் கொண்டே பொழுதுபோக்குகிற பெரிய மனிதர்களின் வேஷங் களையும் செயல்முரண்களையும் அவர் தனது கதைகளின் மூலம் எடுத்துக் காட்டத் தயங்கவில்லை. 'கொடுக்காப்புளி மரம்' 'நியாயம்', 'வாழ்க்கை' போன்றவை இந்த ரகமானவை.

'கொடுக்காப்புளி மரம்' நாயகர் ஜான் டென்வர் சுவாமிதாஸ் அய்யர் 'கர்த்தரின் திருப்பணியைத் தமது வாழ்க்கையின் ஜீவனாம் சமாகக் கொண்டவர். உலகத்தின் சம்பிரதாயப்படி பக்திமான். எத் தனையோ அஞ்ஞானிகளைக் குணப்படும்படியும், என்றும் அவியாத கந்தகக் குழியிலிருந்து தப்பவைத்தும், மோட்ச சாம்ராஜ்யத்திற்கு வழி

தேடிக் கொடுத்திருக்கிறார். நல்லவர். தர்மவான். ஞாயிற்றுக் கிழமைகளில் கோவிலுக்குச் செல்வார். புதிய ஏற்பாட்டில் மனுஷகுமாரனின் திருவாக்குகள் எல்லாம் மனப்பாடம்.'

அப்படிப்பட்டவர் தம்து வீட்டுக் காம்பவுண்டில் நின்ற கொடுக்காப்புளி மரத்தின் பழங்களை ஒரு ஏழை விதவைக்கு நாள் குத்தகைக்கு விட்டுக் காசு பெற்று வந்தார். ஒருநாள் ஒரு பிச்சைகாரக் குழந்தை, கீழே விழுந்துகிடந்த பழங்களை ஆசையோடு பொறுக்கியது. ஒரு பழத்தை வாயில் வைத்தது. அதனால் கோபம் கொண்ட சுவாமிதாஸ் கையிலிருந்த தடிக்கம்பை குழந்தையின் மீது எறிந்தார். குழந்தை இறந்து விட்டது.

குழந்தையின் கூட வந்திருந்த தந்தை பெர்னாண்டஸ் அந்தக் கைத் தடியை எடுத்து, கிழவர் சுவர்மிதாஸ் மண்டையில் அடித்தான். அவரும் செத்துவிடுகிறார். பிறகு, பிச்சைக்காரனைக் கைது செய்தார்கள். 'கிழவர் அடித்தது எதிர்பாராத விபத்தாம். பெர்னாண்டஸ் கொலைகாரனாம்!' என்று நியாயத்தீர்ப்பில் உள்ள முரண்பாட்டையும் சுட்டுகிறார் புதுமைப்பித்தன்.

'நியாயம்' என்ற கதையில், பெஞ்சு மாஜிஸ்திரேட் பதவி வகிக்கும் 'தேவஇரக்கம் நாடார்' மதபக்தி கொண்டவர். 'பைபிளை இந்த உலகத்துக்கே சரியான ஓர் இந்தியன் பீனல் கோடாகவே மதித்தார்.' கோர்ட்டில் அவர்முன் ஒரு வழக்கு வந்தது. காயம்பட்ட குதிரையைக் கட்டி ஓட்டியதாக ஒரு வண்டிக்காரன் மீது கேஸ்.

குற்றத்தைக் கேட்டுத் தாங்கமுடியாத கோபம்கொண்ட தேவ இரக்கம் அவனை விசாரித்தார்.

'வயித்துக்கொடுமை, இனிமேல் இப்படி நடக்காது சாமி. ஒரு தலை, தரும தொரைக மன்னிக்கணும்' என்று அந்த ஏழை கெஞ்சினான்.

அவர் மனம் இரங்கவில்லை. '5 ரூபா அபராதம், தவறினால் ஒரு மாதம் சிறை' என்று தீர்ப்புக் கூறினார்.

வண்டிக்காரன் ஓடிவந்து அவர் காலைப் பிடித்துக்கொண்டு, 'தருமதொரைகளே! இந்த ஒரு தடவை மன்னிக்கணும்!, புள்ளை குட்டி வயத்துலே அடிக்காதிங்க' என்று அழுது அரற்றினான்.

அவர் அவனை விரட்டினார். கோர்ட் ஆர்டர்லி வண்டிக் காரனை இழுத்துக் கொண்டு போனான்.

அன்று இரவு தேவ இரக்கம் முழங்கால்படியிட்டு ஜெபம் செய்தார். வழக்கம்போல். 'எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்;

நாங்களும் எங்களிடம் கடன்பட்டவர்களுக்கும் மன்னிக்கிறோமே' என்று பிரார்த்தித்தார்.

'அந்த அஞ்ஞானி வண்டிக்காரனைப் பற்றி அவருக்கு ஞாபகமே யில்லை!' என்று கதையை முடிக்கிறார் புதுமைப்பித்தன்.

இத்தகைய முரண்பாடு-பேசுவது ஒன்றும் செய்வது வேறாகவும் இருக்கிற போக்கு-சகல தரத்தினர் வாழ்விலும் காணப்படுவதை அவருடைய கதைகள் எடுத்துக்காட்டுகின்றன.

பிரம்ம ஞான சபையைச் சேர்ந்த பெரிய மனிதர்கள் சிலர் வாழ்க்கைபற்றியும், பேதங்கள் குறித்தும் உயர்ந்த தத்துவங்களைப் பேசி மகிழ்கிறார்கள். 'வாழ்க்கை' என்ற கதையில். திடீரென்று பெரும் மழை பிடித்துக் கொள்கிறது. பயந்து, ஒதுங்கி நிற்பதற்காக ஒரு குளுவச்சி, குழந்தையுடன் அவர்கள் நின்ற பொது இடத்திற்கு ஓடிவருகிறாள். 'சீ, மூதேவி, இங்கே எங்கே வந்து ஏறுதே, ஓடிப்போ' என்று விரட்டு கிறார்கள், பேதங்கள் இல்லாத நிலைபற்றிப் பெரும் பேச்சுப் பேசியவர்கள்.

மனித வாழ்க்கையே முரண்பாடுகள் நிறைந்ததுதான். சுயநல நோக்குடன் செயல்புரிகிறவர்களின் போக்கில் மட்டும் தான் முரண் பாடுகள் நிலவும் என்றில்லை. எதிர்பாராத இடங்களில், எதிர் பாராத சந்தர்ப்பங்களில், எதிர்பார்க்க முடியாத நபர்களின் மன நிலைகளிலும் முரண்பாடு தலைகாட்டும்; சில மனிதர்களை அதிசயமான முறைகளில் செயல்புரியும்படி செய்யும். வாழ்க்கையில் காணக் கிடக்கிற இந்த நியதியையும் புதுமைப்பித்தன் கதைகள் சில அழகாக எடுத்துக் காட்டுகின்றன.

கொள்ளை அடிப்பதையே தொழிலாகக் கொண்டவன் சங்குத் தேவன். அந்தக் கொள்ளைக்காரனை எண்ணி, பயந்து பயந்து நடந்த கிழவியிடம் பேச்சுக் கொடுத்து, அவளது நிலைமையை அறிந்து கொள்கிறான். அவன் தன் பணப்பையை அவளுக்குத் தந்து, 'இதை வச்சுக்க, முதல் பேரனுக்கு என் பேரிடு-சங்குத் தேவர்னு' என்று கூறுகிறான். 'இதுவும் ஒரு வேடிக்கைதான்' என்று தானே எண்ணிக் கொள்கிறான் (சங்குத் தேவன் தர்மம்).

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட புரட்சிக்காரன் ஒருவன் எழுதியவற்றைப் பறிமுதல் செய்கிறார் ஜெயில் சூப்பிரண்ட் பரமேஸ் வரம். அக் காகிதங்களைப் படித்து அவன் எழுத்தினால் வசீகரிக்கப் படுகிறார். புரட்சிக்காரனை சந்திப்பதற்காக இருட்டில் துணிந்து வந்த அவன் காதலியிடம் காகிதக் கத்தையைக் கொடுத்து அவளைப் போகச்

சொல்கிறார். புரட்சிக்காரனின் எழுத்தைக் காப்பாற்றிய பிறகு, 'பறிமுதல் செய்யப்பட்ட காகிதக் குப்பை உளறல்களாக இருந்ததால் அழிக்கப்பட்டது' என்று ரிப்போர்ட் எழுதிவிடுகிறார் ('பறிமுதல்')

வாழ்க்கை விசித்திரமானது; அதில் எதுவும் நடக்கலாம்; மனிதர்கள் பிறர் எதிர்பாராத வகையில் செயல்புரிந்துவிடுகிறார்கள் என்பதை இத்தகைய கதைகள் விவரிக்கின்றன. அதுபோன்ற சந்தர்ப்பங்களில், மனிதனின் குணமாண்புகள் எடுப்பாகப் பிரகாசிப்பதையும் புதுமைப் பித்தன் சில கதைகளில் பதிவு செய்திருக்கிறார்.

வறுமையால் கஷ்டப்படுகிற ரங்கநாதம், சம்பளத்தை எதிர் பார்த்து, மாசக் கடைசிநாளில் சம்பளம் தரப்படாததால் ஏமாற்றம் அடைந்து, தெரிந்தவர் ஒருவரிடமிருந்து எட்டணா கடன் வாங்கி வருகிறார். அந்தக் காசுக்கு வீட்டில் ஏகப்பட்ட செலவுகள் காத்திருக் கின்றன. இருப்பினும், அவருடைய நண்பன் ராகவன் வீடு தேடி வந்து அவரிடம் எட்டணா கடனாகக் கேட்டதும், என்றும் கேட்காத மனிதன் கேட்கிறானே என்று அந்தக் காசை நண்பனிடம் கொடுத்து விடுகிறார். நாம் இருப்பதைவைத்து ஒப்பேற்றலாம் என்று மனைவியிடம் சொல்கிறார் ('மேல்பூச்சு')

புதுமைப்பித்தன் மனித நேய மாண்பைச் சுட்டுவதற்காக இந்தக் கதையை எழுதினார் என்பதைவிட, மத்தியதர வர்க்க மனிதர்கள் உள்ளுக்குள் எவ்வளவு சிரமப்பட்டாலும், வெளிப் பகட்டாகச் செயல் புரியவேண்டிய கட்டாயம் சில சமயங்களில் நேரிட்டுவிடுகிறது என்று காட்டவே இதை எழுதியிருக்க வேண்டும் என்றும் சொல்லலாம். 'மேல்பூச்சு' என்ற கதைத் தலைப்பு இதைத்தான் உணர்த்துகிறது.

ஆனால், 'சொன்ன சொல்' கதையில் வருகிற சுப்பையாப் பிள்ளையின் செய்கை மனித குணத்தின் உன்னதத்தை வெளிப்படுத்து வதாகவே இருக்கிறது.

உமையொருபாகன் பிள்ளை என்ற நண்பர் நடு இரவில் வந்து காலைப் பிடித்துப் புலம்பிக் கேட்டார் என்று சுப்பையாப்பிள்ளை தனது சொந்தப் பணம், கடன் வாங்கிய பணம், தன் நிலத்தை விற்று வந்த பணம் அனைத்தையும் சேர்த்து ஏழாயிரம் ரூபாய் கொடுத்து உதவினார். ஆனால் அந்த மனிதன் பண நெருக்கடி தாங்கமுடியாது. வைரத்தைப் பொடித்துத் தின்று இறந்து போனார். சுப்பையாப்பிள்ளை தன்னுடைய மீதிச் சொத்து முழுவதையும் விற்றுத் தனது கடன்காரர் களுக்குக் கொடுத்துவிடுகிறார். 'வாக்குதான் சொத்து-பணவிஷயம்' என்பது அவர் கருத்து. சொன்ன சொல்லை காப்பாற்றிய மகிழ்ச்சியோடு அவர், ஏழுமாதக் கர்ப்பணியான மனைவியை

அழைத்துக் கொண்டு, சொந்த ஊரைவிட்டு வெளியேறுகிறார். அவருக்காக ஊரே கண்ணீர் வடிக்கிறது ('சொன்ன சொல்')

இதற்கு நேர்மாறாகச் செயல்புரிகிறவர்களும் மனிதரிடையே உண்டு என்பதை அவருடைய 'நியாயம்தான்' என்ற கதைமூலம் அறியலாம்.

வடலூர் குமாருபிள்ளை, கடன்காரர்களிடமிருந்து தப்பி விடுவதற்காக ஐ.பி. கொடுத்து விட்டு கொழும்பு சென்றார். அங்கே சிரமப்பட்டு, ஒரு கடையில் வேலையாளாகச் சேர்ந்து, பிறகு சொந்தக் கடை வைத்து வளர்ச்சி பெற்றார். அங்கும் பண நெருக்கடி பயங்கரமாக ஏறவும், ஒரு யுக்தி செய்து, தந்திரத்தைக் கடைப்பிடித்து, நம்பியவர்களை ஏமாற்றி அவர் பெரும் பணக்காரர் ஆகிவிட்டார். இந்தக் கதையை புதுமைப்பித்தன் தனக்கே உரிய நடையில் எழுதி, முடிவில் சிந்தனை அடுக்குகளை முன் வைக்கிறார்:

'மூலதனம் பெறுவதற்கு வடலூர்ப்பிள்ளை செய்தது சரியா தப்பா? சந்தர்ப்பத்தை உபயோகித்துக்கொண்டார். அப்புறம் நாணயஸ்தராக இருந்தாரே! முதலில் அவர் கை ஒய்ந்து கிடக்கும் பொழுது அவரை நசுக்கிப் போடவேண்டுமென்று, சமூகம் என்ற தனித்தன்மையற்ற ஒன்று நினைத்ததே! அவர் செய்தது தவறானால், முதலில் அவர் ஐ.பி. போடவேண்டிய நிலைமையை ஏற்பட வைத்தது மட்டும் சரியா?'

இதை ஆசிரியரின் வாதம் ஆக அவர் கதையில் சேர்க்கவில்லை. 'ஒய்ந்து சள்ளுச் சள்ளென்று இருமும் காலத்திலும் வடலூர்ப் பிள்ளைக்கு ஒயாத வேதாந்தமாகிவிட்டது இந்த மாதிரிப் பேச்சு' என்று கதையின் முடிவாக வைத்துவிட்டார் அவர். அதன் மூலம் வாசகரின் சிந்தனைக்கு வேலை கொடுத்துவிட்டார் என்று கூறலாம்.

வாழ்க்கைக் கொடுமைகளில் மிகவும் கொடுமையானது வறுமை. வறுமைநிலை மனிதர்களைப் பாடாய்ப் படுத்துகிறது. இல்லாமை யினால் பாதிக்கப்பட்ட பலரக மனிதர்களும், அவர்களது மனநிலை களும், வாழ்க்கை முறைகளும் புதுமைப்பித்தனால் யதார்த்தமாகவும் உருக்கமாகவும் கதைகளில் சித்திரிக்கப்பட்டுள்ளன.

கணவனுக்குப் பால்கஞ்சி வார்ப்பதற்காக சோரம்போன 'பொன்னகரம்' அம்மாளு; தெருவில் நின்று விபசாரத்துக்கு அழைக்கிற 'கவந்தனும் காமனும்' தொழிற்காரி; ஒவ்வொரு நாளையும் ஓட்டு வதற்காக என்னென்னவோ செய்தும், பேசியும், தேடி வருகிறவர்களிடம் கடன் வாங்கியும் வாழ்கிற 'ஒரு நாள் கழிந்தது' கதை நாயகரான எழுத்தாளர்; வாழ்வுநாள் பூராவும் உழைத்தும் உயர்வடைய முடியாமல் அவதிப்பட்டு அல்லலுறும் 'தியாகமூர்த்தி' கதையின்

ராமசாமிப் பத்தர்; வாழ்க்கை முழுவதும் இல்லாமையோடும் நோயாளி மனைவியோடும் உழன்று, மனைவிக்குத் தேவைப்படுகிற உதவிகளை எல்லாம் செய்து சிரமப்படும் 'செல்லம்மாள்' கதையின் பிரமநாயகம் பிள்ளை போன்றோர் வாழ்க்கையின் உண்மைத் தன்மையைப் பிரதிபலிக்கும் உயிர்ச் சித்திரங்கள்.

'செல்லம்மாள்' புதுமைப்பித்தனின் சிறந்த கதைகளில் முக்கியமான ஒன்று. திறமையாக எழுதப்பட்டுள்ள, சோகரசம் ததும்பும், வாழ்க்கைச் சித்திரம் அது. மத்தியதர வர்க்கத்து உழைப்பாளி மனிதனின் ஆசைகளையும் கனவுகளையும் ஏக்கங்களையும் யதார்த்த வாழ்க்கை நிலைமைகளையும் உள்ளது உள்ளபடி கூறுகிறது அது.

மத்தியதர வர்க்க மனிதர்களின் இயல்புகளையும், ஆசைகளையும், செயல்முறைகளையும், இயலாமையையும் வர்ணிக்கும் மற்றும் சில கதைகளை புதுமைப்பித்தன் உருவாக்கியிருக்கிறார். 'மனித யந்திரம்', 'சுப்பையாப் பிள்ளையின் காதல்கள்' ஆகியவை இவ்வகையில் சேரும். 'நியாயம் தான்' கதையில் விவரிக்கப்படுகிற வடலூர்ப்பிள்ளையும் மத்தியதர வர்க்க இயல்புகளைப் பிரதிபலிக்கிறவர்தான். ஆனால், அவர் துணிந்து, தந்திர யுக்திகளைக் கையாண்டு பணக்காரர் ஆகி விட்டார்.

'மனித யந்திரம்' மீனாட்சிசுந்தரம் பிள்ளை இந்த வர்க்கத்தின் சரியான பிரதிநிதியாகவே இருக்கிறார். நாற்பத்தைந்து ஆண்டுகள் ஒரே கடையில் வேலைக்கிருந்து, உப்புப் புளி வியாபாரம் செய்து, உள்ளுக்குள் பெரிதாக ஆசைக் கனவுகள் வளர்த்து வருகிறவர்தான்.

'கால்மேல் கால்போட்டு 'ஏ மீனாட்சி' என்று தாம் அழைக்கப் படுவதுபோல் தம் இஷ்டப்படி ஆட ஒரு மீனாட்சியும், ஸ்டோர் கடையும் கைக்குள் வரவேண்டும். ஒருமுறை கொழும்புக்குப் போய் விட்டு, தங்க அரைஞாண், கடிகாரச் சங்கிலி, வாட்டசாட்டமான உடம்பு, கையில் நல்ல ரொக்கம், கொழும்புப் பிள்ளை என்ற பட்டம் முதலிய சகல வைபவங்களுடனும் திரும்பவேண்டும். தெருவில் எதிரே வருகிறவர் எல்லாரும் துண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு, பல்லை இளித்தவண்ணம்' மரியாதை செய்ய வேண்டும் என்றெல்லாம் மனக் கோட்டை கட்டிய மீனாட்சிசுந்தரம் பிள்ளை கடைசி நேரத்தில் செயல் துணிவு இல்லாதவர் ஆகிவிடுகிறார்.கடையிலிருந்து பணத்தை எடுத்துக் கொண்டு, ரயில் நிலையம் போய், டிக்கட் எடுத்து, ரயிலிலும் ஏறி உட்கார்ந்துவிட்டார் அவர். அவ்வேளையில் அவருக்கு இயல்பான பய உணர்வு அவரை நடுங்க வைக்கிறது. கடைக்கே திரும்பி விடுகிறார். எடுத்த பணத்தை கல்லாப் பெட்டியில் வைத்துவிட்டு, டிக்கெட் வாங்கிய காசுக்காக 'மீனாட்சி பற்று பதினொன்றே காலணா'

என்று கணக்கு எழுதி விட்டு, வழக்கம்போல் மனித யந்திரமாகி விடுகிறார்.

பழக்கத்துக்கு அடிமையாகிப்போனவன் அதிலிருந்து விடுபட முடியாது என்பதை அழுத்தமாகச் சித்திரிக்கிறது இந்தக் கதை. அது நற்பழக்கமாகவும் இருக்கலாம்; நற்பழக்கம் ஒரு பொன் விலங்கு ஆகிப் போகிறது; விலங்கு எதனால் செய்யப்பட்டிருந்தாலும், அடிமைத் தனத்துக்கு ஆளாக்கிவிடுகிற விலங்கு விலங்குதானே!

'சுப்பையாப்பிள்ளையின் காதல்கள்' வேறுவகை உணர்ச்சிகளை ரசமாகச் சொல்கிறது. வீரபாண்டியன்பட்டணத்து சுப்பையாப்பிள்ளை ஜீவனோபாயத்திற்காக சென்னைக்கு வந்து, எப்படி எப்படியோ வளர்ந்து, தாம்பரத்திலிருந்து பீச் ஸ்டேஷனுக்கு தினசரி பிரயாணம் செய்யும் யந்திரரீதியான வாழ்க்கையை மேற்கொண்டவர். அவருடைய ஒரு நாள் பயணத்தையும், அவரது மன ஓட்டங்களையும், இடைவழி ஸ்டேஷன் ஒன்றில் ஏறி, அவருக்கு எதிரே உள்ள ஸீட்டில் அமர்ந்து, ஏதோ ஒரு ஸ்டேஷனில் இறங்கி மறைந்த ஒரு யுவதி அவருள் ஏற்படுத்திய சலனங்களையும், அவர் மனம் பின்னிய கனவுகளையும் நயமாக வர்ணிக்கிறது இந்தக் கதை.

மத்தியதர வர்க்க மனிதர்களின் ஆசைகளையும், ஏமாற்றங் களையும், வாழ்க்கை சோகங்களையும் நுணுக்கமாக வர்ணிக்கிற புதுமைப்பித்தன் கதைகளில் ஒரு பொதுத் தன்மை பின்னிக் கிடக்கிறது. 'செல்லம்மாள்', 'சுப்பையாப்பிள்ளையின் காதல்கள்' போன்ற கதைகளில் இது நன்றாகப் பிரதிபலிக்கப்பட்டிருக்கிறது. இக் கதை மாந்தர்கள் திருநெல்வேலிக்கும் அப்பால் உள்ள ஊர்களிலிருந்து ஜீவனோபாயத்துக்காக சென்னை வந்து சேர்ந்தவர்கள். பாடுபட்டுப் பணம் சேர்த்துக் கொண்டு சொந்த ஊர்ப்பக்கம் போக வேண்டும் என்ற எண்ணம் வளர்ப்பவர்கள். கால ஓட்டத்தில் குடும்பச்சுமை பெருகப் பெருக, சொந்த ஊரின் பக்கம் ஒரு தடவைகூடப் போய்வர இயலாமல் போனவர்கள். பெண்களுக்கு நல்ல மாப்பிள்ளை பார்த்துத் திருமணம் செய்து வைக்க வேண்டும்; அதற்காக ஊருக்குப் போக வேண்டும் என்று எண்ணியும் பேசியும் திட்டமிட்டும், செயலில் நிறைவேற்ற முடியாமலே வாழ்க்கை பாரத்தினால் அழுத்தப் படுகிறவர்கள். கதை ஆசிரியரின் உள்ளத்தின் ஏக்கத்தைப் பெரும் அளவுக்குப் பிரதிபலிக்கிற பாத்திரங்கள் இவை என்று சொல்ல வேண்டும். அத்துடன், பட்டணம் சேர்ந்து பணம் பண்ணிவிடலாம் என்று ஆசைப்பட்டு, வாழ்க்கையையே கடினமான சிலுவையாகச் சுமக்க நேரிட்டுவிடுகிற மத்தியதர வர்க்கக் குடும்பத்தினரின் நிலையை உள்ளது உள்ளபடி சித்திரிக்கும் படப்பிடிப்புகளும்கூட. கால காலமாக-இன்றும்கூட-நிலைமை அப்படித்தான் இருக்கிறது.

வாழ்க்கை மனிதனை யந்திரமாக மாற்றிவிட்டபோதிலும், மனித உணர்ச்சி முற்றாக மழுங்கிப்போவதில்லை. சில சமயம் அது விழித்துக் கொண்டு, இவனும் மனிதன்தான் என்று உணர்த்தத் தவறுவதுமில்லை. இதை நிரூபிக்க 'மிஷின் யுகம்' என்ற கதையை சிருஷ்டித்துள்ளார் புதுமைப்பித்தன். மிஷின் மாதிரிச் செயல் புரிந்துகொண்டிருக்கிறான் ஓட்டல் செர்வர். திடீரென்று, 'ஸார், உங்கள் கைக்குட்டை கீழே விழுந்துவிட்டது' எனக் கூறி, அதை எடுத்துக் கொடுத்துத் தனது மனிதத் தன்மையைக் காட்டிக் கொள்கிறான்.

வாழ்க்கையின் அவலங்களையும், சமூகக் கொடுமைகளையும்; உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் தாழ்ந்த நிலையில் வசிக்க நேரிட்டிருப்பவர்களை வஞ்சிப்பது, சிறுமைக்கும் சீரழிவுக்கும் உள்ளாக்குவது, அநியாயமாகத் தண்டிப்பது முதலிய செயல்கள் புரிவதையும், பொருளாதார ரீதியில் அடுத்தவனை ஏமாற்ற சதித் திட்டங்கள் தீட்டுவதையும் 'நாசகாரக் கும்பல்' 'துன்பக்கேணி' ஆகிய கதைகள் உணர்ச்சியோடு விவரிக்கின்றன.

அந்நாளைய கிராம சமூகத்தின் நியதிகளையும், கட்டுப் பாடுகளையும், சாதி உணர்வு ஆதிக்கத்தையும், பாதிக்கப்படுகிற தாழ்த்தப்பட்ட இனத்தினர் மதம் மாறிப் புது வாழ்வு பெற முயல் வதையும் 'நாசகாரக் கும்பல்' உணர்த்துகிறது. மேல் தட்டு மக்களின் ஆக்கினைகளால் பாதிக்கப்படும் உழைப்பாளிகளின் துயரங்களையும், பிழைப்புக்காக இலங்கைக்குப் போய் அங்கே தேயிலைத் தோட்டங்களில் ஆண்களும் பெண்களும் அனுபவிக்கிற துயரங்களையும் சிறுமைகளையும் சீரழிவுகளையும் 'துன்பக் கேணி' உருக்கமாகக் கூறுகிறது.

ஆண் பெண் உறவுகளையும், உணர்வுகளையும் அடிப் படையாக்கி புதுமைப்பித்தன் எழுதியுள்ள கதைகள் மரபு மீறலை அடி நாதமாகக் கொண்டிருக்கின்றன. விதவையை வைத்து அவரும் கதைகள் எழுதியிருக்கிறார். ஆனால் அவர் பார்க்கிற கோணமே வேறு என்று தான் சொல்ல வேண்டும்.

சரசு விதவைப் பெண். வீட்டில் நடைபெறுகிற கல்யாண விசேஷமும் அது சம்பந்தப்பட்ட சடங்குகளும் அவளது நினைவு களையும் உணர்ச்சிகளையும் கிளறிவிடுகின்றன. நெடுநாளாக அவளைக் கவனித்து வருகிற அன்பன் அவளுக்கு ஆறுதல் கூற முற்படுகிறான். அவளை மணந்து கொள்ளவும் முன் வருகிறான். அவள் அவன் செயலை தியாகத்தின் வெளிப்பாடாகக் கருதுகிறாள். அதை ஏற்க மறுக்கிறாள்.

'உமது தியாகத்தின் பலிபீடமாகத்தான் நீர் என்னை கருதுவீர். அது எனக்கு வேண்டாம். நான் காதலைக் கேட்கவில்லை. நான் தேடுவது பாசம்' என்கிறாள் சரசு.

'அது என்னிடம் இருக்கிறது' என்று அவன் சொல்ல, 'அப்படியானால் திருமணம் வேண்டாம். பாசம் இருந்தால் போதும்' என்று சொல்லி அவள் தலை குனிந்தாள்.

'இரகசியம் பாபம் அல்லவா? கல்யாணம் இதை நீக்கி விடுமே?'

'எனக்கு உமது தியாகம் வேண்டாம். உமது பாசம் இருந்தால் போதும்.'

'நீ ஒரு பரத்தை!'

'உமது தியாகத்திற்கு நான் பலியாகமாட்டேன். அதில் எப்பொழுதும் உமக்கு இந்தக் காலத்து நன்மதிப்பு ஏற்படும். தைரியசாலி என்பார்கள். அதை எதிர்பார்க்கிறீர். நான் பரத்தையன்று. நான் ஒரு பெண். இயற்கையின் தேவையை நாடுகிறேன்' என்றாள் அவள்.

அவன் மனம் கலங்கி விலகிப் போகிறான். மறுநாள் அவள் பிரேதம் கிணற்றில் மிதந்தது என்று புதுமைப்பித்தன் கதையை முடிக்கிறார்.

இந்தக் கதையின் பெயர் 'வாடா மல்லிகை.' விதவையாகி விட்ட போதிலும் ஒரு பெண், தனது இயற்கையின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக, ஒரு ஆணுடன் திருமணம் புரிந்து கொள்ளாமலே பாசப் பிணைப்பு பெற விரும்புகிற எண்ணமே அந் நாட்களில் வெகு துணிச்சலான சிந்தனையே ஆகும். இன்றைய சமூகத்தில்கூட அது சகஜமான நிகழ்ச்சி என்று ஏற்றுக் கொள்ளப் படுவதில்லை.

'வழி' என்றொரு கதை. அதில், விதவைப் பெண் அலமு, அந்த நிலைமையினால் குமுறிக் கொதிப்படைகிறாள். 'ஒவ்வொரு நிமிஷமும் நெருப்பாக தகிக்கும் சதி அல்லவா வைதவ்யம்' என்று புழுங்குகிறாள். எதிர் வீட்டில் கணவனும் மனைவியும் உல்லாசமாகப் பழகுவதைப் பார்த்து உணர்ச்சிவசப்பட்டு வீட்டினுள் வந்து படுக்கையில் விழுகிறாள். அங்கே கிடந்த கொத்துச் சாவியில் உள்ள முள்வாங்கி மார்பில் குத்தி, அவள் நெஞ்சின் பாரம் போக ஒரு 'சின்ன வாசல்' செய்கிறது. அவள் எழுப்பிய அலறல் கேட்டு தந்தை ஓடி வருகிறார். இரத்தம் பெருகுவதைக் கண்டு பதறுகிறார். அவளோ 'இந்த இரத்தத்தை அந்த பிரம்மாவின் மூஞ்சியில் பூசிடுங்கோ. வழியை அடைக்காதீர்கள்' என்று கூறியபடி உயிரை விடுகிறாள்.

பொருந்தாத் திருமணம் விஷயத்திலும், பெண் பிறர் எதிர் பார்க்கிறபடி நடந்துகொள்ளவேண்டும் என்கிற கட்டாயம் எதுவும் இல்லை; அவள் நினைப்பும் போக்கும் தனித் தன்மை உடையதாக இருக்கவும்கூடும் என்று புதுமைப்பித்தன் உணர்த்துகிறார். 'கல்யாணி' என்ற கதை இதற்கு நல்ல சான்று ஆகிறது.

கல்யாணி ஒரு கிழவருக்கு இளையதாரமாக வாழ்க்கைப்பட்டவள். அவரிடம் அவளுக்கு இன்பம் கிடைப்பதில்லை. அத்துடன், அவர் சதா மூத்த தாரத்தின் புகழ்பாடி இவளைக் குறை கூறுவதில் சந்தோஷம் காண்பவராகவும் இருக்கிறார். அவ்வூருக்கு வந்த ஓவியர் சர்மா அவர்கள் வீட்டில் தங்குகிறார். கல்யாணியின் நிலைமை அவருடைய அனுதாபத்தைத் தூண்டுகிறது. அவள் அழகு அவரது அன்பையும் ஆசையையும் கிளறுகின்றது. ஒரு நாள் அதிகாலையில் ஆற்றங்கரையில் அவ் இருவருக்கும் உறவு ஏற்படுகிறது. அவளை தன்னுடன் வரும் படியும், எங்காவது தூரத்து ஊரில் போய் இருவரும் சந்தோஷமாக வாழலாம் என்றும் சர்மா அழைக்கிறார். கல்யாணி அதற்கு இசைய வில்லை. ஆனால் அவரை அங்கேயே தங்கிவிடும்படி கோருகிறாள். அவர் போய்விடுகிறார்.

மனிதர்கள் உணர்ச்சிவசப்படுகிறவர்கள். அவர்கள் இந்த விதமாத் தான் செயல்புரிவார்கள்-செயல் புரியவேண்டும்-என்று திட்ட வட்டமாக யாரும் கணித்துவிட இயலாது. இதை வாழ்க்கை நிரூபித்துக் கொண்டிருக்கிறது. இந்த உண்மையை புதுமைப்பித்தன் தனது கதைகள் மூலம் பிரதிபலிக்கிறார் என்று கூறலாம். ஆண் சிங்கம், சணப்பன் கோழி போன்ற கதைகளும் இதற்கு உதாரணம் ஆக அமையும்.

உலக இலக்கியத்தில், பேய் பிசாசுகளைக் கதைப் பொருளாகக் கொண்டு பயங்கரக் கதைகளும் நாவல்களும் ஏராளமாகத் தோன்றி உள்ளன. அந்தப் போக்கைப் பின்பற்றி புதுமைப்பித்தன் தமிழில் பயங்கரக் கதைகள் பலவற்றை எழுதியிருக்கிறார்.

பயம் எனும் உணர்ச்சி மனிதர்களை எப்படி எல்லாமோ ஆட்டு விக்கிறது. பேய் பிசாசுகள் பற்றிய நம்பிக்கையை வளர்க்கிறது. இந்த உணர்வை ஆதாரமாக்கி, மக்களின் நம்பிக்கையை அடித்தளமாக்கி, சொற்களைக்கொண்டு கலைத் திறமையோடு பின்னப்பட்ட கதை 'காஞ்சனை.' புதுமைப்பித்தனின் சிறந்த சிறுகதைகளுள் இதுவும் ஒன்று. பேய் ஒரு வீட்டில் வேலைக்காரியாக வந்து வசிப்பது, அந்த வேலைக் காரியை முற்றாக நம்பிவிடும் மனைவியின் இயல்புகள், புதியவளை சந்தேகிக்கிற கணவனின் பயமும் குழப்பங்களும் முதலியவற்றை திறமையாக வர்ணிக்கும் கதை. இப்படி நடக்குமா என்பதைவிட,

இப்படி நிகழவும்கூடும் என்று நம்பவைக்கிற விதத்தில் கதையை வளர்த்திருப்பது ஆசிரியரின் திறமைக்கு வெற்றி ஆகும்.

அதேபோல, பிரம்ம ராக்ஷஸ், செவ்வாய் தோஷம், வேதாளம் சொன்ன கதை, காளிகோயில், ஞானக் குகை, கபாடபுரம் ஆகிய கதைகளும் மனிதர்களின் பய உணர்வை அடிப்படையாகக்கொண்ட கதைகள்தான். இவற்றில் 'பிரம்ம ராக்ஷஸ்' கம்பீரமான நடையையும் வளமான கற்பனையையும் கொண்டு தனி அழகுடன் விளங்குகிறது. 'வேதாளம் சொன்ன கதை' நையாண்டித் தன்மை பெற்றிருக்கிறது. இக்கதைகள் எல்லாம் நுணுக்கமான சூழ்நிலை விவரிப்பும், மனித உணர்ச்சிகளை அழுத்தமாக வர்ணிக்கும் நடைநயமும் ஏற்று, கதைகளை ரசனைக்கு விருந்து ஆக்குகின்றன.

கதை சொல்லும் முறையில் விதம்விதமான உத்திகளைக் கையாண்டு வெற்றி கண்டுள்ள புதுமைப்பித்தன் பழைய பாணி களிலும் சுவாரஸ்யமான புதுக்கதைகளை உருவாக்கியிருக்கிறார். விக்கிரமாதித்தன் கதைப் பாணியில் 'கட்டிலை விட்டிறங்காக் கதை' என்றும், புராண ரீதியில் 'இலக்கிய மம்ம நாயனார்' புராணம் என்றும், பஞ்சதந்திரக் கதைமாதிரி மிருகங்களைக் கதா பாத்திரங்களாக்கி 'எப்போதும் முடிவிலே இன்பம்' என்றும் அவர் கதைகள் உருவாக்கி உள்ளார். அவருக்கே இயல்பான கேலியும் நையாண்டியும் இவற்றில் தலைதூக்கி நிற்கின்றன.

தனக்குள் தானே பேசிக் கொள்கிற தன்மையில்-மனமே ஒரு கதையைக் கூறுகிற முறையில்-'விநாயக சதுர்த்தி' எழுதப்பட்டுள்ளது. புறச் சூழ்நிலை வர்ணிப்பும், அங்கு நிகழ்கிற செயல்களின் விவரிப்பும் கதைக்கு கலைத்தன்மை சேர்த்துள்ளன.

புராண, இதிகாச மற்றும் காவியங்களில் இடம் பெற்றுவிட்ட கதாபாத்திரங்களையும் நிகழ்ச்சிகளையும் எடுத்துக் கொண்டு, கால நிலைகளுக்கும் எழுதுகிறவரின் மனோதர்மத்துக்கும் புதிய நோக்கிற்கும் ஏற்ப மாற்றியும், திருத்தியும், அழகுபடுத்தியும் எழுதுவது இலக்கிய உலக மரபு ஆக இருந்து வருகிறது. புதுமைப்பித்தனும் இவ்வழியில் பழைய கதைகளை அவருடைய இஷ்டத்துக்குத் தகுந்தபடி புதிதாகப் புனைந்திருக்கிறார். அகல்யை, சாப விமோசனம், அன்று இரவில் ஆகியவை இந்த வகையைச் சேர்ந்தவை.

அகல்யை கதை இந்திய மொழிகள் பலவற்றிலும் அநேக கவிஞர் களாலும், நாடக மற்றும் கதை ஆசிரியர்களினாலும் புதிய புதிய கோணங்களில் புனைந்து எழுதப்பட்டிருக்கிறது. தமிழிலும் பல வெற்றி

கரமான படைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. புதுமைப்பித்தனின் 'அகல்யை' முற்றிலும் தனிரகமானது.

இக்கதையில் சாபமும் கிடையாது. சாபத்துக்கு விமோசனமும் உரைக்கப்படவில்லை. கௌதமர் வாழ்வும் இந்திரன் லீலையும் அழகிய முறையில் கதையாக்கப்பட்டுள்ளது. கௌதமர் இந்திர நாடகத்தையும் அகல்யை ஏமாந்துவிட்டதையும் அறிகிறார். அவர் கோபம் கொள்ள வில்லை. அவர் பெரிய ஞானி; பண்பட்ட மகாத்மா. இந்திரனையும் அகல்யையும் மன்னித்துவிடுகிறார்.

'அப்பா இந்திரா, உலகத்துப் பெண்களை சற்று சகோதரிகளாக நினைக்கக்கூடாதா?' என்று இந்திரனைக் கேட்கும் அவர், 'கண்ணே அகல்யா, அந்தச் சமயத்தில் உனது உடலுமா உணர்ச்சியற்ற கல்லாய் சமைந்துவிட்டது?' என்று அகல்யையிடம் பரிவுடன் கூறுகிறார்.

இவ்வரிகள் அத் தவசிரேஷ்டரின் தெய்வீக உள்ளத்தை புலப் படுத்துகின்றன.

பல வருடங்களுக்குப் பிறகு, புதுமைப்பித்தன் அகல்யை கதைக்கு வேறொரு திருப்பம் கொடுத்து எழுதினார். 'சாப விமோசனம்' எனும் சிறந்த கதை அது. இப்படிக் கதையை மாற்றி எழுதியபோது, 'பழைய கதைகளை எடுத்துக் கொண்டு அவற்றை இஷ்டமான கோணங் களிலெல்லாம் பார்க்க எங்களுக்கு உரிமை உண்டு' என்று அவர் அழுத்தமாகக் குறிப்பிட்டார்.

'சாப விமோசனம்' எழுதப்பட்டிருக்கும் முறையிலும், நடை நயத்திலும், பாத்திரங்களின் தன்மைகளிலும், உள்ளடக்கத்திலும் அழகும் சிறப்பும் பெற்றுத் திகழ்கிறது. கதையின் ஆரம்பமே எடுப்பும், மிடுக்கும், தனி வனப்பும் கொண்டுள்ளது.

'சாலையிலே ஒரு கற்சிலை. தளர்ந்து நொடிந்துபோன தசைக் கூட்டத்திலும், வீரியத்தைத் துள்ளவைக்கும் மோகன வடிவம். ஓர் அபூர்வ சிற்பி பூலோகத்திலே இதற்காகவென்றே பிறந்து தன் கனவை எல்லாம் கல்லில் வடித்துவைத்தானோ என்று தோன்றும். அவ்வளவு வாகிரியை ஊட்டுவது. ஆனால் அந்தப் புதுமையின் கண்களிலே ஒரு சோகம்-சொல்லில் அடைபடாத சோகம்-மிதந்து, பார்க்கின்றவர்களின் வெறும் தசை ஆசையான காமத்தைக் கொன்று அவர்களையும் சோகத்தில் ஆழ்த்தியது. அது சிற்பியின் அபூர்வக் கனவு அன்று, சாபத்தின் விளைவு. அவள்தான் அகலிகை.'

இதிலிருந்து சொல் அழகோடும் கற்பனை மிடுக்கோடும் கதை வளர்கிறது. ராமன் கால் தூசி பட்டதும் கல்சிலை உயிர்பெறுகிறது.

'எப்போதோ ஒரு நாள் நின்று கல்லான இதயம் சிலையுள் துடிக்கிறது. போன போன இடத்தில் நின்று இறுகிப்போன ரத்தம் ஓட ஆரம்பிக்கிறது. கல்லில் ஜீவ உஷ்ணம் பரவி உயிருள்ள தசைக் கோளமாகிறது. பிரக்ஞை வருகிறது. கண்களை மூடித்திறகிறாள் அகலிகை. பிரக்ஞை தெரிகிறது. சாப விமோசனம்! சாப விமோசனம்!

சாப விமோசனத்துக்குப் பிறகு வாழ்வு பற்றிய மலைப்பு கௌதமனுக்கு ஏற்படுகிறது. அகலிகை மனமும் மிரளுகிறது. ஆனால் ராமன் மனநிலை?

'ராமனுடைய கல்வி, தர்மங்கள் கொண்டு பார்த்தது, தெளிவின் ஒளிபூண்டது. ஆனால் அனுபவச் சாணையில் பட்டை பிடிக்காதது. வாழ்வின் சிக்கலின் ஒவ்வொரு நூலையும் பின்னலோடு பின்னல் ஓடியாமல் பார்த்த வசிஷ்டனுடைய போதனை. ஆனால் சிறுமையை அறியாதது. புது வழியில் துணிந்து போக அறிவுக்குத் தெம்பு கொடுப்பது.'

'உலகத்தின் தன்மை என்ன, இப்படி விபரீதமாக முறுக்கேறி உறுத்துகிறது? மனசுக்கும் காரண சக்தியின் நிதானத்துக்கும் கட்டுப் படாமல் நிகழ்ந்த ஒரு காரியத்துக்கா பாத்திரன் மீது தண்டனை?' என்று நினைக்கிறான் ராமன்.

'எவ்வளவு இலேசான, அன்புமயமான, துணிச்சலான உண்மை!' என்று இரண்டு ரிஷிகளும் குதூகலிக்கிறார்கள்.

சாப விமோசனத்துக்குப் பின்னர், அகலிகை, கோதமன் இருவர் உள்ளத்திலும் அமைதி இல்லை; வாழ்க்கையில் ஆனந்தம் இல்லை.

'அவள் மனசில் ஏறிய கல் அகலவில்லை. தன்னைப் பிறர் சந்தேகிக்காதபடி, விசேஷமாகக் கூர்ந்து பார்க்கக்கூட இடங்கொடாத படி நடக்க விரும்பினாள். அதனால் அவள் நடையில் இயற்கையின் தன்மை மறந்து இயல்பு மாறியது. தன்னைச் சூழ நிற்பவர்கள் யாவருமே இந்திரர்களாகத் தென்பட்டார்கள். அகலிகைக்கு பயம் நெஞ்சிலே உறையேறிவிட்டது. அந்தக் காலத்திலிருந்த பேச்சும் விளையாட்டும் குடியோடிப் போயின. ஆயிரம் தடவை மனசுக்குள் திரும்பித் திரும்பிச் சொல்லிப் பாடம் பண்ணிக்கொண்டு, அந்த வார்த்தை சரிதானா என்பதை நாலு கோணத்திலிருந்தும் ஆராய்ந்து பார்த்துவிட்டுத்தான் எதையும் சொல்லுவாள். கோதமன் சாதாரணமாகச் சொல்லும் வார்த்தைகளுக்குக் கூட உள்ளர்த்தம் உண்டோ எனப் பதைப்பாள். வாழ்வே அவளுக்கு நரக வேதனையாயிற்று.'

அதில் மேலும் வேதனைக்ள் ஏற்படும்படி மற்றவர்கள் நடந்து கொண்டார்கள்.

கோதமனது சித்தாந்த ஆராய்ச்சி புதுவிதமாக அமைந்தது. 'அவனுடைய மனசில் அகலிகை மாசு அற்றவளாகவே உலாவினாள். தனக்கே அருகதை இல்லை. சாபத்தீயை எழுப்பிய கோபமே தன்னை மாசுபடுத்திவிட்டது என்று கருதினான்.'

ராமனது பட்டாபிஷேகம் தடைப்பட்டது. அவன் காட்டுக்குப் போனான். ராமன் தம்பியும் தொடர்ந்தான். சீதையும் போய்விட்டாள். தசரதன் உயிரிழந்தான். இவற்றை அறிந்த அகலிகையின் மன வேதனைக்கு அளவே இல்லை.

'முன்பு கற்சிலையாகிக் கிடந்தபோது மனசு இருண்டு கிடந்த மாதிரி ஆகிவிட்டது. ஆனால் மனப்பாரத்தின் பிரக்ஞை மட்டும் தாங்க முடியவில்லை.'

அவள் கோதமனுடன் மிதிலைக்குப் போனாள். அங்கே அவர்களின் மகன் சதானந்தன் வசித்தான். மிதிலையிலும் அமைதி கிட்டவில்லை. இருவரும் பதினான்கு வருட காலம் எங்கெங்கோ சுற்றித் திரிந்தார்கள். 'ராமன் திரும்பிவிடுவான், வாழ்வின் வசந்தகாலம் பிறக்கும் என்ற ஆசையோடு' அயோத்திக்குத் திரும்பினார்கள்.

ராமனும் சீதையும் வந்துவிட்டார்கள். அகலிகையைக் காண இருவரும் ஆசிரமத்துக்கு வந்தார்கள்.

'ராமனது நெற்றியில் அனுபவம் வாய்க்கால் வெட்டியிருந்தது சீதையின் பொலிவு அனுபவத்தால் பூத்திருந்தது. இருவர் சிரிப்பின் லயமும் மோகஷுலாகிரியை ஊட்டியது.'

சீதை தான் அனுபவித்தவற்றை எல்லாம் அகலிகையிடம் சொன்னாள். அக்கினி பிரவேசம் பற்றியும் சொன்னாள். அகலிகை துடித்து விட்டாள்.

'அவர் கேட்டாரா? நீ ஏன் செய்தாய்?' என்று கேட்டாள்.

'அவர் கேட்டார், நான் செய்தேன்' என்றாள் சீதை, அமைதியாக.

'அவன் கேட்டானா?' என்று கத்தினாள் அகலிகை.

அகலிகைக்கு ஒரு நீதி, அவனுக்கு ஒரு நீதியா? ஏமாற்றா? கோதமன் சாபம் குடலோடு பிறந்த நியாயமா?

'உலகத்துக்கு நிரூபிக்க வேண்டாமா?' என்று கூறி, மெதுவாகச் சிரித்தாள் சீதை.

'உள்ளத்துக்குத் தெரிந்தால் போதாதா? உண்மையை உலகுக்கு நிரூபிக்க முடியுமா?' என்றாள் அகலிகை.

'நிரூபித்துவிட்டால் மட்டும் அது உண்மையாகிவிடப் போகிறதா, உள்ளத்தைத் தொடவில்லையானால்? நிற்கட்டும். உலகம் எது?' என்றாள் அகலிகை.

வெளியே சென்றிருந்த கோதமனும் ராமனும் திரும்பிவிட்டார்கள். சீதை மட்டும் வெளியே வந்தாள். அகலிகை வரவில்லை.

'ராமன் மனசைச் சுட்டது. காலில் படிந்த தூசி அவனைச் சுட்டது.'

இருவரும் போய்விட்டார்கள். கோதமன் உள்ளே நுழைந்தான். அவன் மனக்குகையில் மின்வெட்டும் யோசனைகள்.

'அகலிகைக்கு பிரக்ஞை மருண்ட நிலை. மறுபடியும் இந்திர நாடகம். மறக்கவேண்டிய இந்திர நாடகம் மனத்திரையில் நடந்து கொண்டிருந்தது.'

கோதமன் அவளைத் தழுவினான்.

கோதமன் உருவில் வந்த இந்திர வேடமாகப்பட்டது அவளுக்கு. அவள் நெஞ்சு கல்லாய் இறுகியது. என்ன நிம்மதி!

கோதமன் கைக்குள் சிக்கிக்கிடந்தது ஒரு கற்சிலை.

அகலிகை மீண்டும் கல்லானாள்.

மனச்சுமை மடிந்தது.

'கோதமன் கைலயங்கிரியை நாடிச் சென்றான், துறவியாக.'

அகலிகையின் மன உளைச்சலையும், முடிவையும் அற்புதமாகச் சித்திரிக்கும் கலைப்படைப்பு 'சாப விமோசனம்.' தமிழில் படைக்கப் பட்டுள்ள சிறந்த சிறுகதைகளில் இதுவும் ஒன்று. பக்கத்துக்குப் பக்கம் புதுமைப்பித்தனின் எழுத்தாற்றல் வெகு நேர்த்தியாக ஒளிவீசுவதை ரசிகர்கள் உணரமுடியும். இடையிடையே வருகிற ஜனகன்-கோதமன் உரையாடலும், அகலிகை-கைகேயி பேச்சும் அரிய சிந்தனை வீச்சுக்களாக ஒளிர்கின்றன.

இதேபோன்று மற்றுமொரு உயரிய சிருஷ்டி, 'அன்று இரவில்.' பழைய புராணக் கதையின் புது மெருகுப் படைப்பு. இதிலும் புதுமைப் பித்தனின் படைப்புத்திறனும் எழுத்தாற்றலும் நன்கு பிரகாசிக்கின்றன.

சிவபக்தரான மாணிக்கவாசகர் வாழ்க்கையில் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிற 'நரியைப் பரியாக்கிய புராண'க் கதையையும், சிவ பெருமான் திருவிளையாடல்களில் ஒன்றான 'பிட்டுக்கு மண்சுமந்த கதை'யையும் இணைத்து, அற்புதமான ஒரு சொல் ஓவியம் படைத் திருக்கிறார் புதுமைப்பித்தன்.

'நான்மாடக்கூடலில் அன்றிரவு மூவர் உறங்கவில்லை' என்று தொடங்கி, சொக்கேசன், அரிமர்த்தன பாண்டியன், 'உலகின் துயரத்தை வேதனையைச் சுமக்கிற' வாதவூரர் (மாணிக்க வாசகர்) ஆகியோரின் நினைப்புகளையும், இறைவனின் திருவிளையாட்டையும் புதுமையான போக்கில் அவர் எழுதியிருக்கிறார். கருத்து நயமும், அதற்கேற்ற சொல்லாட்சி நிறைந்த நடையும் இக்கதைக்குத் தனித் தன்மை சேர்த்துள்ளன.

இதில் காணப்படுகிற நடையின் வேகம், ஆழம், அழகு ஆகியவற்றைக் காட்ட ஒரு சிறு உதாரணம் குறிப்பிடலாம்-

'வாதவூரனாக ஈசன் வேதனை கொண்டான். அவன் மனம் என்ற சர்வ வியாபகமான காலம் கொல்லாத சர்வ மனம் நைந்தது, குமுறியது, கொப்பளித்தது, வாதவூரனாகக்கிடந்து வெம்பியது. குதிரை எனக் காட்டி ஏமாற்றி வந்துவிட்ட செயலுக்காக, தானும் அந்த மனிதனைப் போல சிட்சை பெற்றால்தான் ஆறும். வாதவூரன் தன் அருகில் வந்தால், அவன் அருகில் தான் இருக்க லாயக்கு என நினைத்தான்.

'வேதனை சுமந்த கழுத்துடன் ஆலவாய்க் கர்ப்பக் கிருகத்திலிருந்து வெளிவந்தது ஓர் உருவம். ஈசன் வெளிவந்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். எங்கே பார்த்தாலும் வெள்ளம். மதுரை மூதூரை ஊர் என்று அறியமுடியாதபடி ஆக்கிவிட்டது வெள்ளம். ஈசன் நடந்தான். ஈசன் சிரித்தான். ஈசன் வெள்ளத்தில் நீந்தி விளையாடி முக்குளித்துக் கும்மாளி போட்டுக் கொண்டிருந்தான்.'

'அசுரப் பசிபோலச் சுழித்தோடும்வெள்ளத்தில் மீன் போலப் புரண்டு, முழுகி முக்குளித்து விளையாடினான். வெள்ளத்தில் படம் விரித்துச் சீறிக் கொண்டு நீந்திச் செல்லும் நாகசர்ப்பம் மாதிரி எதிர்த்து நீந்துவான். ஆனந்த வெள்ளத்தில் மிதக்கும் யோகியைப் போலச் சுகாசனமிட்டு வெள்ளத்தின் போக்கில் மிதந்துவருவான். திரும்பவும் வாலடித்துத் திரும்பும் முதலையைப் போலக் கரைநோக்கி வருவான். பிறகு மீன்கொத்திப் புள் மாதிரி கைகளைத் தலைக்குமேல் வீசி கோபுரம் போலக் குவிய நீட்டிக் கொண்டு உயரப் பாய்ந்து தலைகுப்புற ஜலத்தைக் கிழித்துக் கொண்டு மறைந்துவிடுவான். ஜனங்கள் செத்தானோ என்று பயப்படும்போது மறுகரையில் தலை தெரியும். பிறகு சீறிவரும் பாம்பு மாதிரி நீந்தித் திரும்புவான்.'

விளையாடிவிட்டுத் திரும்பினான் ஈசன். அவனுக்காகக் காத்திருந்த அன்னை அங்கயற்கண்ணியின் 'நெஞ்சு சுரந்தது; ஈசனின் வேதனை அவிந்தது.' ஆனால், வாதவூரன் நிலை?

'வாதவூரன் நெஞ்சில் வெள்ளம் அடங்கவில்லை. வழிநடையும் தூரந்தான்' என்றான் ஈசன்.

கதையை வளர்த்துச் செல்கையில் ஒரு புதிய உத்தியாக, பழந்தமிழ் உரையாசிரியர்கள் கதைமாந்தரின் தன்மைகள் குறித்தும், நிகழ்ச்சிப் போக்குபற்றியும், வருவது உணர்ந்து முன்னரே எடுத்துரைப்பது போலவும் தங்களுக்குள் உரையாடுவதாகப் புதுமைப் பித்தன் எழுதி இருப்பது கதையின் தனித் தன்மையை அதிகப் படுத்துகிறது.

கடவுள்பற்றிய புதுமைப்பித்தன் சிந்தனைகள் சுவாரஸ்யமானவை; அறிவொளி நிறைந்தவை. ஒரு கட்டுரையில் அவர் இப்படி எழுதி இருக்கிறார்-

'ஒரு கூட்டத்தின் பாதுகாப்புக்கு அது அவசியமானால் ஒரு பொய்யைச் சொல்லித்தான் கடவுள் என்ற பிரமையை சிருஷ்டித்தால் என்ன? இந்தக் கடவுள் விஷயம் ரொம்ப சுவாரஸ்யமானது. அது தனி மனிதனுக்கு ஒரு தைரியத்தைக் கொடுக்கிறது. சமூகத்திற்கு ஒரு சக்தியைக் கொடுப்பதுபோல. நாஸ்திகம் தர்க்கத்தில் நிஜமாக இருக்கலாம். அது சுவாரஸ்யமற்றது. வாழ்க்கையில் ஒரு பிடிப்பை ஏற்ற முடியாதது. அது தனி மனிதனுக்கு சாந்தியை அளிக்கலாம். ஆனால், ரசனையற்றது, சுவையற்றது... வாழ்க்கையில் ஒரு வெறி ஏற்பட்டால்தான் பிடிப்புடன் முன்னேற முடியும். அதை சமயம் கொடுக்கிறது. அது சொல்லுகிற மோட்சத்தைவிட கொடுக்கா விட்டாலும், இது போதும். அந்த மோட்சைத்தைவிட இது மேலானது. தெய்வத்தைப் படைப்பது கவிஞன். தெய்வத்தை அறிபவன் ஸயன்டிஸ்ட். தெய்வம் என்றால் என்ன? இலட்சியம். அது எந்த வடிவத்தை எடுத்தால் என்ன? மனித வர்க்கத்தை ஒரு படி உயரச் செய்தால், அது தெய்வத்தின் சக்தி படைத்தது, அதுதான் தெய்வம் என்று ஏன் சொல்லக்கூடாது?'

கடவுள், மோட்சம் போன்ற விஷயங்கள் மனித உள்ளத்தில் உளைச்சல் ஏற்படுத்திக் கொண்டே இருப்பவை. கலைஞன் மனசுக்குக் குழப்பமும் வேதனையும் தரக்கூடியவை. இம் மனநிலைகளை புதுமைப் பித்தனின் 'சிற்பியின் நரகம்' என்ற சிறந்த சிறுகதை நன்கு சித்திரிக்கிறது.

ஒரு சிற்பி, தெய்வத்தின் இலட்சிய வடிவம் ஒன்றை உருவாக்க சிரத்தை எடுத்து, சிரமங்கள் மேற்கொண்டு, நடராஜர் சிலையைச் செய்து முடிக்கிறான். அவனது அனுபவங்களும், பக்தி பரவசமாகி விடுகிற ஒரு அடியாரின் எண்ணங்களும், நாத்திகவாதம் பேசும் தத்துவவாதி பைலார்கஸ் என்பவனின் வாதங்களும் இந்தக் கதைக்கு

ஜீவனும் கனமும் அழகும் சேர்க்கின்றன. சிலையைக் கோவிலில் வைக்கப்போவதாக சிற்பி சொல்கிறான். 'அரசனின் அந்தப்புரத்தில் அதை வைத்தால் அதற்கு அர்த்தம் உண்டு' என்று கிரேக்கன் சொல்கிறான்.

சிலை கோயிலில் உரிய முறைப்படி வைக்கப்படுகிறது. அன்று இரவு சிற்பி ஒரு கனவு காண்கிறான். கர்ப்பக்கிருக இருளிலே சிலை ஆழ்ந்துவிடுகிறது. அதன் கலை அழகை எவரும் காண்பதில்லை. எண்ணற்ற மனிதர்கள், அந்தகாரத்தின் சாயைகள்போல வருகிறார்கள். அதன்முன் தலைவணங்கி நிற்கிறார்கள். கண்களை மூடிக் கும்பிட்ட வாறே, எனக்கு மோட்சம்-எனக்கு மோட்சம் என்று பிரார்த்திக் கிறார்கள். சிற்பி ஏமாற்றமும் ஆத்திரமும் அடைகிறான். உயிரற்ற மோட்சச் சிலையே, நீ ஒழிந்துபோ என்று அதை உடைத்து எறிவதற்காக அதைப் பிடித்து இழுக்கிறான். அந்தக் கனத்த சிலை அவனை அமுக்கியபடி கீழே சாய்கிறது. என்ன பேய்க் கனவு என்று விழிப் படைந்து அதிர்ச்சியுறுகிறான் அவன். அவனது மனம் கிரேக்க சிந்தனையாளன் பைலார்களை நினைத்துக் கொள்கிறது.

படித்துப் படித்து ரசிக்கவேண்டிய கதைகளுள் இந்த 'சிற்பியின் நரக'மும் ஒன்று ஆகும்.

மனிதர்களுக்கு தெய்வ நம்பிக்கை இருந்தாலும்கூட, சில நெருக்கடி யான கட்டங்களில், சோதனை சந்தர்ப்பங்களில், 'கடவுளே, நீ இருக் கிறாயா? தெய்வமே,நீ உண்மைதானா?' என்று அவர்கள் குழம்பவும், வாய்விட்டு அரற்றவும் நேரிடுகிறது. புதுமைப்பித்தன் கதைகளில் இப்படிப்பட்ட பாத்திரங்களும், இந்த விதமான நெருக்கடி நிலைகளும் சில இடங்களில் தலைகாட்டியுள்ளன.

மதம் மாறி, அண்ணன் தம்பி இருவரும் ஒருவருக்கு ஒருவர் பரம விரோதிகளாகி, தாயின் மரணப் படுக்கை அருகிலும் சண்டை போட்டுக் கொள்வதை விவரிக்கும் 'புதிய கூண்டு' கதையில், தாய் மீனாட்சி அம்மாள் இவ்வாறு கதறுகிறாள்-

'தெய்வமே! நீ இருக்கிறாயா? என் இரத்தம், என் குழந்தைகள்! இவைகள் இரண்டிற்கும் இப்படிச் சண்டையை உண்டு பண்ணி விட்டதே, தர்மமா? இது நிஜந்தானா? இதற்குமேல் எல்லாம் ஒன்று உண்டா? ஏ தெய்வமே, நீ நிஜந்தானா?'

இன்னொரு கதை. சிற்றூர் என்ற சிறிய ஊரில், அரிஜன ஆலயப் பிரவேச காலத்தில், ஒரு தியாகி பிரசாரம் செய்கிறார். அவரை மேல் சாதிக்காரர்கள் எதிர்க்கிறார்கள். விழிப்பு உணர்வு பெறாத சேரி மக்களும் எதிர்க்கிறார்கள். அவர் சேரி மக்களினாலேயே தாக்கப்பட்டு

மயங்கி விழுகிறார். கோயிலில் பூஜை செய்யும் சாஸ்திரிகள் அவருடைய நிலையை அறிந்து வேதனைப்படுகிறார். காந்தி பக்தர் கூறிய கருத்துக்கள் சாஸ்திரிகளுக்குக் குழப்பம் உண்டாக்குகின்றன.

அவர் கோயிலில் விக்கிரத்தின் முன்னே நின்று தனது உள்ளத்தின் கவலைகளை எல்லாம் சொல்லி அழுதார். அவருடைய நம்பிக்கை உடைந்துபோயிற்று. எதை நம்புவது என்று சந்தேகம் வந்து விட்டது.

'இதுவரை நடந்து வந்தது உண்மையா? அவர் சொல்லுவது உண்மையா? பேசாது இருக்கிறாயே, நீயும் உண்மைதானா?' குரலில் என்ன பரிதாபம்! என்ன சோகம்! என்ன நம்பிக்கை! 'ஏ தெய்வமே, நீயும் உண்மைதானா?' எனப்புலம்பினார் பக்தர் என்று புதுமைப் பித்தன் விவரிக்கிறார்.

தெய்வத்திடம் வெற்றிகரமாக வாதாடும் மனிதர்கள்-மனித நிலையையே உயர்வாக மதிக்கிற மனிதப் பிறவிகள்-தெய்வ சக்தியின் கையாலாகாத்தனத்தைச் சுட்டிக் காட்டுகிற சாதாரணர்கள் அவருடைய கதைகளில் எடுப்பாக விளங்குகிறார்கள்.

'உமக்கு எல்லாவற்றையும் அழிக்க முடியும். உம்மை அழித்துக் கொள்ள முடியுமா? நீர் மட்டும் மிஞ்சுவதுதான் சூன்யம் என்று அர்த்தமா? உம்மையும் அழித்துக் கொள்ளும்படி நீர் தொழிலை நன்றாகக் கற்று வந்தபின், நெஞ்சைத் தட்டிப் பார்த்துக் கொள்ளும்' என்று கைலயங்கிரி ஈசனைப் பார்த்துக் கேட்கிற குழந்தை-

'அதோ கிடக்கிறது பார், நான் போட்டுவிட்டு வந்த உடல், அதில் போய் உட்கார்ந்துகொள். அப்புறம் உன் கிங்கரர்களை ஏவி அழைத்து வரும்படி செய். அப்போது தெரியும் உனக்கு பயம் என்ன என்பது' என்று எமதர்மனைப் பார்த்து சொல்லிச் சிரிக்கிற மனித உயிர்-

வரம் கொடுக்க வந்த மகா விஷ்ணுவைப் பார்த்து 'நீர் செப்பிடு வித்தைக்காரனா, பகல் வேஷக்காரனா?' என்று கேட்டு விட்டு தபஸ் பண்ண ஓடும் குழந்தை-

'என்னை சிருஷ்டிக்க நீர் உபயோகித்த புழுதியைவிட்டு நான் எப்படி விலகமுடியும்? நான் நிமிர்ந்து நேராக நிற்பதற்கே இந்தப் புழுதிதானே ஆதாரம்? புழுதியைக் கண்டு அஞ்சும் உமக்கு, அதன்மீது நிற்கும் என்னை அறிந்துகொள்ளச் சக்தி உண்டா? நீர் அந்தச் சக்தி பெற்றுக் கீழே வரும்வரை, நான் இந்தப் புழுதியில் கண்டெடுத்த, அதில் என்னோடு பிறந்த இந்த இரும்புத் துண்டை வைத்து என்னைப்

பாதுகாத்துக் கொள்கிறேன்' என்று கர்த்தரைப் பார்த்துக் கூறிய மனிதன்-

உயிரை எடுத்துச் செல்லவந்த எமதர்மனிடம், 'உன்னாலே உசிரைத் தானே எடுத்துக்கிட்டுப் போகமுடியும்? இந்த உடலைக் கூடத் தூக்கிட்டுப் போவத் தெறமை இருக்கா? யோசிச்சுப் பாரு. ஒண்ணெவேறயா மாத்த முடியும். உன்னாலே அழிக்க முடியுமா? உன்னைப் படைச்ச கடவுளாலேயே செய்ய முடியாதே. அப்புறமில்ல உனக்கு!' என்று வாக்குவாதம் செய்து, அவனைத் தோல்வி அடையச் செய்த கிழவி-

இத்தகைய படைப்புகள் புதுமைப்பித்தனின் சிந்தனை வேகத்தை, மனோதர்மத்தை, புதிய நோக்கை நன்கு வெளிப்படுத்துகின்றன. கடவுளை வைத்து அவர் படைத்த கற்பனைகளில்-கலைப் படைப்புகளில்-எல்லாம் உன்னதச் சிகரமாக விளங்குவது 'கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்'.

இதில் அவருடைய கற்பனை வீச்சு, கேலியும் நையாண்டியும், வாழ்க்கை நோக்கு, மனித இயல்புகள் பற்றிய ஆய்வு முதலியன அழகாகவும், இரசித்து மகிழத்தக்க விதத்திலும் கலந்து காணப் படுகின்றன.

வறுமை வாழ்வு வாழ்கிற மேலகரம் கந்தசாமிப்பிள்ளை, சென்னையில் பிராட்வேயும் எஸ்பிளனேடும் கூடுகிற சந்தியில் ஒரு ஓரத்தில் நின்று தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தபோது, கடவுள் அவர்முன் தோன்றினார். திருவல்லிக்கேணிக்கு வழி கேட்டார்.

அதிலிருந்து கடவுளுக்கும் கந்தசாமிப்பிள்ளைக்கும் நடக்கிற உரையாடல்கள் ரசமானவை. பிள்ளையின் துணையோடு கடவுள் அடைகிற அனுபவங்கள் சுவாரஸ்யமானவை.

'பூலோகத்தைப் பார்க்க வந்தேன். நான் இன்னும் சில நாட்களுக்கு உம்முடைய அதிதி' என்றார் கடவுள்.

பிள்ளையின் வீட்டருகில் வந்ததும், கடவுள் தனது சுய உருவைக் காட்டி, 'பக்தா!' என்றார்.

கந்தசாமிப்பிள்ளை கடவுளிடம் கண்டிப்புக் குரலில் பேசினார்:

'ஓய் கடவுளே, இந்தா பிடி வரத்தை என்கிற வித்தை எல்லாம் எங்கிட்டச் செல்லாது. நீர் வரத்தை கொடுத்துவிட்டு உம்பாட்டுக்குப் போவீர். இன்னொரு தெய்வம் வரும். தலையைக் கொடு என்று

கேட்கும். உம்மிடம் வரத்தை வாங்கிக் கொண்டு பிறகு தலைக்கு ஆபத்தைத் தேடிக் கொள்ளும் ஏமாந்த சோணகிரி நான் அல்ல. ஏதோ பூலோகத்தைப் பார்க்க வந்தீர். நம்முடைய அதிதியாக இருக்க ஆசைப் பட்டீர். அதற்கு ஆட்சேபம் எதுவும் இல்லை. என்னுடன் பழகவேண்டு மானால், மனுஷ அத்துக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும்' என்றார்.

'கடவுள் மௌனமாகப் பின்தொடர்ந்தார். கந்தசாமிப் பிள்ளையின் வாதம் சரி என்று பட்டது. இதுவரையில் பூலோகத்திலே வரம் வாங்கி உருப்பட்ட மனுஷன் யார் என்ற கேள்விக்குப் பதிலே கிடையாது என்றுதான் அவருக்குப்பட்டது.'

இப்படி மனிதனிடம் தோல்வியே அடைகிறார் கடவுள். சிறு குழந்தைகூட விளையாடப்போய், அந்த விளையாட்டிலும் அவருக்கு இடையே நிகழும் பேச்சுக்கள் நயம் நிறைந்து, பொருள் பொதிந்தனவாக அமைந்துள்ளன.

கந்தசாமிப்பிள்ளை, தனது பத்திரிகையான 'சித்தாந்த தீபிகை'க்குக் கடவுளை ஜீவிய சந்தாதார் ஆக்கும் முயற்சியில் தீவிரமாகவே இருக்கிறார், கதை நெடுகிலும்.

கடவுள் ஏதாவது தொழில் புரிய நினைக்கிறார். கந்தசாமிப் பிள்ளையின் யோசனைகள் அவருக்குப் பிடிக்கவில்லை. கூத்து ஆடலாமே என்கிறார். தேவியையும் தருவிக்கிறார்.

நிருத்ய கலாமண்டலி நடத்துகிற திவான் பகதூர் சாஸ்திரிகள் வீட்டுக்கு அவர்களை அழைத்துச் சென்று பிள்ளை அறிமுகப்படுத்தி, நாட்டியம் ஆடுவதற்கு வாய்ப்பு அளிக்கும்படி கேட்டார்.

கடவுளும் தேவியும் திவான் பகதூர் முன்னே ஆட முற் பட்டார்கள். அவர்களுக்கு இயல்பான ஆடைகளுடன், கையில் சூலத் துடன், கண்களில் வெறியும் உதட்டில் சிரிப்பும் புரண்டோட, ஆட ஆரம்பித்தார் கடவுள்.

'சட்! வெறும் தெருக்கூத்தாக இருக்கு. என்னங்காணும் போர்னியோ காட்டுமிராண்டி மாதிரி வேஷம் போட்டுக் கொண்டு' என்று திவான் பகதூர் அதட்டினார்.

'ஓய்! கலைன்னா என்னன்னு தெரியுமாங்கணும்? புலித் தோலைத்தான் கட்டிக்கொண்டீரே. பாம்புன்னா பாம்பையா புடிச்சுக் கொண்டு வருவா? பாம்பு மாதிரி ஆபரணம் போட்டுக் கொள்ள வேணும். புலித்தோல் மாதிரி பட்டுக் கட்டிக் கொள்ள வேணும். கலைக்கு முதல் அம்சம் கண்ணுக்கு அழகுங்காணும்! வாஸ்தவமாகப் பார்வதி பரமேசுவராளே இப்படி ஆடினாலும் இது நாட்டிய

சாஸ்திரத்துக்கு ஒத்துவராது', என்று பரமசிவனிடமே சொன்னார்.

கடவுளுக்கு இதிலும் தோல்வி.

'தெரிந்த தொழிலைக்கொண்டு லோகத்தில் பிழைக்க முடியாது போல இருக்கே!' என்றார் கடவுள், கந்தசாமிப்பிளையிடம்.

முடிவில், 'உங்களிடமெல்லாம் எட்டி நின்று வரம் கொடுக்கலாம். உடன் இருந்து வாழ முடியாது' என்றார் கடவுள்.

அப்பவும் கந்தசாமிப்பிள்ளை விட்டுவிடவில்லை. 'உங்கள் வர்க்கமே அதற்குத்தான் லாயக்கு' என்றார்.

ஜீவிய சந்தா ரூபாய் இருபத்தைந்தை மேஜைமேல் போட்டு விட்டு, கடவுள் மாயமாய் மறைந்தார்.

இந்தக் கதை புதுமைப்பித்தனுக்கு மிகுந்த மனநிறைவைத் தந்த இலக்கியப் படைப்பு என்று தெரியவருகிறது. சிறுகதை பற்றிய கட்டுரை ஒன்றில் அவர் இவ்விதம் குறிப்பிடுகிறார்: 'தமிழிலே நட்சத்திரக் குழந்தைகள், சிவசைலம், எங்கிருந்தோ வந்தான், கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும் என்ற தலைப்பில் வெளி வந்துள்ள கதைகள் ஒப்புயர்வற்றவை.'

(அவர் குறிப்பிடும் இதர மூன்று கதைகள் முறையே பி.எஸ். ராமையா, த.நா. குமாரஸ்வாமி, மௌனி ஆகியோரால் எழுதப் பட்டவையாகும்.)

நினைவுகளை வளர்த்து கதையைப் பின்னுகிற உத்தியைக் கையாண்ட புதுமைப்பித்தன் நனவோட்ட முறையை (Stream of Consciousness) ஒரு சில கதைகளில் உபயோகித்திருக்கிறார்.

'நினைவுப் பாதை' இலக்கிய ரசிகர்களால் மறக்க முடியாத சிறு கதைகளில் ஒன்று. மனைவி இறந்துபோய், தனித்திருக்கிற வைரவன் பிள்ளையின் நினைவோட்டத்தை இது விவரிக்கிறது. முழுவதும் நன வோட்டத்தினாலான கதை அன்று இது. துக்க வீட்டுச் சூழ்நிலை, அங்கே வந்து கூடியிருப்பவர்களின் மனநிலை மற்றும் ஆசைகள், நோக்கங்கள், கால உணர்வு முதலியவற்றையும், அவற்றினூடே தனியனாகிவிட்ட முதியவரின் நினைவுகளையும் இக்கதையில் புதுமைப்பித்தன் திறமையாக வர்ணித்திருக்கிறார்.

முற்றிலும் நனவோட்டமாக எழுதப்பட்டது 'கயிற்றரவு.' புதுமைப் பித்தனின் சிறந்த சிறுகதைகளில் மற்றுமொன்றான இது, தமிழில் வெளி வந்துள்ள சிறந்த படைப்புகளில் முக்கியமான ஒன்று என்று கருதப்பட வேண்டும்.

கைலாசபுரம் ஆற்றங்கரை ஓரத்தில், உச்சிப்போதில், பனை மூட்டின் அடியில் குந்தி உட்கார்ந்திருந்த பரமசிவம் பிள்ளையின் நனவோட்டத்தை அற்புதமாக எடுத்துச் சொல்கிறது கதை. காலம், பிரபஞ்சம், சிருஷ்டி ரகசியம், பொதுவான வாழ்வு, தன்னுடைய வாழ்க்கை, கைலாசபுரம் சுற்றுப்புரம் முதலிய சகல விஷயங்கள் பற்றிய நினைப்புகளும் அவருள் வலிய சிந்தனைகளாக ஓடுகின்றன. புதுமைப் பித்தனின் நடைவேகத்துக்கு இது நல்ல உதாரணமாகவும் அமைகிறது. மேலும், தமிழ்ச் சிறுகதையில் 'பரிசோதனை ரீதியான எழுத்து' என்பதற்கும் இது நல்ல எடுத்துக்காட்டு.

'கள்ளிப்பட்டியானால் என்ன? நாகரிக விலாசமிட்டுத் தொங்கும் கைலாசபுரம் ஆனால் என்ன? கங்கையின் வெள்ளம் போல, காலம் என்ற ஜீவநதி இடைவிடாமல் ஓடிக் கொண்டு இருக்கிறது...ஓடிக்கொண்டேயிருக்கும். தயிர்க்காரி சுவரில் புள்ளி போடுகிற மாதிரி, நாமாகக் கற்பனை பண்ணிச் சொல்லிக் கொள்ளும் ஞாயிறு, திங்கள், செவ்வாய்க்கிழமைகள் எல்லாம் அடிப் படையில் ஒன்றுதானே? பிளவு-பின்னம் விழாமல் இழுக்கப்பட்டு வரும் ஒரே கம்பி இழையின் தன்மைதானே பெற்றிருக்கின்றது? இல்லை-இல்லை. சிலந்திப் பூச்சி தனது வயிற்றிலிருந்து விடும் இழை போல நீண்டுகொண்டே வருகிறது. இன்று-நேற்று-நாளை என்பது எல்லாம் நம்மை ஓர் ஆதார எண்ணாக வைத்துக் கொண்டு கட்டி வைத்துப் பேசிக் கொள்ளும் சவுகரியக் கற்பனைதானே? நான் என்ற ஒரு கருத்து, அதனடியாகப் பிறந்த தானல்லாத பல என்ற பேத உணர்ச்சி, எனக்கு முன், எனக்குப் பின்என்று நாமாக வக்கணையிட்டுப் பேசிக்கொண்ட வரிகள்... இவை எல்லாம் எத்தனை தூரம் நிலைத்து நிற்கும்...நான் என நினைத்த, நினைக்கும், நினைக்கப் போகும் பல தனித் துளிகளின் கோவை செய்த நினைப்புத்தானே இந்த நாகரிகம்...கூட்டு வாழ்வு என்ற வாசனையையொட்டி, மனசு இழைத்து இழைத்துக் காட்டும் மனச்சிற்றில் தானே இந்த நாகரிகம்...மகா காலம் என்ற சிலந்தியின் அடிவயிற்றிலிருந்து பிறக்கும் ஜீவத் துளியின் ஓரத்தில் கட்டி வைத்த மணற் சிற்றில்...என்ன அழகான கற்பனை என்று பரமசிவம் பிள்ளை நினைக்கலானார்?'

இப்படி அழுத்தமான சிந்தனையோடு மேலே மேலே வளர்கிறது கதை. காலம், கடவுள், பிறப்பு, 'நான்' பற்றி எல்லாம்நினைவை ஓட விட்டபடி இருந்த பரமசிவம் பிள்ளையை பாம்பு கடித்துவிட்டது. மரண நிலையில் கிடக்கும் அவரது நனவோட்டம் எழுத்தாக்கப் பட்டுள்ளது கதையில். முடிவுப் பகுதி 'சுழி' என்ற தலைப்பில் ஆசிரியர் பேச்சாக அமைந்திருக்கிறது.

'சாம்பல் காற்றோடு போச்சு; பெயர் பெயரோடு போச்சு. மனித மனம் இம்மாதிரி அனந்தகோடி கூடுகளைக் கட்டிக்கட்டி விளையாடியது. கைலாசபுரத்து மருதமரம் நிழல் கொடுத்தது. மரம் பூத்துக் காய்த்தது. பழுத்தது. ஆற்றில் தண்ணீர். தண்ணீர் மணலிலும் படியிலும் தவழ்ந்து ஓடியது. கள்ளிப்பட்டியானால் என்ன, கைலாசபுரமானால் என்ன?-காலவெள்ளம் தேக்கற்று ஓடிக்கொண்டே இருந்தது. அதிலே வரையில்லை. வரம்பில்லை. கோடுகூடித் தெரியவில்லை. கருவூரிலானாலென்ன? காட்டூரிலானாலென்ன? சமாதியோ-பிரக்ஞையோ? எதுவானாலென்ன?

'நான் ஓடினால் காலம் ஓடும். நான் அற்றால் காலம் அற்றுப் போகும். காலம் ஓடுகிறதா? ஞாயிறு-திங்கள்-செவ்வாய்-நான் இருக்கும் வரை தான் காலமும். அது அற்றுப்போனால் காலமும் அற்றுப்போகும். வெறும் கயிற்றரவு! பரமசிவம் பிள்ளை எங்கே?'

சிந்தனை ஆழம் நிறைந்த கதை. படிப்பவர்களின் சிந்தனைக்கு வேலை கொடுக்கும் எழுத்து. அநேகமாக இது தான் புதுமைப் பித்தனின் கடைசிக் கதை என்று கருதப்பட வேண்டும்.

'என் கதைகளின் பொதுத்தன்மை நம்பிக்கை வறட்சி' என்று கூறினார் புதுமைப்பித்தன. நம்பிக்கை வறட்சியையே அழுத்தமாகப் பதிவு செய்யும் கதைகள் சிலவற்றை அவர் சிருஷ்டித்திருக்கிறார். அவற்றில் 'மகா மசானம்' முக்கியமானது.

நாகரிகம் பெருக்கெடுத்தோடும் முக்கியப் பெருவீதியின் ஒரு ஓரத்தில் அநாதையாகக் கிடந்து செத்துக் கொண்டிருக்கிற ஒரு கிழப் பிச்சைக்காரனின் கடைசி நேரத்தை இக்கதை விவரிக்கிறது. அவனைப் பார்க்காமலும் பார்க்க விரும்பாமலும் அவரவர் காரியத்தின் மீது சென்று கொண்டிருக்கும் மனிதர்கள்; சாகிறவனுக்கு உதவி செய்ய வந்து, சிறிது காசு கிடைத்ததும் அதை எடுத்துக் கொண்டு ஓடிவிடும் இளம் பிச்சைக்காரன்; வேடிக்கை பார்க்கிற சிறு பெண்; அச் சிறுமியின் அப்பா முதலியவர்களைக் கொண்ட ஒரு வாழ்க்கை நாடகம் அழகான சிறுகதையாக அமைக்கப்பட்டிருக்கிறது. நாகரிகப் பெரு நகரமே 'மகாமசானம்' போல் தோற்றம் கொள்கிறது, கதையைப் படிக்கையில்.

குடும்பத்தையும் பொறுப்புகளையும் விட்டு விட்டு சாமியாராகப் போகிற செண்பகராமன் பிள்ளை துறவுநிலையிலும் விரக்தி அடைந்து ஊருக்கே திரும்பிவருகிற செயலை-இருட்டோடு போனவர் இருளிலேயே திரும்பி வந்ததை-சித்திரிக்கும் 'சித்தி'யும் நம்பிக்கை வறட்சியைக் காட்டுகிற கதை தான்.

புதுமைப்பித்தன் சுமார் நூறு கதைகள் எழுதியுள்ளதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆரம்ப காலத்தில் (1934ல்) அவர் எழுதிய கதைகளில் பல சாதாரணமானவை. ஆயினும், அவற்றிலும்-சொல்லும் முறை, நடை, பார்வை முதலியவற்றில்-அவருடைய தனித்தன்மை நன்கு வெளிப்பட்டிருப்பதை வாசகர்கள் எளிதில் உணரமுடியும்.

இவைபற்றிக் கூறும்போது, 'என் கதைகளில் ஏற்றத்தாழ்வு உண்டு. அவற்றிற்குக் காரணம் வார்ப்புப் பிசகு அல்ல, கதை எழுதத் தூண்டிய மன அவசத்தின் உத்வேகத்தைப் பொறுத்தது கதையில் காணும் ஏற்றத் தாழ்வு' என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

தேர்ந்து கொண்ட விஷயத்திற்கு ஏற்றபடி, கதையை எப்படிச் சொல்லவேண்டும் என்றும், தான் உணர்த்த விரும்புகிற உணர்வு அழுத்தத்தை படிக்கிறவர் மனசில் எவ்வாறு உண்டாக்குவது என்றும் நன்கு அறிந்து வைத்திருந்த சிறந்த சிறுகதை ஆசிரியர் புதுமைப்பித்தன். சிற்பியின் நரகம், பிரம்மராக்ஷஸ், புதிய கூண்டு, ஒரு நாள் கழிந்தது, அகல்யை, அன்று இரவில், காஞ்சனை, செல்லம்மாள், சாப விமோசனம், மகாமசானம், கயிற்றரவு போன்ற-வெவ்வேறு விதமான விஷயங்களையும் வெவ்வேறு ரகமான உணர்வுகளையும் கொண்டுள்ள வெவ்வேறு விதமான-சிறுகதைகள் இதை நிரூபிக்கின்றன.

புதுமைப்பித்தன் கதைகள் பற்றி, சிறந்த சிறுகதைப் படைப்பாளியும் இலக்கிய விமர்சகருமான சி.சு. செல்லப்பா அறுதியிட்டுக் கூறுவது நினைவுகூரத்தக்கது. 'தமிழில் இலக்கிய விமர்சனம்' என்ற நூலில், 'புதுமைப்பித்தன் கதைக் கரு' எனும் கட்டுரையில் அவர் இவ்வாறு எழுதுகிறார்-

'இந்த அத்தனை கதைகளிலும் புதுமைப்பித்தனின் மனோதர்ம வீச்சு, ஒரு சிருஷ்டிகர்த்தா தான் உயிர் கொடுத்து சிருஷ்டிப்பதற்கு உபயோகிக்க முடிந்த தன் அனுபவ அம்சங்கள், எத்தனை சந்தர்ப்பங்களில் எத்தனை விதங்களில் படர்ந்து இருக்கின்றன என்பதைக் காணமுடிகிறது. 'கதை யுலகத்தின் நியதி அது' என்று அவர் பிரித்துக் கூறிய மாதிரி, வாழ்க்கையின் நியதியிலிருந்து எழுந்ததானாலும்கூட, வெறுமனே கண்ணால் பார்த்ததோடு நின்றுவிடாமல், கண் பார்த்து மூளைக்குள் செலுத்தி, தான் அறிந்து அதில் ஈடுபடும் முன்னரே கனிசமாக வேற்றுருவம் பெற்றுத் தனக்கென ஒரு கலாநியதியைப் பெற்றுவிட்ட அழகு அனுபவங்களாகும் அவர் கதைகள்.'

புதுமைப்பித்தன் கதைக்காக எடுத்துக் கொண்ட விஷயத்திலும், உணர்வு அழுத்தத்தோடு அதைச் சொல்லும் முறையிலும் அக்கறை காட்டியதுபோல, கதை நிகழும் சூழலைப் படம் பிடித்துக்

காட்டுவதிலும் ஆர்வம் கொண்டிருந்தார். அவர் கதைகளில் வருகிற சூழ்நிலை விவரிப்புகள் ரசனைக்கு விருந்தாகும் சொல்லோவியங்களாகக் காட்சி தருகின்றன. அப்படி வர்ணிப்பதிலும் அவருடைய தனிப் பார்வையும், கிண்டல் தொனியும் உயிர்ப்புடன் கலந்து காணப்படுகின்றன.

உதாரணத்துக்கு, 'மகாமசானம்' கதையில் வருகிற சூழ்நிலை வர்ணனையைக் கூறலாம்:

'சாயந்தரமாகிவிட்டால், நாகரிகம் என்பது இடித்துக் கொண்டும் இடிபட்டுக் கொண்டும் போகவேண்டிய ரஸ்தா என்பதைக் காட்டும் படியாகப் பட்டணம் மாறிவிடுகிறது. அதிலும் தேகத்தின் நரம்பு முடிச்சுப்போல, நாலைந்து பெரிய ரஸ்தாக்களும், டிராம் போகும் ரஸ்தாக்களும் சந்திக்கும் இடமாகி விட்டாலோ தொந்தரவு சகிக்கவே முடியாது. ஆபீசிலிருந்து 'எச்சுப்' போய் வருகிறவர்கள், இருட்டின் கோலாகலத்தை அனுபவிக்கவரும் அலங்கார உடை தரித்தவர்கள், மோட்டாரில் செல்லுவதற்கு இயலாத அவ்வளவு செயலற்ற அலங்கார வேஷவெளவால்கள் எல்லாம் ஏக மேனியாக 'எல்லாம் ஒன்றே' என்று காட்டும் தன்மை பெற்றவர்கள்போல் இடித்துத் தள்ளிக் கொண்டு அவரவர் பாதையில் போவார்கள். அன்றும் அம்மாதிரியே போய்க் கொண்டிருந்தார்கள்.

'ஒற்றை வழிப் போக்குவரத்து' என்ற ஸஞ்சார நியதி வந்ததிலிருந்து, உயர்ந்த அடுக்குக் கட்டிடங்களின் உச்சியின்மேல் நின்று கொண்டு பார்த்தால், அங்கே நாகரிகத்தின் சுழிப்புத் தெரியும். கரையைப் பீறிட்டுக் கொண்டு பாயும் வெள்ளத்தை அணைக்கட்டின் மேல் இருந்துகொண்டு பார்த்தால் எப்படியோ, அப்படி இருக்கும்.

'நான் சொல்ல வந்த இடமும் அதுதான். மவுண்ட் ரோட் ரவுண்டானா. மலைப்பழ, மாம்பழக் கூடைக்காரிகளின் வரிசை, அவர்களுக்குப் பின்புறம் எச்சில் மாங்கொட்டையைக் குழப்பித் துப்பி விட்டு, சீலையில் கையைத் துடைத்துக் கொள்ளும் 'மெராஸ் பறச்சிங்கோ,' கைத்தடியோடு 'சிலுமன்' கொடுத்து உலாவிக் கொண்டிருக்கும் காபூலிவாலா, முகமதியப் பிச்சைக்காரன், நொண்டிப் பிச்சைக்காரன், குஷ்டரோகப் பிச்சைக்காரன், ராத்திரித் 'தொழிலு'க்குத் தயாராகும் யுவதி-பாதையின் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டு நிம்மதியாகச் சீவிச் சிங்காரித்துக் கொண்டிருக்கிறாள் அவள்-அப்புறம் நானாவித, 'என்ன சார் ரொம்ப நாளாச்சே', 'பஸ் வந்துட்டுது' 'ஏறு' என்கிற பேர் வழிகள் எல்லாம். அவசரம், அவசரம், அப்போது அவன் ரஸ்தாவின் ஓரத்தில் உள்ள நடை பாதையில் படுத்துச் சாவகாசமாகச் செத்துக் கொண்டிருந்தான்.'

கதாபாத்திரங்களைப் பற்றிக் கூறும்போதும், அவர்களது மன நிலையை வர்ணிக்கிறபோதும்-சாதாரண விஷயங்களைக்கூட-சாதாரண வாசகனை சிரமப்படுத்தக்கூடிய பின்னல்கள் நிறைந்த ஒரு நடையை, வேண்டுமென்றே கையாண்டு ஒரு பிரமிப்பை உண்டாக்கி வியப்பு எழுப்புவது புதுமைப்பித்தனுக்குப் பிடித்த பாணியாக உள்ளது. 'செல்லம்மாள்' கதையிலிருந்து இரண்டு உதாரணங்கள்-

'பிரமநாயகம் பிள்ளைக்கு மனப்பக்குவம் ஏற்பட்டுவிட்டது. சாவின் சாயையிலே அவரது மனம் நிலைகுலையவில்லை. அதனால் பிரமநாயகம் பிள்ளையை பந்தவினை யறுத்த யோகி என நினைத்து விடக்கூடாது; அல்லது, அவரது மனசுக்கு வேலி போட்டுப் பாதுகாத்து வளர்த்து, போதிமரம் வரையில் கொண்டுவிடும் ஞான மிகுந்த சுத்தோதனப் பெருந்தகையல்ல அவரது பிதா. வறுமை, நோய், சாக்காடு மூன்றையும் நேரில் அனுபவித்தவரே. பிரமநாயகம் பிள்ளை வாழ்வின் மேடு பள்ளங்களைப் பார்திருக்கிறார் என்றால், அவர் ஏறிய சிறு சிறு மேடுகள் யாவும், படிப்படியாக இறங்கிக் கொண்டே போகும் பள்ளத்தின் கோளாறுகளேயாகும். வாழ்வு என்ற ஒரு அனுபவம் அவருக்கு ஏற்படும்போது அவர் மேட்டிலிருந்துதான் புறப்பட்டார்.'

இது ஒன்று. மற்றொன்று-

'பிரமநாயகம் பிள்ளைக்கு மனசில் எழும் தொல்லைகள், முதலில் ரணம் கட்டி, பிறகு ஆறி மரத்துப்போன வடுவாகிவிட்டன. சம்பளத் தேதி என்று ஒன்று இல்லை. தேவையானபோது வாங்கிக் கொள்ள வேண்டும் என்பது சம்பிரதாயம். அதாவது தேவையை முன்கூட்டி எதிர்பார்த்து, அதற்காக முதலாளியின் மனசைப் பக்குவமடையச் செய்து, பிறகு தினசரி இடைவிடாமல் கேட்டுக் கேட்டு, வழக்கம்போல, இன்றும் கிடைக்காது என்ற மன ஒய்ச்சலுடன் கேட்டபோது, நிதானத்தைக் குலைக்கும்படியாக அவர் கொடுத்துவிடுவதைப் பெற்றுக் கொண்டு வீடு திரும்புவதே அவர் வேலை பார்க்கும் ஸ்தாபனத்தின் வளமுறை. இப்படியாக, மாதம் முழுவதும் தவணை வாரியாகத் தேவைகளைப் பிரித்து, ஒரு காரியத்துக்காக எதிர்பார்த்த தொகையை அத்தியாவசியமாக முளைத்த வேறு ஒன்றுக்காச் செலவழித்துவிட்டு, பாம்பு தன் வாலைத் தானே விழுங்க முயலும் சாதுர்யத்துடன், பிரமநாயகம்பிள்ளை தமது வாழ்வின் ஜீவனோபாய வசதிகளைத் தேவை என்ற எல்லை காணமுடியாத பாலைவனத்தைப் பாசனம் செய்ய, தவணை என்ற வடிகால்களை உபயோகிக்கிறார்.'

புதுமைப்பித்தன் உவமைகளிலும் புதுமையைக் கையாண்டிருக்கிறார். உவமை கூறுவதற்காக அக்காலத்திய அரசியல் நிகழ்வுகள், கலை உலகப் பழக்கங்கள், புராண விஷயங்கள் போன்றவற்றை தாராளமாக அவர் உபயோகித்துள்ளார்.

'அந்த வியாபாரத்தில் ஸ்ரீ சுப்பையாபிள்ளையும் பண வசூல், கணக்கு, வியாபாரம் என்ற நானாவித இலாகாக்களையும் நிர்வகித்தார். அதாவது 'மாண்ட்போர்டு' சீர்திருத்தக் காலத்து மாகாண மந்திரிகள் மாதிரி' (சுப்பையாப் பிள்ளையின் காதல்கள்).

'அரிச்சந்திரன் மயான காண்டத்தில் ஊன்றிக்கொண்டு நிற்க வேண்டிய தடி சடக்கென்று முறிந்துவிட்டால் எப்படி இருக்கும்? 'பின் அரிச்சந்திரன்' அந்த சமயத்தில் சோகம் குலைய மிருதங்கக்காரனைப் பார்த்து உறுமுவதுபோலிருந்தது என் நண்பரின் பார்வை' (புரட்சி மனப்பான்மை).

'கையில் வதங்கிப் போன பத்திரிகை ஒன்றைப் பிடித்துக் கொண்டு, ஒரு 'மோஸ்தர்' வாலிபன் நாஸூக்காக இறங்கினான். அவனது 'சென்னை பிராட்வே' பாஷன் பிளேட் மூஞ்சியும் விதேசி மோஸ்தர் உடையும் யதாஸ்தானத்தை விட்டகன்ற மூலவர் போன்ற ஒரு விசித்திர சோபையை அவனுக்கு அளித்தன. அந்தக் காட்டு மிராண்டி ரஸ்தாவில் அந்த பழைய பசலி பஸ் எப்படியோ அப்படி' (நாசகாரக் கும்பல்).

'தனித் தனி நபரின் பக்திப் பெருக்கு டைபாய்ட் வியாதியஸ்தனின் டெம்பரேச்சர் படம் மாதிரி அன்றைய வியாபார ஓட்டத்தைப் பொறுத்ததாக இருந்தாலும், பொதுவாக சங்கத்தினரின் முழு ஆதரவு இருந்ததால் விநாயகர் பாடு சராசரி பக்தி விகிதத்திற்கு மோசமாகி விடவில்லை' (நியாயந்தான்).

'முகப் பவுடர், செண்டு இவைகளில் நம்பிக்கை வைத்து ஆட்களை மயக்கி வரும் குரூபியான விபசாரிக்கு உதாரணம் போன்ற புகையிலை.'

'வர்ணக் கடுதாசியொட்டிய ஜப்பான் விளக்கு மாதிரியான சுடாத புகழ் வெளிச்சத்தில் உடம்பைக் கொஞ்சம் காயவைத்துக் கொண்டேன்.'

'ஆராய்ச்சியின் நுனிக் கொழுந்து வளரவேண்டுமென்ற நினைப்பினால், அவன் ஏற்றுக்கொண்ட சிலுவை அது.'

'இருளின் கருவைப் போன்ற குகைவாய்.'

'மனத்தை வெளியில் பறக்கவிட்டான். அது கூடு திரும்பும் பட்சி போல, பழைய நினைவுக் குப்பைகளில் விழுந்தது.'

(தேயிலைத் தோட்டத்தில் வேலைபார்க்கும் பெண்களைத் தான் அனுபவித்துவிட்டு மேலதிகாரிக்கு வழங்குகிற நபரைப் பற்றி.) 'ஸ்டோர் மானேஜர் கண்ணப்ப நாயனார் ரகம். தனது இஷ்ட தெய்வத் திற்குத் தான் ருசி பார்த்துத்தான் சமர்ப்பிப்பார்.'

'அகன்ற மார்பில் யக்ஞோபவீதம்போல், ஆற்றில் நீர் பெயருக்கு மட்டிலும் ஓடிக்கொண்டிருந்தது.'

இந்தவிதமாக உவமைகளிலும் உருவகங்களிலும் புதுமை செய்து, நடைக்கு விசேஷமான அழகும், கதைக்குத் தனிச்சுவையும் உண்டாக்கியவர் புதுமைப்பித்தன்.

கதை மாந்தரை வர்ணிப்பதிலும் தனித் தன்மை காட்ட வேண்டும் என்று அவர் விரும்பியதை அவருடைய கதைகள் காட்டுகின்றன. பாத்திரங்களை வர்ணிப்பதில் பின்னல்கள் நிறைந்த சிக்கலான நடையைச் சில சமயங்களில் அவர் உபயோகிப்பது வழக்கம். உதாரணமாக-

'ராமபத்மா பிரசுரகர்த்தாக்கள் லிமிடெட் என இலக்கிய சேவைக்கெனவே உதயமான கம்பெனியின் நடையைவிட்டு இறங்கி, இருட்டுக்குள் தான் என்ற பேதம் அற்று லயித்துப்போன வி.பியை யார் என்ன சொன்னாலும் அவர் பிறவி எழுத்தாளர் தான். இந்த இலக்கிய சிங்காதனம் கிடைக்குமுன்பே, தம்முடைய பெயரின்மேல் அவருக்கு வெறுப்பு உண்டு. இலக்கிய சிங்காதனம் தம்முடைய மானஸிக நிச்சயத்தைப் பொறுத்தவரையாவது கிடைத்துவிட்ட பிற்பாடு, தம்முடைய தகப்பனார் வழிப் பாட்டன் பேரில் இந்தப் பெயரை முன்னிட்டு வெறுப்பு ஸ்திரப்பட்டது. 'மாட்டுக்கு பருத்தி விதை வச்சியா, வண்டியை இழுத்துக் குறட்டு ஓரமாக விட்டுவிட்டுவா' என்று அதிகாரம் செய்வோரிடம், இடுப்பில் துண்டை வரிந்து கொண்டு கும்பிக் கொதிப்பை ஆற்றிக் கொள்ள முயலும் ஜீவன்களுக்குப் பலவேசம் என்ற பெயர் இருந்தால் முழுவதும் பொருத்தமாக இருக்கும். அன்று சென்ற யுகம் என மனக்குறளி காலநிர்ணயம் செய்யக்கூடிய ஒரு காலத்தில், தகப்பனாருடைய சுண்டுவிரலைப் பிடித்துக் கொண்டு அம்பாசமுத்திரம் உயர்தரப் பாடசாலைத் தலைமை ஆசிரியர் முன்பு, சிவப்பு உல்லன் குல்லாவுக்கு வெளியில் நாய்வால் மாதிரி நீட்டிக் கொண்டிருந்த வாழைநார் முடிப்புச் சடையும், எண்ணெய்க் கசடு வழியும் நெற்றியில் சாந்துப் பொட்டும், காதில் தட்டும், பச்சைக் கோட்டும், பிறந்த நாளுக்கு ஆச்சி வாங்கித்தந்த ஜரிகைக் கரை நீளப் பட்டு வேட்டியும் சிலேட்டும் கையுமாக நின்று நாமகள் கோட்டைவாசல் திறக்க வரங்கிடந்தபோது, 'என்னடா, பேருக்கு ஏற்றாற்போலப் பலவேசமாக இருக்கிறே; பின்னாலே புலி வேசம் போடப்போறே, கையில் என்ன இருக்கு தெரியுமா?' என்று பிரம்பைக் காட்டி அவர் வரவேற்றது, மனசில் சிலாசாசனம்போலப் பதிந்து கிடந்தது. அதிலிருந்து தொடங்கிய இந்த நாமாவளி ஆத்ம சோதனை இன்றுவரை தீர்ந்தபாடில்லை' (நிசமும் நினைப்பும்).

எளிய நடையிலும் தனித் தன்மையோடு புதுமையாகவும் ரசமாகவும் பாத்திர அறிமுகம் செய்யும் திறமையையும் அவர் பல கதைகளில் வெளிப்படுத்தியிருக்கிறார்.

'வித்தல் ராவிற்கு மாறுவேடத்தில் அபார நம்பிக்கை. அதிலும் தன்னுடைய திறமைக்கு எந்தத் தென்னிந்திய நாடக மேடை சார்லி சாப்ளினும் போட்டிபோட முடியாது என்பது இரண்டாவது நம்பிக்கை. சாதாரணமாக தாலுகா ஆபீஸ் குமாஸ்தா அல்லது எலிமெண்டரி பாடசாலை உபாத்தியாயர் மாதிரிதான் காட்சி அளிப்பார். சிற்சில முக்கிய சமயங்களில், மேல்நாட்டு உடைகளை அணிந்து ஒரு ஜாவா சுருட்டு சகிதமாகப் புறப்பட்டுவிட்டால், வெகுமதி வேண்டுமானலும் கொடுத்துவிடலாம். சிவபிரான் சிற்சில சமயங்களில் அர்த்தநாரீசுவரராகத் திகழ்வது உண்டு. கிப்ளிங் கவிதைக்கு விதிவிலக்காக, நமது வித்தல் ராவ், கீழ்மேல் நாடுகளின் நடையுடை இரண்டும் கலந்து பரிணமித்த ஒட்டுமாங்கனியாகத் தனித் தமிழ் சிவத்தை முறியடிப்பதும் உண்டு' (திருக்குறள் செய்த திருக்கூத்து). இது ஒரு உதாரணம்.

புதுமைப்பித்தன் கதைகளில் குழந்தைகள் அற்புதமான சிருஷ்டிக ளாக உயிர்வாழ்கின்றன. இயல்பான குழந்தைத் தன்மையோடு, வேடிக்கையும் விளையாட்டுப் புத்தியுமாக, புத்தி சாதுரியம் மின் வெட்டும் பேச்சு சாமர்த்தியத்தோடு குழந்தைகளை எழுத்தில் உருவாக்கித் தனது கதைகளில் நடமாடவிட்டிருக்கிறார் அவர்.

இவ்வாறு பல்வேறு அம்சங்களிலும் அவருடைய மேதைத் தன்மை பிரகாசிக்கும்படி புதுமைப்பித்தன் கதைகள் எழுதி, சிறு கதை இலக்கியத்தை வளம் செய்திருக்கிறார். இக் கலையில் அவர் எட்டியுள்ள சிகரங்களைத் தொட்டு பிடிக்கக்கூடிய எழுத்தாளர் வேறு எவரும் இல்லை என்றே சொல்லலாம்.

தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தில் புதுமைப்பித்தன் பெரும் சிறப்புடன் விளங்குவதற்கு அவருடைய சாதனைகள் அடிகோலி உள்ளன.

சம்பிரதாயமான பாதையிலேயே சிறுகதை தளர்நடைபோட்டுக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில், அவர் மற்றவர்கள் காண மறுத்த- அல்லது பார்க்க விரும்பாத-வாழ்க்கை யதார்த் தங்களை க் கண்டு, அவற்றை உள்ளது உள்ளபடி வலுவான நடையில் சித்திரித்துக் காட்டினார். கண்கள் இருப்பது எல்லாவற்றையும் பார்ப்பதற்குத்தான் என்ற 'இரும்புத் தத்துவம்' நமக்குத் தேவை என்று குறிப்பிட்டுள்ள புதுமைப்பித்தன், எதை வேண்டுமானாலும் எழுத்தில் கொண்டு வரலாம்; ஆனால், எழுதுவதை அழகாக, நயமாக, உணர்ச்சித் துடிப்

போடு சொல்லவேண்டும் என்பதைக் கொள்கையாகக் கொண்டு இருந்தார்.

உலக இலக்கியங்களில் ஆழ்ந்த தேர்ச்சி கொண்டிருந்த அவர் தமிழிலும் அவ் உத்திகளைக் கையாண்டு வெற்றி பெற்றார். தான் சொல்ல விரும்பியவற்றை அழுத்தமாகவும் புதுமையாகவும் சொல்வதற்காகத் தனக்கென ஒரு தனி நடையை அவர் வகுத்துக் கொண்டார். ஆங்கில வாக்கிய அமைப்புமுறைகளை-எழுதிச் செல்கிறபோதே நேரான வாக்கியத்தை உடைத்து, வேறு கருத்துக்களைக் கூற வகை செய்கிற 'Parenthetical clause' முறையை தாராளமாக உபயோகிப்பது; பின்னல்கள், சுற்றிவளைத்தல்கள் நிறைந்த 'Complex sentences' எழுதுவது போன்றவற்றை-எடுத்தாண்டு, பாராட்டப்படவேண்டிய புதுமைகளைச் செய்திருக்கிறார்.

ஆரம்பம், மத்திமம், முடிவு, சம்பவங்களின் அடுக்குகள், எதிர் பாராத திருப்பங்கள் என்றெல்லாம்கொண்டு கதை எழுதுகிற மரபு ரீதியான போக்கைத் தகர்த்துவிட்டு, மேல்நாட்டு இலக்கிய உத்திகளின் படி அவர் கதைகளை உருவாக்கிப் புதுவழி வகுத்தார். வட்டார வழக்குகளையும், மக்களின் பேச்சுமொழியையும் கதைகளில் தமிழில் முதன் முதலில் எடுத்தாண்டவர் புதுமைப்பித்தனேயாவார். பல விதமான சோதனைகளை அவர் வெற்றிகரமாகச் சாதித்துக் காட்டி இருக்கிறார்.

கேலியும் கிண்டலும் கலந்த, நகைச்சுவை நிறைந்த, வேகமும் அழுத்தமும் படிந்த நடை அவருடைய தனிச் சிறப்பு. சொல் ஆளுமையும், சிந்தனை ஆழமும், நம்பிக்கை வறட்சியும் அவருடைய எழுத்தின் சிறப்பியல்புகளாக இலங்குகின்றன. சிறுகதையில் ஆழ்ந்த, கனமான சிந்தனை வெளிப்பாடுகளை புதுமைப்பித்தன் அளவுக்கு வேறு எவரும் செய்ததில்லை.

புதுமைப்பித்தன் கதைகள் பலவும் பின்வரும் பெயர்களில் தொகுப்புகளாகப் பிரசுரம் பெற்றிருக்கின்றன-

புதுமைப்பித்தன் கதைகள்
காஞ்சனை
அன்று இரவு
புதிய ஒளி
சித்தி
சிற்றன்னை

உலக இலக்கியத்திலிருந்து நல்ல சிறுகதைகள் பலவற்றை புதுமைப் பித்தன் ஆங்கிலத்தின் வழியாகத் தமிழாக்கம் செய்திருக்கிறார்.

'மணிக்கொடி' முதலிய பத்திரிகைகளில் வெளிவந்த இம் மொழி பெயர்ப்புக் கதைகள். 'உலகத்துச் சிறுகதைகள்', 'பிறமொழிச் சிறுகதைகள்' என்ற புத்தகங்களாக வெளி வந்துள்ளன.

ஷேக்ஸ்பியர் நாடகங்கள் சிலவற்றையும் அவர் தமிழாக்கினார். அவை 'உலக அரங்கு' என்ற பெயரில் புத்தகமாக வந்திருக்கின்றன.

மேரி ஷெல்லி எழுதிய பயங்கர நெடுங்கதை ஒன்றை 'பிரேத மனிதன்' என்று அவர் மொழி பெயர்த்திருக்கிறார்.

ரஷ்ய நாவலாசிரியர் அலெக்சாந்தர் குப்ரின் விபசாரிகளின் வாழ்க்கையை அடிப்படையாக்கி எழுதியுள்ள சிறந்த நாவல் 'யாமா தி பிட்' என்பது. அதன் முதல் பகுதி 'படுகுழி' என்ற தலைப்பில் புதுமைப் பித்தனால் தமிழாக்கப்பட்டிருக்கிறது.

# 4. கட்டுரைகள்

'வாழ்வு, வாழ்க்கை' என இரண்டு பதங்கள் உண்டு. இவற்றிடையே உள்ள தொடர்பையோ, தொடர்பற்ற தன்மையையோ விளக்குவது மனித சிந்தனையின் சாரம்.

வாழ்வு என்பது தோற்றம். ஸ்திதி, மறைவு என முக்கூறாகத் தோன்றும் பிரபஞ்சத் தன்மை. வாழ்க்கை என்பது தனிப்பட்ட ஜீவ ராசியின் உயிர்ப்பாசத்தினால் நிகழும் அவஸ்தை. இவ்விரண்டுக்கும் உள்ள தொடர்பைக் காட்டுவது மனித சிந்தனையின் சாரம். அது தத்துவமாக உருவாகிறது.

வாழ்வின் நியதி ஒன்று. சூத்திரம் ஒன்று என வற்புறுத்துவது ஆஸ்திகம். வாழ்வு நியதிக்குக் கட்டுப்படாதது; பிரபஞ்ச உற்பத்தியே அகஸ்மாத்தாக நிகழ்ந்த சம்பவம்; இதில் நியதிக்கோ, ஒரு கட்டுக் கோப்புக்கோ இடம் உண்டு என நினைப்பது வெறும் சொப்பனா அவஸ்தை என வற்புறுத்துவது நாஸ்திகம்.

இவ்விரண்டுவிதமான மனநிலைகளுக்கும் பிறப்பிடம் மனித சித்தம். இதைச் சித்திரமாகத் தீட்டுவது இலக்கியம். மனிதனுக்கும் புறவுலகுக்கும் உள்ள தொடர்பை அல்லது தொடர் பின்மையை மனிதக் கண்கொண்டு பார்ப்பது இலக்கியம்.

மனிதன் உணர்ச்சிக்கு உட்பட்டவன். உணர்ச்சி உண்மையறியும் சாதனமாகவும், அதை மறைக்கும் திரையாகவும் அமைந்துள்ளது. இலக்கியம், மன அவசத்தில் தோன்றி, புறவுலகின் அடிமுடியை நாட முயலும் ஒரு பிரபஞ்சம். இது தேசந்தோறும் பாஷைக்கும் பண்புக்கும் தக்கபடி பல்வேறு ரூபங்களில் அமைந்துள்ளது. 'இதன் பொது விதிகளை, தன்மைகளை ஆராயும் நோக்கத்துடன்' கட்டுரைகள் எழுதியதாகப் புதுமைப்பித்தன் குறிப்பிட்டிருக்கிறார்.

அவருடைய சிந்தனை ஓட்டத்தின் தன்மையை இந்த முன்னுரை எடுத்துக்காட்டுகிறது. தனது கதைகளைப்பற்றியும், தன்னைப் பற்றியும் 'என் கதைகளும்நானும்' என்ற கட்டுரை எழுதியுள்ள புதுமைப்பித்தன், 'சிறுகதை' பற்றி விரிவான கட்டுரை ஒன்றும் எழுதியிருக்கிறார். தமிழ்ச் சிறுகதைகள் குறித்தும், பொதுவாகச் சிறுகதையின் தன்மைகள் பற்றியும் அதில் அவர் சிந்தனைகள் வளர்த்திருக்கிறார்.

பிரபஞ்சம், மனிதனின் தோற்றமும் வளர்ச்சியும், வாழ்க்கை பற்றி எல்லாம் ஆழ்ந்து சிந்திக்கும் கட்டுரை 'உங்கள் கதை' என்று எழுதப்

பட்டுள்ளது. அதன் முடிவுரையாக அவர் எழுதியிருப்பது ரசமான பகுதியாகும்-

'மனிதன் ஓர் அபூர்வப் பிராணி. காலநதியில் அவன் வாழ்வின் யாத்திரை வெகு அற்புதமானது. மனித வர்க்கம் இந்த நாகரிதத்தினால் நசித்துப்போகும் என்று எத்தனையோ அறிஞர்கள் வலியவந்து சாவுமணியடிக்கிறார்கள். பிரமைகளும் அசட்டுத் தனங்களும் இருக்கும் வரை அந்தக் கவலை உலகுக்கு ஏற்படவேண்டிய அவசியமே இல்லை.'

'மகாவிஷ்ணு விஸ்வரூபம் எடுத்து, வானத்தைத் தொட்டது பழைய கதை. அதன் உண்மையைப்பற்றி இங்கு ஆராய்ச்சி இல்லை. இன்று மனிதன்தான் வானத்தைத் தன் லட்சியங்களால் அளக்கிறான். அவன் கால்கள் புழுதி படிந்திருந்தாலும் பூமியில் நன்றாக ஊன்றப் பட்டிருக்கின்றன. அவன் காலைத் தடுமாறாமல் நிலைபெற வைத்திருக்கிற வரையில் மனிதவர்க்கம் நசித்துப் போகாது. வானத்து லட்சியங்கள் மனிதனைப் பூமியில் தாங்கவில்லை. உயிர்வாழ்தல் என்ற பாதம்தான் அவனை நிறுத்தி வைத்திருக்கிறது. பிரமை என்ற புழுதி படிந்திருந்தால் என்ன? உண்மை மங்கினாலும் வாழ்க்கை நின்று விடாது.'

கலை, தத்துவம், கவிதை, இலக்கியம் சம்பந்தமான புதுமைப் பித்தனின் அபிப்பிராயங்கள் சிந்தனைப் பொறிகளாக அவருடைய கட்டுரைகளில் ஆங்காங்கே கலந்து காணப்படுகின்றன. அறிவின், அனுபவ ஞானத்தின், மின்வெட்டுகளான அவை அவருடைய ஆழ்ந்த சிந்தனைத் திறனுக்கு நல்ல எடுத்துக்காட்டுகளாக ஒளிர்கின்றன.

'இலக்கியம் வாழ்க்கையின் எதிரொலிகள்; சமூகத்தின் வளர்ச்சியைக்காட்டும் மைல்கள்; மனித இலட்சியத்தின் உயிர் நாடி' (நமது கலைச் செல்வம்).

'இலக்கியத்தைப்பற்றி விஸ்தரிக்கலாம், விவாதிக்க முடியாது. சூத்திரத்தால் விளக்க முடியாது. தர்க்கத்திற்கு அடங்கியதல்ல அது. சிருஷ்டி வகையே அப்படித்தான். தர்க்கத்தின் வழியாக இலக்கியத்தைப் பார்க்க முடியாது. இலக்கியம் சிருஷ்டியின் மேதையுடன் எதிரெதிரான விஷயங்களை உள்ளடக்கியிருக்கலாம். தர்க்கம், ஒரு படிக்கட்டு வழியாக, ஒரு பரிசோதனைவழியாக, விஷயங்களை நோக்க முயலுகிறது. அதற்கு ஒன்று சரி என்று பட்டுவிட்டால் மற்றவை இருக்க நியாமில்லை, இருக்காது என்ற கொள்கை. ஆனால் இந்த வாழ்க்கை அவ்வளவு லேசான கட்டுக்கோப்பில் சிருஷ்டிக்கப் படவில்லை. தர்க்கத்தின் பிரியமான, அந்தரங்கமான கொள்கைகளைச் சிதறடிக்கும்படி வாழ்க்கை இருந்துவருகிறது. அதேமாதிரிதான்

இலக்கியமும். வாழ்க்கை தான் இலக்கியம்; இலக்கியம்தான் வாழ்க்கை.' (கடவுளின் கனவும் கவிஞனின் கனவும்).

'வாழ்க்கையின் அர்த்தத்தைச் சொல்வது தத்துவம். வாழ்க்கையைச் சொல்வது, அதன் ரசனையைச் சொல்வது இலக்கியம்.'

'பொதுப்பட நோக்கின், இலக்கியத்தின் ஜீவநாடி உணர்ச்சியும் சிருஷ்டி சக்தியும். இந்த இரண்டும் இல்லாவிட்டால் அது வெறும் குப்பை.' (இலக்கியத்தில் உட்பிரிவுகள்).

'கலை என்பது உள்ளத்தில் எழும் உணர்ச்சியின் பிரதிமை; அழகின் வடிவம்.'

'இலக்கியம் கலைகளில் எல்லாம் உயர்ந்தது. கவிதை கலையின் அரசி' (இதயத் துடிப்பின் பேச்சு).

'இலக்கியம் என்பது, நாடிய பொருளைக் கூட்டுவிக்கும் சாதனம் என்று நினைத்திருப்பதைப் போன்ற தவறான அபிப்பிராயம் வேறு கிடையாது. இலக்கியம் உள்ளத்தின் விரிவு; உள்ளத்தின் எழுச்சி, மலர்ச்சி.

இலக்கிய கர்த்தா வாழ்க்கையை அதன் பல சிக்கல்களுடன், நுணுக்கத்துடன், பின்னல்களுடன் காண்கிறான். அதன் சார்பாக அவன் உள்ளத்திலே ஒரு உணர்ச்சி பிறக்கிறது. அந்த உணர்ச்சி நதியின் நாதந்தான் இலக்கியம்.

அவன் நோக்கில் பட்டது, பெயர் தெரியாத புஷ்பமாக் இருக்கலாம்; வெறுக்கத்தக்க ராஜீய சூழ்ச்சியாக இருக்கலாம்; அல்லது மனித வர்க்கத்துக் கொடுமையின் கோரமாக இருக்கலாம். அதைப் பற்றிக் கவலையில்லை. அந்த அம்சத்தை நோக்கியவுடன் அவனது மனமும் இருதயமும் சலிக்கின்றன. இந்த சலனத்தின் பிததிமையே இலக்கியம்.'

'இலக்கியத்தின் உயிர்நாடி உணர்ச்சி. உணர்ச்சியில் எழாத தர்ம சாஸ்திரங்கள், வாழ்க்கையின் கீழே இருக்கும் பாறாங்கல்லுகள். இந்த உணர்ச்சியின் உண்மைதான் புதிய விழிப்பிற்குக் காரணம். உண்மையே இலக்கியத்தின் இரகசியம்.' (இலக்கியத்தின் இரகசியம்).

இச்சிந்தனைகள் புதுமைப்பித்தனின் இலக்கிய நோக்கை-இலக்கியக் கொள்கைகளை-ஓரளவுக்கு எடுத்துக்கூறுவனவாகவும் இருக்கின்றன.

தமிழ்க் கவிதையில் சப்த ஜாலங்கள் பற்றியும், கம்பனின் கவிதா

மேதையை பற்றியும், பாரதி கவிதைகள் குறித்தும், பாரதிதாசன் பற்றியும் அவர் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்.

தமிழர் நாகரிகத்தின் கிராம வாழ்க்கை; அரிஸ்டாட்டில் கண்ட ராஜீயப் பிராணி என்று இரண்டு தனிக் கட்டுரைகள். ராமாயண, பாரத காதாபாத்திரங்கள் பற்றிய சிறு சிறு கட்டுரைகள்; நாட்டுப் பாடல்கள் மற்றும் சில தனிப் பாடல்கள் போன்றவற்றின் நயங்களைச் சுவையுடன் விவரிக்கும் கட்டுரைகள்; ரேடியோ, சாப்பாட்டு ரசிகர் களின் குணம்-இப்படிப் பல்வேறு விஷயங்கள் பற்றிய கட்டுரைகளும் புதுமைப்பித்தன் சிருஷ்டிகளில் இடம் பெற்றுள்ளன. அவருக்கே இயல்பான கேலியும், குத்தும் கிண்டலும் இவ் எழுத்துக்களிலும் காணப்படுகின்றன.

புதுமைப்பித்தன் 'தினமணி', 'தினசரி' நாளிதழ்களில் பணியாற்றியபோது, 'புத்தக மதிப்புரை'கள் நிறையவே எழுதினார். சூடும் சுவையும் நிறைந்தவை அவை. 'ரசமட்டம்' என்ற புனைபெயரில் காரசாரம் மிகுந்த கண்டனக் கட்டுரைகள் சில எழுதினார்.

சிறுகதை, நாவலாசிரியர் மற்றும் பத்திரிகை ஆசிரியரான 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தியின் கதைகள் பற்றி அவர் எழுதிய சூடான விமர்சனங்கள் அந்நாளைய இலக்கிய ரசிகர்களின் நினைவில் என்றும் நிலைத்து நிற்பவை-

அதேபோல, தமிழில் தழுவி எழுதப்பட்ட-ஆயினும், சொந்தப் படைப்பு எனப் பெயர் பண்ணப்பட்டிருந்த-பில்கணன் நாடகம் ஒன்றையும் அவர் கடுமையாக விமர்சித்து நீண்ட கட்டுரை எழுதினார். 'இரவல் விசிறிமடிப்பு' என்ற அந்தக் கட்டுரை, அது வெளிவந்த நாட்களிலும், அதன் பின்னர் வெகு காலம் வரையிலும், ரசிகர்களால் வியந்து பாராட்டிப் பேசப்பட்டது. இவை எல்லாம் புத்தக வடிவம் பெறவில்லை.

# 5. கவிதைகள்

*புதுமைப்பித்தன் கவிதை பற்றி தீர்க்கமான நோக்கும் திட்ட வட்டமான கருத்துக்களும் கொண்டிருந்தார். அவைபற்றி எழுதியும் இருக்கிறார்.*

*'கவிதையைக் கலையின் அரசி என்பார்கள். கல்லாத கலை என்பார்கள். கவிதை என்றால் என்ன? யாப்பிலக்கண விதிகளைக் கவனித்து வார்த்தைகளைக் கோர்த்து அமைத்துவிட்டால் கவியாகுமா? கவிதையின் இலட்சணங்கள் என்ன?'*

*கவிதைக்குப் பல அம்சங்கள் உண்டு. ஆனால் அவைகளின் கூட்டுறவு மட்டும் கவிதையை உண்டாக்கிவிடாது. கவிதையின் முக்கியமான பாகம், அதன் ஜீவ சக்தி. அது கவிஞனது உள்மனத்தின் உணர்ச்சி உத்வேகத்தைப் பொறுத்துத் தான் இருக்கிறது.*

*கவிதைக்குப் பல அம்சங்கள் உண்டு என்றேன். அவை ஒவ்வொன்றும் அவசியம்தான். ஒன்று குறைந்தால் அது பொக்காக இருக்கும். ஆனால் அவற்றின் கூட்டுறவுடன், கவிஞனின் சக்தி லயப்படுகிறதினால்தான் கவிதை பிறக்கிறது. கவிதையின் ஜீவன் சிருஷ்டி சக்தி.*

*கவிதை மனிதனின் உணர்ச்சியில் பிறந்த உண்மை. உள்ளப் பாற்கடலில் பிறந்த அமிர்தகலசம். மனித உள்ளம் யதார்த்த உலகத்துடன் ஒன்றுபட்டோ, பிரிந்தோ கண்ட கனவு. அது உள்ள நெகிழ்ச்சியிலே, உணர்ச்சிவசப்பட்டு, வேகத்துடன் வெளிப்படுகிறது. அதுதான் கவிதை.'*

*'கவிஞன் உலகத்தின் உண்மைகளை, வாழ்க்கையின் ரகசியங்களை வேறுவிதமாகப் பார்க்கிறான். அவன் கண்கள் உணர்ச்சிக் கண்கள்; கனவுக் கண்கள். குழந்தையின் களங்கமற்ற உள்ளத்துடன், அதிசயத்துடன் பார்க்கிறான். குதூகலமோ துக்கமோ பிறக்கிறது. அந்த அனுபவம்தான் கவிதை.'*

*'கவிதை ஒரு அனுபவம். அதாவது அனுபவத்தை உணர்த்தும் சித்திரம். உண்மைக் கவிதைக்கு உரைகல் செவி. கம்பன் சொல்லு கிறான், செவிநுகர் கவிகள் என்று. கவிதையின் உயர்வைக் காதில் போட்டுப் பார்க்க வேண்டும். கவிஞன் தனது உள்ளத்து எழுந்த ஒரு*

அனுபவத்தை சப்த நயங்களினால்தான் உணர்த்தமுடியும். அவன் உள்ள நெகிழ்ச்சியை எவ்வளவுக்கெவ்வளவு அப்படியே குறையாமல் உணர்த்துகிறானோ, அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய மேதை விளங்குகிறது.

கவிதையில் சரியான வார்த்தைகள், சரியான இடத்தில் அமைய வேண்டும். கவிஞன் வார்த்தைகளை எடுத்துக் கோர்ப்பதில்லை. உணர்ச்சியின் பெருக்கு, சரியான வார்த்தைகளைச் சரியான இடத்தில் கொண்டு கொட்டுகிறது. கவிஞன் சொல்லவந்த விஷயத்தை அழுத்தமாகச் சொல்ல ஒரு வழிதான் உண்டு. அது அவனுக்குத் தெரியும். அதில்தான் கவிஞனது மேதை விளங்குகிறது.'

'கவிஞனுக்கு அவன் உள்ள அனுபவத்தை எடுத்துக்காட்டக் கூடிய நடை வேண்டும். கவிதை கேட்கப்படுவது. உணர்ச்சி உத் வேகத்திற்குத் தகுந்ததுபோல் நடையின் நயமும் வேண்டும்.'

கவிதை குறித்து சில சில கட்டுரைகளில் அவர் எழுதியுள்ள கருத்துக்கள் இவை. அவற்றுக்கு ஏற்ப அவர் கவிதைகள் இயற்றினார்.

'மணிக்கொடி' காலத்தில் எழுத்தாளர்கள் ந.பிச்சமூர்த்தியும் கு.ப. ராஜகோபாலனும் 'வசன கவிதை' என்று யாப்பு இல்லாக் கவிதைகள் எழுதிவந்தார்கள். பின்னர் இம்முயற்சி 'கட்டில் அடங்காத கவிதை' எனவும் குறிப்பிடப்பட்டு வந்தது. 1940 களில் அது மேலும் வலுப் பெற்று வளர்ந்தது.

புதுமைப்பித்தன் வசன கவிதையை ஆதரிக்கவில்லை. தனது எதிர்ப்பையும் கண்டனத்தையும் அவர் அவ்வப்போது தெரிவித்தும் இருக்கிறார்.

'யாப்பு முறையானது பேச்சு அமைதியின் வேகத்திற்கு அழுத்தம் கொடுக்கும் ஒரு ரூபமேயொழிய பேச்சு முறைக்குப் புறம்பான ஒரு தன்மையைப் பின்பற்றி வார்தைகளைக் கோர்ப்பதல்ல...யாப்பு விலங்கல்ல. வேகத்தின் ஸ்தாயிகளை வடித்துக் காட்டும் ரூபங்கள். குறிப்பிட்ட யாப்பமைதி பழக்கத்தினாலும் வகையறியா உபயோகத் தினாலும் மலினப்பட்டுவிடும்பொழுது, ரூபத்தின்மீது வெறுப்பு ஏற்படுவது இயல்பு. கவிதையுள்ளதெல்லாம் ரூபம் உள்ளது என்று கொள்ளவேண்டும். வெண்பாவும் விருத்தமும் கண்ணிகளும் ஒரு விஸ்தாரமான அடித்தளமே ஒழிய, வெண்பாவிலேயே ஆயிரமா யிரமான ரூப வேறுபாடுகள் பார்க்கலாம். இன்று ரூபமற்ற கவிதையெனச் சிலர் எழுதிவருவது, இன்று எவற்றையெல்லாம் ரூபமெனப் பெரும்பாலோர் ஒப்புக் கொள்கிறார்களோ அவற்றிற்குப் புறம்பான ரூபத்தை அமைக்க முயலுகிறார்கள் எனக் கொள்ள

வேண்டுமே ஒழிய, அவர்கள் வசனத்தில் கவிதை எழுதுகிறார்கள் என்று நினைக்கக்கூடாது. அவர்கள் எழுதுவது கவிதையா இல்லையா என்பது வேறு பிரச்சினை. இன்று வசன கவிதை என்ற தலைப்பில் வெளிவரும் வார்த்தைச் சேர்க்கைகள் வசனமும் அல்ல, கவிதையும் அல்ல. 'இது புதுமைப்பித்தனின் கருத்து.

ஆகவே, மரபுரீதியாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற ரூபங்களுக்குப் புறப்பான ரூபத்தை புதுமைப்பித்தன் தனது கவிதைகளில் கையாண்டிருக்கிறார் என்று கொள்ளவேண்டும். கவிதை செவிநுகர் இனிமை பெற்றிருக்க வேண்டும் என்ற கருத்தை அவர் பல இடங்களில் வலியுறுத்தியிருக்கிறார். அதன்படி ஓசை நயத்துக்கு அவர் கவிதைகளில் தனிக் கவனிப்பு அளித்திருக்கிறார். 'உள்ளத்தின் அனுபவத்தை-உணர்ச்சி உத்வேகத்தை' வெளிப்படுத்தக்கூடிய நயமான நடையை அவருடைய கவிதைகள் கொண்டிருக்கின்றன.

அவருடைய வழக்கமான நையாண்டி, பரிகாசம், நம்பிக்கை வறட்சி, கருத்து ஆழம், சொல் வேகம் எல்லாம் அவரது கவிதைகளிலும் கலந்து அவற்றுக்கு தனித்தன்மை ஊட்டுகின்றன.

எல்லோரும்-எழுத்தில் என்னென்னவோ செய்து வயிறு வளர்க்கிற, புகழ் தேடுகிற பற்பலரும்-கலைக்கொலை பண்ணிக் கொண்டிருக்கிற காலத்தில், சூழ்நிலையில், கலைகளின் தெய்வமாகிய சரஸ்வதி தேவி நிஜமாக இருக்கமுடியுமா? அவள் உயிர் வாழ்வதாகச் சொல்லப்படுவது சரிதானா? இப்படி சரஸ்வதியையே நோக்கிக் கேட்கிற தன்மையில் எழுதப்பட்டுள்ள கவிதை 'நிசந்தானோ சொப்பனமோ!'

'செல்லரித்த நெஞ்சின்
சிறகொடிந்த கற்பனைகள்
இடுப்பொடிந்த சந்தத்தில்
இடறிவிழும் வார்த்தைகளில்
ஊரில் பவனிவர
உவப்புடனே நீயிருந்து
முத்தமிழை-
பாலித்து, பயிராக்கி,
பசிய உயிர்தான் தோன்ற
வளர்ந்து வரும் வார்த்தை
நிசந்தானோ?
சத்தியமாய்க் கேட்கிறேன்
சரஸ்வதியே நிசந்தானோ?'

இப்படி இன்னும் யதார்த்த நிலைகளைக் கூறி, 'நிசமாக்க கேட்கின்றேன்-ஒரு வார்த்தை

நீயு மிருத்தல் நினைவணங்கே
நிசந்தானோ?
நியுமிருத்தல் நிசந்தானோ?'

என்று கவிஞர் கேட்கிறார்.

புதுமைப்பித்தன், வேலூர் வெ. கந்தசாமிக் கவிராயர் என்ற புனைபெயரில் தனது கவிதைகளை எழுதினார். அவர் உணர்ச்சி வேகத்தோடு எழுதிய கவிதைகளில் ஒன்று 'ஓடாதீர்' என்பது.

'மணிக்கொடி' எழுத்தாளர்களில் ஒருவரான கு.ப. ராஜகோபாலன் **1944**ல் மரணம் அடைந்தார். வறுமை வாழ்வில் மிகவும் துயரப் பட்டவர் அவர். அவர் உயிரோடு இருந்த காலத்தில் உரிய கவனிப்பையும் கவுரவத்தையும் பெறவில்லை. அவர் இறந்த பிறகு அவருக்காகத் தமிழ்நாட்டில் நிதிகள் திரட்டப்பட்டன. கலைஞனை அவனது வாழ்நாளில் கவனிக்காது கஷ்டப்படும்படி விட்டுவிட்டு, அவன் செத்த பிறகு .அவனது புகழைப் பாடிக் கொண்டாடுகிற போக்கை விரும்பாத புதுமைப்பித்தன் ரசிகர்களை நோக்கி பாடுகிற தன்மையில், 'ஒகோ உலகத்தீர், ஓடாதீர்!' என்ற இந்தக் கவிதையை இயற்றியுள்ளார். சூடான அங்கதமும் சுவையான கிண்டலும் நிறைந்த கவிதை இது.

நாகரிக யுவதிகள் யுவர்களின் போக்கையும், தற்காலக் காதலின் தன்மையையும் கிண்டல் செய்து, அவர் 'காதல் பாட்டு' என்ற கவிதையைப் படைத்திருக்கிறார். காதலியின் வர்ணனை வெகு ரசமாக அமைந்துள்ளது இதில். வர்ணிப்பின் இறுதிப் பகுதி இது-

'காதல் மணங் கமழும்
காலேஜுக் கன்னி;
பேபி எனப் பெயராள்
பெதும்பைப் பருவத்தாள்
கைப்பையும் வாட்சும்
கால்செருப்பின் நாஸூக்கும்
தரையின் தவம் என்ன
தார்ரோட்டுக் கனவென்ன
வெற்றிப் பராக்கு சொல
வேகமாய் நடந்து வந்தாள்.'

அன்று வந்த மாடல் அதிரூபவல்லி' அவள் காதல் மொழி பேசும் கண்ணனிடம் கூறுகிறாள்-

'பண்ணமைந்த காதல்
பரமபதம் கிடைக்கப்
பதைக்கின்றேன்.
ஆனாலும்-
பாங்கியிலே கொஞ்சம்
பணம் ஏதும் வேண்டாமா?
காதல் பெரிது-
அதுதான் எனக்கும் தெரிகிறது!
காசு பெரிதென்பதை நீ
கருத்திலேன் கொள்ளவில்லை?
காசு இல்லாமல் என்ன
கதை நடக்கும்?'

'இணையற்ற இந்தியா' என்பது நையாண்டி நிறைந்த பாட்டு, தற்கால யதார்த்த நிலையை-நாட்டின் நிலைமையையும் மக்களின் போக்கையும்-குத்திக்காட்டும் கவிதை இது.

'ஆற்றங்கரை யருகே அணிவயல்கள் உண்டு;
சோற்றுக்குத் திண்டாட்டம் சொல்லி முடியாது!'

என்று கூறும் கவி விவரிக்கிறார்-

'வேதம் படித்திடுவோம் வெறுங்கை முழம் போட்டிடுவோம்
சாதத்துக்காகச் சங்கரனை விற்றிடுவோம்!
அத்தனைக்கும் மேலல்லோ அஹிம்சைக் கதைபேசி
வித்தகனாம் காந்தியினை விற்றுப் பிழைக்கின்றோம்!
இந்தியா தேசம்-அது
இணையற்ற தேசம்!'?

'தொழில்' என்றொரு கவிதை. ரேடியோக் கவியரங்கத்துக்காக எழுதப்பட்டது. முருகனை நோக்கிப் பாடும் வெண்பாக்களாக அமைந்த இக்கவிதை வெகு ரசமானது. பரிகாசத் தொனிமிகுந்தது. ஆனால்,தொழில், அதன் தன்மை மற்றும் பிரிவுகள், உயர்வு அல்லது சிரமம் போன்ற எதைப்பற்றியும் எதுவுமே சொல்லாதது.

'கும்பிடுவார், குழைவார், கூத்தாடப் பல்லிளிப்பார்
வம்பிடுவார் பின்னால் வழக்கிடுவார்-அம்புவியில்
அன்னார் தொழிலை அழகாகப் பண்ணி வச்சேன்
என்னமோ காணாமல் போச்சு.'

'பண் என்பார் பாவம் என்பார் பண்புமர பென்றிடுவார்
கண்ணைச் சொருகிக் கவி என்பார்-அண்ணாந்து
கொட்டாவி விட்டதெல்லாம் கூறுதமிழ் பாட்டாச்சே
முட்டாளே இன்னமுமா பாட்டு?'

'தொழில்' கவிதையில் உள்ள இரண்டு பாடல்கள் இவை.

அவருடைய விரக்தியையும் நம்பிக்கை வறட்சியையும் பிரதிபலிக்கிற 'இருட்டு' நல்ல கவிதைகளில் ஒன்று ஆகும்-

நடந்தேன், நடக்கின்றேன்
நடந்து நடந்தேகுகின்றேன்,
நடந்தேன், நடக்கின்றேன்
நடந்து நடந்தேகுகின்றேன்.

செல்லும் வழி இருட்டு
செல்லும் மனம் இருட்டு,
சிந்தை அறிவினிலும்
தனி இருட்டு.

நடையால் வழிவளரும்
நடப்பதனால் நடைதொடரும்
அடியெடுத்து வைப்பதற்கு
ஆதிவழி ஏதுமில்லை.

சுமையகற்றிச் சுமையேற்றும்
சுமைதாங்கியாய் விளங்கும்
சுமைக்குள்ளே தானியங்கிச்
சுமையேற்றும் சும்மாடே!

'எங்கு, எதற்கு
ஏனெ'ன்று கேட்டக்கால்
'எங்கு எதற்கு
ஏனெ'ன்றே கேள்வி வரும்.

என்னை அணைத்தேகும்
இருட்டுக் குரல் தானோ?
என்னை அணைக்க வரும்
மருட்டுக் குரல் தானோ?

நடந்தேன், நடக்கின்றேன்
நடந்து நடந்தேகுகின்றேன்,
நடந்தேன், நடக்கின்றேன்
நடந்து நடந்தேகுகின்றேன்.

வேறு சில சிறு சிறு கவிதைகளும் அவர் எழுதியுள்ளார்.

புதுமைப்பித்தன் 'ராஜமுக்தி' சினிமாவுக்குக் கதை வசனம் எழுதுவதற்குப் புனா நகரம் சென்று, அங்கே காச நோயினால் மிகவும் கஷ்டப்பட்ட சமயத்திலும், அவருக்கே இயல்பான நகைச்சுவை, கேலி உணர்ச்சியோடு சிறு சிறு கவிதைகள் எழுதி வைத்தார்.

பழங்காலத்தில் மிகுந்த வறுமைநிலைப்பட்ட புலவர் ஒருவர் வேற்றூரில்தான் படுகிற கஷ்டங்களை மனைவிக்கு உணர்த்த விரும்பியவராய், வானில் பறந்து சென்ற நாரையிடம் சேதி சொல்வது போல் ஒரு பாடல் எழுதினார். அந்தப் பாடல் தமிழில் பிரசித்தமான பழம் பாடல்களில் ஒன்று ஆகும்.

அதைப் பின்பற்றி புதுமைப்பித்தன், தனது உடல்நிலை குறித்து எழுதிவைத்த வரிகள் ரசிப்பதற்கு உரியனவாகும்-

'கையது கொண்டு மெய்யது பொத்தி
போர்வையுள் கிடக்கும் பெட்டிப் பாம்பென
சுருண்டு மடங்கி சொல்லுக்கு இருமுறை
லொக்கு லொக்கென இருமிக் கிடக்கும்
ஏழையாளனைக் கண்டனம் எனுமே!'

# 6. சில விவரங்கள்

புதுமைப்பித்தன் சின்னச் சின்ன நாடகங்கள் சில எழுதி இருக்கிறார். கேலியும் குத்தலும் நிறைந்த அவை வாழ்க்கையின் யதார்த்த நிலைமைகளை உணர்ச்சியோடு சித்திரிக்கும் புதுமைப் படைப்பு களாகவும் அமைந்துள்ளன.

அப்படி அவர் முதலில் எழுதியது 'பக்த குசேலா-கலியுக மாடல்' என்பதாகும். பழைய குசேலர் கதைக்கு ஒரு பகிடி (Parody) போல எழுதப்பட்டது. குழந்தைகள் அதிகம் உள்ள குடும்பத்தில்-வறுமை மிகுந்த சூழ்நிலையில்-சாப்பாட்டு நேரம் எவ்வளவு போட்டி நிறைந்ததாகவும் பரிதாபத்துக்கு உரியதாகவும் இருக்கும் என்பதைக் காட்டும் காட்சி உருக்கமானது.

மத்தியதரக் குடும்பத்தைச் சேர்ந்தவர், இல்லாமையைச் சமாளிக்க ஒவ்வொருநாளும் எப்படி எப்படியோ கடன்கள் வாங்கி, அவற்றைத் திருப்பித்தர இயலாத நிலையில் சாக்குப் போக்குகள் கூறிச் சமாளித்து, எவ்வளவோ பாடுகள் பட்டு, சாமார்த்தியங்களைக் கையாண்டு காலம் கழிக்க நேரிடுகிறது என்பதை விவரிக்கிறது 'நிச்சயமா நாளைக்கு' எனும் நாடகம்.

செல்வம் மட்டுமே மிகுதியாகப் பெற்றுள்ள அறிவிலி ஒருவனையும், ஞானம் மாத்திரமே அதிகமாகப் பெற்ற அறிவாளி ஒருவனையும் கதை மாந்தராகக் கொண்டு, செல்வம் அதிக வலிமை உடையதா; அறிவு சக்தி மிகக் கொண்டதா என ஆய்வு நடத்தும்-இரண்டுக்குமிடையே நிகழும் போட்டியை சுவாரஸ்யமாகச் சித்திரிக்கும்-நாடகம் 'வாக்கும் வக்கும்'.

இவை போக, சில வரலாற்று நூல்களையும் புதுமைப்பித்தன் எழுதியிருக்கிறார்:

அந்நாளைய இத்தாலிய சர்வாதிகாரி பெனிட்டோ முசோலினியின் வாழ்க்கையை 'பேசிஸ்ட் ஜடாமுனி' என்ற தலைப்பில் அவர் எழுதினார். விறுவிறுப்பும் சுவாரஸ்யமும் நிறைந்த இவ் வரலாற்றின் ஆரம்பப் பகுதி எடுப்பும் மிடுக்கும் வனப்பும் கொண்ட நடையில் சிறப்பாக அமைந்திருக்கும்.

அதேபோல ஜெர்மானிய சர்வாதிகாரி அடால்ப் ஹிட்லர் வாழ்க்கையும் அவர் எழுதினார். 'கப்சிப் தர்பார்' என்ற அந்த நூலின் முதல் பகுதி மட்டுமே அவரால் எழுதப்பட்டது. பிற்பகுதியை பத்திரிகை ஆசிரியராகப் பணியாற்றியுள்ள எழுத்தாளர் ந. ராமரத்னம் எழுதியுள்ளார்.

பாசிச சர்வாதிகாரிகளின் வாழ்க்கை வரலாற்றை சுவாரஸ்யமாக எழுதியிருப்பதால், புதுமைப்பித்தனுக்கு அவர்கள் பேரில் வியப்பும், பாசிசத்தின் மீது அபிமானமும் இருந்திருக்கக்கூடுமோ என்று இக் காலத்தில் சிலர் சந்தேகிக்கிறார்கள். இது சரியல்ல.

இரண்டாவது உலக மகா யுத்த காலத்திலும், அதை அடுத்த சில ஆண்டுகளிலும் உலகப் பிரமுகர்கள் பலரையும் பற்றி பத்திரிகைகள் விரிவாகவே எழுதிக் கொண்டிருந்தன. உலக அரங்கில் பெயர் பெற்று விளங்கிய அயல் நாடுகளின் தலைவர்கள், பெரிய மனிதர்கள் பற்றிய வாழ்க்கை வரலாற்று நூல்கள் ஆங்கிலத்தில் அதிக அதிகமாக வந்தன. வியாபார நோக்கில் தான்.

அந்தப் போக்கை ஒட்டி, தமிழிலும் வாணிப நோக்கில், பத்திரிகைகளும் புத்தக வெளியீட்டு நிறுவனங்களும் அவை போன்ற வரலாறுகளைப் பிரசுரிப்பதில் ஆர்வம் காட்டின. காலத்தை அனுசரித்து, அவர்களுக்காக, புதுமைப்பித்தனும் முசோலினி, ஹிட்லர் ஆகியோரது வரலாறுகளை எழுதினார்.

புதுமைப்பித்தன் நாவல் எதுவும் எழுதவில்லை. எழுத ஆரம்பித்த ஒன்றிரண்டு முயற்சிகளும் அபூர்ணமாகச் சில பக்கங்களோடு நின்று விட்டன.

மாற்றாந்தாயின் அன்பில்லாப் போக்கினால் பாதிக்கப்படும் குழந்தைகளை வைத்து அவர் எழுதப் தொடங்கிய 'சிற்றன்னை' இப்படிப்பட்ட முயற்சிகளில் ஒன்றேயாகும்.

பெரிய நாவல்கள் எழுதவேண்டும் என்று அவர் ஆசைப்பட்டது உண்டு. அவற்றின் கதைக்கருபற்றி பேச்சோடு பேச்சாக நண்பர்களிடம் அவர் சொன்னதும் உண்டு., ஒரு நாவலுக்கு 'மூக்கபிள்ளை' என்றுகூட அவர் பெயர் வைத்தார். ஆயினும் அவற்றில் எதையும் அவர் எழுதவில்லை.

புதுமைப்பித்தன் எழுத்துக்களைப் படித்து ரசிக்கிறவர்கள், அவருடைய கதைகள்மூலம் அவரது உள்ளத்தை உணர்கிறவர்கள், அவர் எப்படி இருந்தார், எப்படிப் பழகினார் என்று அறிய விரும்புவது இயல்பேயாகும்.

புதுமைப்பித்தனோடு நெருக்கமான நட்புகொண்டு பல வருட காலம் அவரோடு பழகியவர் கவிஞரும் எழுத்தாளருமான தொ.மு.சி. ரகுநாதன். அவர் 'புதுமைப்பித்தன் வரலாறு' என்று விரிவாகவே ஒரு நூல் எழுதியிருக்கிறார். அதில் அவருடைய தோற்றம், குணங்கள், நகைச்சுவை, உரையாடல், திறமைபற்றி எல்லாம் திறமையாக விவரித்துள்ளார்.

புதுமைப்பித்தனின் தோற்றம் பற்றிய வர்ணனை இங்கே தரப்படுகிறது-

'புதுமைப்பித்தன் நிதானமான உயரமுள்ளவர். சுமார் ஐந்தே முக்கால் அடி உயரமிருப்பார். ஆனால் உயரத்துக்குத் தக்கபடி உடம்பிலே சதைப்பிடிப்பு கிடையாது. மிகவும் ஒல்லியான சரீரம். தொளதொளத்துத் தொங்கும் வெள்ளைக் கதர் ஜிப்பாதான் அவரது உடலின் ஒட்டெலித் தன்மையை மூடி மறைத்துக் கொண்டிருக்கும். ஒடிசலான, கீரைத்தண்டுபோல் மெலிந்த உடல், தலைமயிரை அதிகமாக வளர்த்துப் பின்புறமாகச் சீவிவிட்டிருப்பார். ஆனால் அவர் தலைமயிரைச் சீவி விட்ட சிறிது நேரத்துக்கெல்லாம் அது கலைந்து போய் விடும். அவரது தலைமயிர் குத்திட்டுச் சிலிர்த்து நிற்கும் முரட்டு ரோமம் அல்ல. தொய்வும் மென்மையும் பொருந்திய பிள்ளை முடிதான். இருந்தாலும் அவர்தாமே தன் தலைமயிரைக் கலைத்துவிட்டுக் கொள்வார். மெலிந்து பிஞ்சாய் இருக்கும் தமது கைவிரல்களால் அடிக்கடி தலைமயிரைப் பின்னோக்கிக் கோதிவிட்டுக் கொள்வார். எனவே அவரது கிராப் வரிசை குலைந்து தொளதொளத்துச் சரிந்து கிடக்கும். அதில் இங்கும் அங்குமாக வெள்ளிய நரை லேசாகப் புரையோடிப் போயிருக்கும்.

அகலமான நெற்றி, எனினும் பாளம் பிளந்த கரிசல் காட்டைப் போல் நெற்றியில் கீறல் விழுந்த மாதிரிச் சுருக்கங்கள் படிந்திருக்கும். அவரது கண்கள் கடலாழத்தின் மடியிலே அமிழ்ந்து கிடந்து புரளும் முத்துக்களைப்போல் ஆழக் குழிக்குள் அமிழ்ந்து கிடந்து ஒளிவீசும் கண்கள். கண்களிலே ஏதோ ஒரு ஏக்கம் கலந்த வெறி தெறிப்பதுபோல் தோன்றும்; லேசாகக் கிழடுதட்டிப்போன பிரமை தட்டுப்படும்.

சிலபேருடைய கண்களை எவ்வளவு நேரமானாலும் கண் கூசாமல் பார்த்துக் கொண்டிருக்கலாம். புதுமைப்பித்தன் கண்களை அப்படிப் பார்க்க முடியாது. அதன் பார்வை பார்க்கிறவர்களின் கண்களைச் சீக்கிரம் உறுத்திவிடும்.

அவரது மூக்கு சிறிதளவு ஏந்திவிட்டாற்போல் நிமிர்ந்து தோன்றும். அவரது பற்கள் மிகவும் பெரியவை. வெற்றிலைக்

காவியேறிக் கறுத்துப் போகாவிட்டாலும், பளபளப்பு இழந்து மஞ்சள் பாரித்திருக்கும் பெரிய பற்கள்.

அவரது உதடுகள் பெரியவை. கீழுதடு மிகவும் தடித்துப் போன உதடு. அதிலும் வெற்றிலைப் போட்டுப் போட்டு கீழுதடு மேலும் தடிப்பேறி, ஓரளவு சரிந்து தொங்குவதுபோலிருக்கும். எனவே வாயின் முன்வரிசைப் பற்கள் அநேகமாக வெளியே தெரிந்தவண்ணமே இருக்கும். நெஞ்சு பிரம்புக்கூடை மாதிரி சதைப்பற்றற்று, கூடாடிப் போய் தட்டையாக இருக்கும். கை கால்கள் எல்லாம் மிகவும் ஒல்லியாகி, வயதுக்குமீறிய முதுமை தட்டித் தோன்றும்.

புதுமைப்பித்தன் பேசும்போது தலையை ஆட்டியாட்டிப் பேசுவார். எதிரிலுள்ளவர்கள் பேசும்போதும் அந்தத் தலையாட்டம் நிற்காது. தலையசைப்போடு அடிக்கடி தலைமயிரையும் கோதிவிட்டுக் கொள்வார். அவரது வாயில் எப்போதும் சிரிப்பும் சிவப்புமாகவே இருக்கும். வெற்றிலையைப் போட்டு அண்ணாந்து இருந்துகொண்டு கடகடவென்று சிரிப்பார். அவரது சிரிப்பு பொய்ச் சிரிப்பல்ல. மனம் திறந்த பிள்ளைச் சிரிப்பு. எனினும் புதிதாகக் கேட்பவனுக்கு ஒரு கணம் எரிச்சலையோ, அருவருப்பையோ . தரும் பேய்ச் சிரிப்பு. வெடிக்க வெடிக்கச் சிரிப்பார். அவரது சிரிப்பு வெறும் மகிழ்ச்சியின் அறிகுறியாக மட்டும் விளங்குவதில்லை. சமயங்களில் தம்முடன் பேசிக் கொண்டிருக்கும் எதிர் நபரின் அறிவை அளந்துபார்க்கும் அளவு கோலாகவும், எதிரி விடுத்த கேள்விக்கு என்ன பதில் அளிப்பது என்பதை, அடுத்துச் சிந்திக்கும் முயற்சியை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் மறைக்கும் திரையாகவும் பயன்படும்.

எப்போது பார்த்தாலும் அவர் பேச்சிலே சளைக்கமாட்டார். தலைக்குமேல் எழுத்து வேலைகளோ இதர வேலைகளோ இருந்தாலும் கூடப் பேச்சுக்குமட்டும் பின்வாங்கமாட்டார். சில சமயங்களில் அவருக்குப் புகையிலைக் கமறலாலோ, அதிகப் பேச் சினாலோ தொண்டைக் கமறலெடுத்து, இருமலும் புகைச்சலும் எழும்பி, கண் விழியில் நீர் பிதுங்கும். அப்படியிருந்தாலும்கூட, இருமல் நின்ற பிறகு ஒரு மடக்குத் தண்ணீர் குடிப்பார். வெற்றிலை போடுவார். மீண்டும் பேச்சைத் தொடங்கிவிடுவார்.

பேசுவதற்கு இதுதான் விஷயம் என்ற நியதி அவரிடம் கிடையாது. பழைய இலக்கியம், புதிய இலக்கியம், சங்கீதம், சோதிடம், சித்த வைத்தியம், சித்தர் பாடல்கள், திருமந்திரம், கம்பராமாயணம், காம சம்பந்தமான இலக்கியங்கள், விவகாரங்கள், ஊர் வம்பு-எதைப் பற்றித் தான் பேசுவது என்பதில்லை. ஒன்றுமற்ற விவகாரத்தைப் பேசி னாலும் வாய் ஓயாமல் பேசுவார். அதே மாதிரி, கேட்கிறவர்களின்

தலையே கிறுகிறுத்துப் போகும்படி மிகவும் நுண்மையான அபூர்வமான விஷயங்களையும் தத்துவங்களையும் பற்றி அவர் பேசுவார். அவருக்கு எல்லா விஷயங்களும் தெரியுமோ இல்லையோ-ஆனால், கேட்கிறவர்களிடம் ஆணித்தரமாக அறைந்தாற்போலத்தான் பேசுவார்.

புதுமைப்பித்தனுக்குச் சாப்பாட்டைவிட, பேச்சில்தான் பிரியம் அதிகம். அதைவிட வெற்றிலை போடுவதில் மிகுந்த பிரியம். வெற்றிலை, காப்பி, பேச்சுத்துணைக்கு ஆள்-இத்தனையும் இருந்து விட்டால், சாப்பாட்டில்கூட அவருக்கு நாட்டம் செல்லாது.

அவர் சாப்பிடுவதும் அப்படி ஒன்றும் அதிகமாக இராது. காக்கைக்கு சோறு வைத்த மாதிரி, இரண்டு கவளம் சாப்பிடுவார். இருந்தாலும் சுசிருசியாக இருக்கவேண்டும் என எண்ணுவார்.

வெற்றிலை போடும் பழக்கம் அவரை இளமையிலேயே பிடித்துக் கொண்டது. வெற்றிலையைத் தவிர, எப்போதாவது சிகரெட்டோ, நல்ல உயர்ந்த ரகச் சுருட்டோ குடிப்பார். சிகரெட் குடிப்பதில் அவருக்கு அதிகப்படியான பழக்கமோ ரசிப்போ இருந்ததாகச் சொல்லமுடியாது. இருந்தாலும் நல்ல உயர்ந்த ரகமான சிகரெட்டுகளையே பிடிப்பார்.

புதுமைப்பித்தன் கதையோ கட்டுரையோ எழுதும்போது நிதானமாக ஆர அமர இருந்து எழுதமாட்டார். பேனாவை எடுத்து விட்டால், அந்தப் பேனாவுக்குள் எங்கிருந்தோ ஒரு அசுர வேகம் வந்து புகுந்துவிடும். விறுவிறு என்று மெயில் வேகத்தில் கை ஓடும். இடையில் வெற்றிலை போட்டுக்கொள்ளும் நேரத்தைத் தவிர, மற்ற நேரங்களில் எழுதுவதில் ஸ்தம்பிப்பே ஏற்படாது.

புதுமைப்பித்தனின் கையெழுத்து கண்ணில் ஒற்றிக்கொள்ளக் கூடிய பூப்போன்ற எழுத்துக்கள் அல்ல. என்னவோ சுருக்கெழுத்து எழுதிய மாதிரி இருக்கும். அங்குமிங்கும் கோடுகள் தெரிவது மாதிரி தான் பிரமை தோன்றும். சிலருக்கு தலையெழுத்து நன்றாக இல்லா விட்டாலும் கையெழுத்து மட்டும் மணிமணியாக இருக்கும். புதுமைப் பித்தனின் கையெழுத்தோ அவரது தலையெழுத்தைவிட மோசமாக இருந்தது.

புதுமைப்பித்தனுக்குத் தமது எழுத்துக்களில் மிகுந்த ஈடுபாடு, தம்முடைய கதைகளை அவர் குழந்தைகளைப்போல் புனிதமாகவும் அன்போடும் மதித்துப் பேசுவார். புதுமைப்பித்தன் தமது எழுத்தின் மதிப்பை உணர்ந்து பேசுவார். அதை விமர்சனம் செய்தால் கேட்பார். குறைத்துப் பேசுவதாகத் தோன்றினால் சீறியெழுந்துவிடுவார்.' (ரகுநாதன்).

# 7. புதுமைப்பித்தனின் செல்வாக்கு

'இருபதாம் நூற்றாண்டின் தமிழ்க் கவிதைக்குப் புதுமையும் புத்துயிரும் கொடுத்தவர் பாரதி. தமிழ் வசனத்துக்குப் புதுமையும் புத்துயிரும் கொடுத்தவர் புதுமைப்பித்தன். ஆனால் பாரதிக்கு முன் தமிழில் மிகச் சிறந்த கவிச் செல்வங்கள் இருந்தன. புதுமைப் பித்தனுக்கு முன் மிகச் சிறந்த வசனச் செல்வங்கள் இருந்தன என்று சொல்ல முடியாது. புதுமைப்பித்தனின் இலக்கியம் தமிழ் நாட்டு வசன இலக்கியத்தின் சொத்து. அவர் வசன இலக்கிய மன்னர்.'

புதுமைப்பித்தனுக்குப் பிறகு, சிறுகதைக் கலையில் குறிப்பிடத் தகுந்த சாதனைகள் புரிந்துள்ள படைப்பாளிகளில் ஒருவரான கு. அழகிரிசாமி இவ்வாறு எழுதியிருக்கிறார்.

படைப்பாளியும் இலக்கிய விமர்சகருமான ரகுநாதன் இப்படி எழுதுகிறார்-

'புதுமைப்பித்தன் தமிழ்ச் சிறுகதை இலக்கிய வளர்ச்சியிலும் வரலாற்றிலும் ஒரு மைல்கல்; ஒரு திருப்புமுனை; ஒரு சகாப்தம். அதில் சந்தேகமில்லை. எவ்வாறு பாரதி தமிழ்க் கவிதை உலகில் நடை, வடிவம், உள்ளடக்கம் முதலியவற்றில் புதியன புகுத்தி இருபதாம் நூற்றாண்டின் தமிழ்க் கவிதைக்குத் தலைமகனாக விளங்கினாரோ, அதேபோல் தமிழ்ச் சிறுகதை இலக்கியத்திற்கு சிறப்புமிக்க தலை மகனாக விளங்கியவர் புதுமைப்பித்தன்.'

புதுமைப்பித்தனின் எழுத்துக்கள், அவர் வாழ்நாளில் போதிய கவனிப்பையும், உரிய வரவேற்பையும், போற்றுதலையும் பெற்ற தில்லை. எனினும், அவற்றின் சிறப்புத் தன்மையை உணர்ந்து ரசித்தவர் களும் இல்லாமல் போகவில்லை.

அந்நாட்களில், எழுத்துலகில் வளர்ச்சிப் பாதையில் அடி எடுத்து வைத்திருந்த இளைய எழுத்தாளர்கள் புதுமைப்பித்தனின் எழுத்துக் களால் ஈர்க்கப்பட்டு அவற்றின் பாதிப்புக்கு ஆளானார்கள்.

1940களில் எழுதத் தொடங்கிய கு. அழகிரிசாமி, தொ.மு.சி. ரகுநாதன், வல்லிக்கண்ணன், 1950களில் எழுத ஆரம்பித்த ஜெயகாந்தன் ஆகியோர் இப்படிப்பட்டவர்களேயாவர். மற்றும் பல

எழுத்தாளர்களும் அவருடைய படைப்புகளினால் தாக்கம் பெற்று, புதுமைப்பித்தனை தங்கள் ஆதர்ச எழுத்தாளராகக் கொண்டுள்ளனர்.

புதுமைப்பித்தன் வாழ்ந்தது குறைந்த காலமேயாகும். 1906ல் பிறந்து 1948ல் மறைந்துவிட்ட அவர் எழுத்துத்துறையில் ஈடுபட்டிருந்ததோ மிகவும் குறுகிய காலம்தான். 1933 முதல் அவர் கதைகள் எழுதலானார். 1946க்குப் பிறகு அவர் சிறுகதை எதுவும் எழுதவில்லை. அவருடைய கவனம், உழைப்பு, காலம் எல்லாம் சினிமாத் துறையிலேயே ஈடுபடுத்தப்பட்டிருந்தன. ஆகவே, இலக்கியப் படைப்புக்காக அவர் தன்னை அர்ப்பணித்துக் கொண்டது சுமார் பன்னிரெண்டு வருடங்கள்தான்.

இக்குறுகிய காலகட்டத்தில் அவர் புரிந்துள்ள சாதனைகள் அவருடைய மேதைமையை நன்கு எடுத்துக்காட்டுகின்றன. அவரது அபாரத் தன்னம்பிக்கையும், உணர்ச்சித் தீவிரமும், சமரிடுவதற்குத் தயங்காத போர்க் குணமும், புதுமைகள் செய்ய வேண்டும் என்ற வேகமும், தனது எழுத்தின்மீது அவர் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றுதலும் இச்சாதனைகளுக்கு அவருக்குத் துணைநின்றன என்று சொல்ல வேண்டும்.

கால ஓட்டத்தில் புதுமைப்பித்தன் எழுத்துக்கள் கவனிப்பும் போற்றுதலும் பெற்று வந்துள்ளன. பல்கலைக் கழகங்களில் அவருடைய மேதைமையை நன்கு எடுத்துக்காட்டுகின்றன. அவரது அபாரத் தன்னம்பிக்கையும், உணர்ச்சித் தீவிரமும், சமரிடுதற்குத் தயங்காத போர்க் குணமும், புதுமைகள் செய்ய வேண்டும் என்ற வேகமும், தனது எழுத்தின் மீது அவர் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றுதலும் இச்சாதனைகளுக்கு அவருக்குத் துணைநின்றன என்று சொல்ல வேண்டும்.

கால ஓட்டத்தில் புதுமைப்பித்தன் எழுத்துக்கள் கவனிப்பும் போற்றுதலும் பெற்று வந்துள்ளன. பல்கலைக் கழகங்களில் அவருடைய படைப்புக்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. அவர் கதைகள் பற்றிய ஆய்வு நூல்களும் விரிவான விமர்சனக் கட்டுரைகளும் வெளிவரலாயின. புதுமைப்பித்தன், கதைகள் இப்போதும் சிரத்தையோடு பல்வேறு பார்வைகளில் விமர்சிக்கப் படுகின்றன.

தற்காலத்தில், சமுதாய யதார்த்தங்களைக் கதைக்கு உரிய பொருளாகக் கொண்டு இலக்கியம் படைக்க விரும்புகிற எழுத்தாளர் களுக்குப் புதுமைப்பித்தன் சிறுகதைகள் முன் உதாரணங்களாக விளங்குகின்றன. இனி வருங்காலத்திலும் அநேக எழுத்தாளர்களுக்குப் புதுமைப்பித்தன் முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் விளங்குவார் என்று உறுதியாகக் கூறலாம்.

# புதுமைப்பித்தன் படைப்புக்கள்

*(புத்தகங்களாக வந்தவை)*

*சிறுகதை*

*புதுமைப்பித்தன் கதைகள்*
*ஆறுகதைகள்*
*நாசகாரக் கும்பல்*
*பக்த குசேலா*
*ஆண்மை*
*காஞ்சனை*
*சிற்றன்னை*

*மொழிபெயர்ப்பு*

*உலகத்துச் சிறுகதைகள்*
*பளிங்குச் சிலை (கதைகள்)*
*தெய்வம் கொடுத்த வரம்*
*மணியோசை*
*உலக அரங்கு (நாடகங்கள்)*
*பிரேத மனிதன் (நாவல்)*
*பலிபீடம் (நாவல்: அலெக்சாண்டர் குப்ரின் எழுதிய 'யாமா தி பிட்' நாவலின் முதல் பாகம் மட்டும்)*

*கட்டுரைகள்*

*புதுமைப்பித்தன் கட்டுரைகள்*
*அதிகாரம் யாருக்கு?*
*நமது இலக்கியம்*

*கவிதை*

*புதுமைப்பித்தன் கவிதைகள்*

*வரலாறு*

*பாசிஸ்ட் ஜடாமுனி (முசோலினி வாழ்க்கை வரலாறு)*
*கப்சிப் தர்பார் (ஹிட்லர் வாழ்க்கை வரலாறு)*

## புதுமைப்பித்தன் பற்றிய வெளியீடுகள்

புதுமைப்பித்தன் வரலாறு-ரகுநாதன்
வேடிக்கை மனிதர் புதுமைப்பித்தன்-முல்லை முத்தையா
புதுமைப்பித்தன்-முல்லை முத்தையா
புதுமைப்பித்தன்-மு. பொதியவெற்பன்
புதுமைப்பித்தன் சிறுகதைக் கலை-டாக்டர் தி. முருகரத்தனம்

மற்றும்

'புதுமைப்பித்தன் கதைகள்' (62 பக்கங்கள் கட்டுரை-'தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள்' என்ற ஆய்வு நூல்)- டாக்டர் இரா. தண்டாயுதம்

'புதுமைப்பித்தன் சிறுகதைகள்' (50 பக்கங்கள் கட்டுரை-'விடுதலைக்குப்பின் தமிழ்ச் சிறுகதைகள்' ஆய்வு நூல்)- டாக்டர் எம். இராமலிங்கம் (எழில் முதல்வன்)

'புதுமைப்பித்தன் கதைக் கரு' (50 பக்கங்கள் கட்டுரை-'தமிழில் இலக்கிய விமர்சனம்' ஆய்வு நூல்)-சி. சு. செல்லப்பா.

புதுமைப்பித்தன் பற்றிய தனிக் கட்டுரைகள்-'சுந்தர ராமசாமி கட்டுரைகள்' என்ற நூலில்.

'மூன்று பார்வைகள்'-அசோகமித்திரன், என்.ஆர். தாசன் எழுதிய தமிழ்ச் சிறுகதைகள் பற்றிய ஆய்வு நூலில்.

தமிழ்ச் சிறுகதையின் தந்தை என்ற பெருமைக்கு உரிய புதுமைப்பித்தன் (சொ. விருத்தாசலம்: 1906-1948) சிறுகதைக்கு இலக்கியத் தகுதி பெற்றுத் தந்த கதைகள் பலவற்றை எழுதியுள்ளார். புரட்சியும் புதுமையும் நிறைந்த இவரது சிறுகதைகளில் புதுப்புது உத்திகளும், மொழிக்கு வளம் சேர்க்கும் நடை நயமும் கலந்துள்ளன. வசதி மிகுந்த, ஆயினும் மனிதாபிமானம் இல்லாத, பெரிய மனிதர்களை எள்ளி நகையாடும் போக்கு, ஏழை எளியவர்களுக்கு இரக்கப்படும் உள்ளம், தன்னம்பிக்கை, புரட்சியை நாடும் மனப்பான்மை ஆகியவற்றை இவரது கதைகளில் காணலாம்.

வழக்கில் உள்ள சொற்களைக் கொண்டு தமிழ் நடைக்கு புது வேகமும் தனி அழகும் சேர்த்தவர் புதுமைப் பித்தன். கிண்டலும் நையாண்டியும் நிறைந்த இவரது கதைகள், சோகத்தை அடி நாதமாக்க் கொண்டு, வாழ்க்கையின் உண்மைகளை உள்ளது உள்ளபடி சுட்டிக் காட்டும் சொற் சித்திரங்கள் ஆகும்.

இந் நூலாசிரியர் திரு. வல்லிக்கண்ணன் சிறுகதைகள், நாவல்கள் பல எழுதியிருப்பதோடு, நல்ல இலக்கியத் திறனாய்வாளர் என்ற பெயரும் பெற்றிருப்பவர். இவரது 'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற ஆய்வு நூல் 1978-ஆம் ஆண்டு சாகித்திய அக்காதெமி விருது பெற்றுள்ளது.

Pudumaipithan (Tamil) (Reprint)

ISBN 81-7201-744-8 Rs. 15.